அறைவு 03 இயம் 01 August 02-08 , 2014

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு

MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka

பக்கங்கள் : 16 விலை : 30.00 பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்




மூதூரில் கொல்லப்பட்ட தன்னார்வத் தொண்டர்களின் நினைவு நாள்

CCTV Installation & Maintenance

PHOTONTECH


175, Main Street
Trincomalee

075 6602486

## முஸ்லிம் மக்களின் நிலம் பறிபோகின்றதா ???

# ஆயிரம் ஏக்கர் நிலம் சீனாவிற்கு!!!

ஆஸி. ஊடகம் செய்தி




திருகோணமலையில் சுமார் ஆயிரத்து இருநூறு ஏக்கர் நிலப்பரப்பினை சீனாவிற்கு நீண்டகாலக்குத்தகைக்கு இலங்கை அரசு வழங்கியிருப்பதாக ஆஸ்திரேலிய ஊடகமான கிறீன்லெவ்ட் வீக்லி செய்தி வெளியிட்டுள்ளது.

இந்நிலப்பரப்பானது "பாதுகாப்பு அபிவிருத்தி" க்காகவழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்குச் அச்செய்தியில் இப்பாதுகாப்பு அபிவிருத்தியில் இலங்கையும் கூட்டிணைக்கப்பட்டுள்ளதா? என்பது பற்றித் தெரிவிக்கப்படவில்லை. மேலும் அச்செய்தியில் நீண்டகாலக்குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள காணிகளில் சுமார் 450 குடும்பங்கள் வசிப்பதாகவும் அவற்றுள் பெரும்பான்மையாக தமிழ் பேசும் முஸ்லிம்களின்..

13

## சிறுவரைப் பலிகொண்ட 60 அடி கற்குழி



கடந்த ஞாயிற்றுக்கிழமை சிறுவர்கள் இருவரைப் பலிகொண்ட கற்குழி நீர்ப்பரப்பானது சுமார் 60 அடி ஆழம் கொண்டது என மூதூர் தங்கபுரம் மக்கள் தெரிவித்தனர்.

நிராடச் சென்ற வேளையில் 10 மற்றும் 13 வயதான சிறுவர்கள் இருவர் நீரில் மூழ்கி மரணமான துயரம் தங்கபுரம் கிராமத்தில்......

13



## 5 மாணவர் படுகொலை அறிக்கையை வெளியிடுங்கள்



திருகோணமலைக் கடற்கரையில் வைத்துக் கொலை செய்யபட்பட் ஐந்து மாணவர்கள் தொடர்பாக இன்று வரை வெளிப்படுத்தப்படாத "உடகம" அறிக்கையினை அரசாங்கம் வெளியிட வேண்டும் என பொதுவுடமைக் கட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது.

இக்கட்சியின் செயலாளர் நாயகம் உடகம விசாரணைக்குழுவால்......




## அதிகரிக்கும் கடன்களால் ஆபத்தில் பொருளாதாரம்

ஆசியாவில் மிக வேகமாக வளர்ந்து வரும் பொருளாதாரங்களில் ஒன்றான இலங்கையின் பொருளாதாரத்தினை ஆபத்துக்குள்ளாக்கும் வகையில் கடன்களின் வளர்ச்சி அமைந்திருப்பதாக சர்வதேச நாணய நிதியம் எச்சரித்துள்ளது.

கடந்த வருடத்தில் 39.7 பில்லியன் அமெரிக்க டொலராக இருந்த கடன்கள் இன்று 42.4 பில்லியன்களாக இருப்பதாக ஐ.எம்.எவ் தெரிவித்துள்ளது.

## திருமலையில் அலுவலகம் திறந்தது ஜே.வி.பி

திருமலை- அக்போபுர பகுதியில் அரசியல் அலுவலகத்தை ஜே.வி.பி திறந்துள்ளது. கடந்த 30ம் திகதி திறந்து வைக்கப்பட்ட இவ் அலுவலகத்தை ஜே.வி.பியின் மத்திய குழு உறுப்பினரும் அனைத்து விவசாயிகள் சங்கச் சம்மேளன பொதுச் செயலாளருமான ரி.பி.சரத் திறந்து வைத்தார்




## த.தே.கூவின் அலுவலகம் எங்கே உள்ளது?????

AFTER ADVANCED LEVEL....

Join Full time Courses

@

VEAL BUSINESS COLLEGE

No.159A, Sea View Road, Trincomalee - 026 222 76 22 / 0777 555 738

aat SRI LANKA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
malaimurasu@hotmail.com · 075-4252042

# சர்வதேசம் என்பது???

மூதூரில் கொல்லப்பட்ட தன்னார்வத் தொண்டர்களின் நினைவு நாள் எதிர்வரும் 4ம் திகதி நினைவு கூறப்படவுள்ளது.

2006ம் ஆண்டு 08ம் மாதம் மூதூரை விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டில் சில நாட்களாக வைத்திருந்த பின்னர் பின்வாங்கிச் சென்றபோது அவர்களுடன் பெரும்பாலான தமிழ் மக்களும் மூதூரை விட்டு வெளியேறினர்.

ஏனெனில் முன்னேறி வரும் படையணிகள் நிச்சயமாகத் தம்முடன் வாய்களால் பேச மாட்டார்கள் என்பதைப் புரிந்து கொண்ட அம் மக்களுடன் பின்வாங்கிச் செல்ல அக்ஸன் சென்றர் லா பெய்ம் என்ற பிரான்சியத் தன்னார்வத் தொண்டு நிறுவன மூதூர் பிராந்திய ஊழியர்கள் விரும்பவில்லை. அவர்களின் எண்ணமெல்லாம், நடைபெற்ற போருடன் எவ்விதத் தொடர்பையும் கொண்டிராத, மனித நேயப் பணிக்காக நிலைப் படுத்தப்பட்டிருந்த தம்மை எவரும் கொல்லப் போவதில்லை என்ற நம்பிக்கைச் சக்கரத்திலேயே சுழன்று கொண்டிருந்தது. அந் நம்பிக்கையை மேலும் வலுப்படுத்தும் முகமாக திருகோணமலை நகரில் அமைந்திருந்த அந் நிறுவனத்தின் பிரதான அலுவத்திலிருந்தும் செய்தி கொடுக்கப் பட்டிருந்தது.

"நீங்கள் மூதூரில் இருப்பதை அனைத்துத் தரப்பினருக்கும் அறிவித்திருக்கின்றோம்" என்ற அச் செய்தி அப்பணியாளர்களை அசைய விடாமல் கட்டிப் போட்டிருந்தது........


அவர்கள் தன்னார்வத் தொண்டர்கள் என்ற அடையாளத்தைக் கொண்டிருந்தாலும் அவர்கள் தமிழர்கள் என்பதை ஏன்? அக்கணத்தில் மறந்தார்கள் என்பதற்கு விடையளிக்க இன்று அவர்கள் எவரும் எம்முடன் இல்லை.... அக் கேள்விக்கு மட்டுமல்ல... அதற்கும் மேலாகப் பல கேள்விகளுக்கு பதிலின்றி மூதூரின் காற்றில் அக் கேள்விகள் அலைந்து கொண்டேயிருக்கின்றன...

கொலை செய்யப்பட்டவர்களின் உடலங்களின் மீது நடாத்தப்பட்ட பிரேத பரிசோதனைகள் அவர்களிற் பெரும்பாலானர்வர்கள் குப்புறப் படுக்கவிடப்பட்டு மிக அருகில் இருந்தே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர் என்பதையும் ஏனையோரும் மிக அருகில் இருந்தே சுட்டுக் கொல்லப்பட்டனர் என்பதையும் உலகிற்குப் பறைசாற்றின....

அதனையடுத்து அரசினால் தெரிவிக்கப்பட்டவாறு சண்டைக்கிடையில் அவர்கள் மாட்டுப்பட்டுக் கொண்டதால் கொல்லப்பட்டார்கள் என்ற கருத்து வலுவிழந்தது. அத்துடன் சந்தேகமிருப்பின் கைது செய்து விசாரணைக்குட்படுத்தும் வாய்ப்பிருந்ததும், அவர்கள் ஆயுதம் அற்றிருந்ததும், வெள்ளிடைமலையாகத் தெரியத்தொடங்கிய போது சர்வதேசம் இக்கொலையை சட்டத்திற்குப் புறம்பான கொலைகள் என வரையறுத்துக் குரல் கொடுத்தது...... கொடுத்துக்கொண்டு இருக்கின்றது......????? ஆனால் எதுவும் நடைபெறுவதாக இல்லை.... சர்வதேசம் என்பது இவ்வளவு தானோ?????

# மாமாங்கேஸ்வரத்தில் ஆடி அமாவாசை

கிழக்கிலங்கையின் வரலாற்று சிறப்புமிக்க மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் ஆடி அமாவாசை தீர்த்தோற்சவம் இலட்சக்கணக்கனோர் புடை சூழ கோலாகலமான முறையில் நடைபெற்றது.



இந்துக்களின் தாய் தந்தையை இழந்தவர்கள் மேற்கொள்ளும் பிதிர்க்கடன்களை தீர்க்கும் மிக முக்கிய தீர்த்த உற்சவமான ஆடி அமாவாசை தீர்த்தோற்சவம் ஆகம்.

ஆடி அமாவாசை தீர்த்த உற்சவ- த்தின் மிக முக்கிய பதியான மட்டக்களப்பு அமிர்தகழி ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் தீர்த்த கேணியில் சிறப்பாக நடைபெற்றது.

# 5 ஏக்கரில் 438வது காவல்நிலையம்

(கதிரவன்)



438 வது காவல்துறை நிலையம் நிலாவெளியில் திறந்து வைக்கப் பட்டுள்ளது.

புல்மோட்டை வீதியில் 6வது மைல் கல் பிரதேசத்தில் 5 ஏக்கர் விஸ்தீரணத்தில் இந்நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. கடந்த திங்கட்கிழமை பொருளாதார பிரதி அமைச்சரி சுசந்த புஞ்சிநிலமே இதனை திறந்து வைத்தார்.

# இந்துக்கல்லூரியில் இலங்கை வங்கி

(கதிரவன்)

இலங்கை வங்கி திருகோணமலை நகர கிளையினால் சேமிப்பு அலகு ஒன்று ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் இன்று வியாழக்கிழமை 31.07.2014 ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இலங்கை வங்கியின் 75வது வருடத்தை குறிக்கும் முகமாக இவ் அலகு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை வலயக் கல்வி பணிப்பாளர் ந.விஜேந்திரன், இலங்கை வங்கியின் கிழக்கு மாகாண உதவி பொது முகாமையாளர் கே.பி.அனந்தநடேசன் ஆகியோர் இணைந்து இதனை ஆரம்பித்து வைத்துள்ளனர்.



# மோதிய உழவு எந்திரம் மாயமாய் மறைந்தது

தெஹிவத்தைக் கல்லாறு வீதியால் காவல்கடமையை முடித்துக்கொண்டு இரவு வீடு திரும்பிக் கொண்டிருந்தவரை மோதிய உழவு எந்திரம் மாயாமாய் மறைந்துள்ளது.

இடதுகரை 3 வழியில் நடைபெற்ற இவ்விபத்தில் படுகாணமடைந்த அரசரட்ணம் (35) என்பவர் தற்போது திருமலைப் பொதுவைத்தியசாலையில் சிகிச்சையில் உள்ளார். இவரது மனைவி சவூதியில் இருப்பதாகவும் இரண்டு பிள்ளைகள் இருப்பதாகவும் தெரிகின்றது.

# கூலிக்குக் காவலுக்குச் சென்றவர் யானைக்குப் பலி

கங்குவேலி ஒட்டுவயல் பிரதேசத்தில் வயற்காவலுக்குச் சென்ற கூலியாளைத் தனியன் யானையொன்று தாக்கிக் கொன்றுள்ளது.

வரட்சியை அடுத்து வயற்புரத்திற்குள் புகுந்த இந்த யானையைக் கண்டு ஏனை வயற்காவலர்கள் ஓட்டமெடுத்துள்ளனர். எனினும் 62 வயதான மூன்று பிள்ளைகளின் தந்தை அ.யோகராசா என்பவரால் ஓட முடியாது போய்விட்டது.

யானை அவ்விடத்தை விட்டு நகர்ந்ததும் அங்கு சென்ற ஏனைய காவலர்கள் உயிரற்றஅவரின் உடலத்தைக் கண்டு பிடித்துள்ளனர்.

# ஹெரோயினுடன் மூவர் கைது

(ரஹீம்)

4ம் கட்டை குளிர்கட்டி உற்பத்தி நிலையத்திற்கு அருகில் மூவர் ஹெரோயின் போதைப் பொருளுடன் கைதாகி உள்ளனர்.

அதே பிரதேசத்தைச் சேர்ந்த இருவர் 4.4 மில்லிகிராம் போதைப்பொருளுடனும் திருஞானசம்பந்தர் வீதியைச் சேர்ந்த ஒருவர் 2 மில்லிகிராம் போதைப்பொருளுடனும் கைது செய்யப்பட்டுள்ளதாக உப்புவெளி காவல்துறைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# கொட்டியாரக் குடாவில் டொல்பின்கள்

(தீபா)

அந்தாட்டிக் பகுதியில் நிலவும் காலநிலை மாற்றத்திற்கேற்ப தமது வாழ்வை செழுமையாக்கிக் கொள்ள கொட்டியாரக் குடாவை நோக்கி டொல்பின்கள் படையெடுத்துள்ளன.

பெருமளவு டொல்பின்கள் கிழக்குக் கடற்பரப்பில் தமது பாய்ச்சல்களைக் காட்டியதை அடுத்து கடந்த 29ம் திகதி மாவட்டத்தின் திணைக்களத் தலைவர்கள் சிலரைக் கடற்படையினர் கொட்டியாரக் குடாவிற்கு அழைத்துச் சென்று டொல்பின்களையும் திமிங்கலங்கள் சிலவற்றையும் காட்டிவந்துள்ளனர்.

# சித்திவிநாயகர் வித்தியாலயத்தில் நால்வர் குருபூசை

பாலம்போட்டாறு சித்திவினாயகர் வித்தியாலயத்தில் நால்வர் குருபூசை மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டுள்ளது.

கிராமத்திலுள்ள நாராயணன் கோவிலில் இருந்து சமயகுரவர் நால்வரையும் மாணவர்கள் பல்லக்கில் சுமந்து வந்த போது வழிநெடுகிலும் கிராமக்கள் நிறைகுட, ஆராத்தி, அர்ச்சனைகளுடன் பெரும் வரவேற்பை அளித்துள்ளனர்.

விழாவிலும் ஊர்மக்களும் அயல் பாடசாலை அதிபர்களும் கலந்து சிறப்பித்திருந்தனர்.





அதிபர் வி.கமலநாதன் தலைமையில் பிரதம விருந்தினராக உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. விமலரஞ்சன, சிறப்பு விருந்தினராக திரு மதியழகன் மற்றும் பிரதேசக் கலாசார உத்தியோகத்தர் வி.குணபாலா ஆகியோர் கலந்து கொண்டனர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"வழமையிலேயே எல்லாவற்றிலும் கோட்டை விடும் தமிழரின் ராஜதந்திரம் சுவாமிகளின் கனதியான பாத்திரத்தை அளவிடுவதிலும் கோட்டை விட்டுள்ளதாகவே கருதவேண்டி உள்ளது"

# சுப்ரமணிய சுவாமியிடமிருந்து கற்றுக்கொள்ள மறந்தவை

**வாராந்த அலசல்** — செய்திகள் பார்வைகள் எண்ணங்கள்

அண்மையில் கொழும்புக்கு விஜயம் செய்திருந்த இந்தியாவின் மூத்த ராஜதந்திரியும் முன்னாள் மத்திய அமைச்சருமான திரு.சுப்பிரமணிய சுவாமி அவர்கள் 'இலங்கையில் இனப்பிரச்சினை ஒன்றே கிடையாது' என்று குறிப்பிட்டிருந்தார்.

இதற்கு பதில் தந்த தமிழ் தேசிய கூட்டமைப்பானது 'அவர் ஒரு அரசியல் கோமாளி. இந்தியாவில் செல்வாக்கு இழந்த ஒருவர்.அவரின் கருத்துகளுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டியதில்லை' என்று கூறியிருந்தது.

உண்மையில் தமிழர் தேசிய கூட்டமைப்பு கூறியது சரியா?. யார் இந்த சுப்பிரமணிய சுவாமி?.தமிழர் அரசியலில் அவரின் பங்கு என்ன? என்பதை ஆராய்வதே இந்த பத்தியின் நோக்கம்.

சுப்பிரமணிய சுவாமி அவர்கள் ஒக்ஸ்போட் (oxford) பல்கலையில் பயின்றவர். அந்த பல்கலையின் பொருளியல் பாடத்துக்கான வருகை தருவிரிவுரையாளர் . சிறந்த கல்விமான். இந்தியாவின் கொள்கை வகுப்புகளில் தாக்கம் செலுத்தக்கூடிய ஒருவர். ஒரு தடவை கொழும்புக்கு எதிராக ஐ.நா மனித உரிமை பேரவையில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை நீர்த்துப் போக செய்வதற்காய் கொழும்பின் செய்தியை இந்தியாவின் போர்வையில் அமெரிக்க ராஜதந்திர மட்டத்துக்கு கொண்டு சென்று தீர்மானத்தை நீர்த்துப் போக செய்தலில் வெற்றியும் கண்டவர். வழமையிலே எல்லா அரசிலும் இவரின் கொடி பறக்கும். இந்த அரசில் கொஞ்சம் அதிகமாகவே. ஏனெனில் அவர் ஆளும் பா.ஜ.கா வின் கொள்கை வகுப்பு பிரிவில் முக்கிய புள்ளி. இந்தியா, அமேரிக்கா போன்ற நாடுகளில் கொள்கை வகுப்பாளர்களை தாண்டி அரசியல்வாதிகளால் எந்த தீர்மானங்களையும் எடுக்க முடியாது. நாளை இவரின் கருத்துகள் இந்திய மத்திய அரசின் கொள்கைகளாயும் மாறக்கூடும். மாறக்கூடும் என்ன மாறும்.ஏனெனில் சுஸ்மா, சுப்பிரமணிய சுவாமி கூட்டணி என்பது வெறுமனே கூட்டமைப்பு கூறுவது போல கோமாளி கூட்டணி அல்ல. அது கொழும்புக்கு மிக சாதமானதே...... சாடிக்கேற்ற மூடி போல.

வழமையிலேயே எல்லாவற்றிலும் கோட்டை விடும் தமிழரின் ராஜதந்திரம் சுவாமிகளின் கனதியான பாத்திரத்தை அளவிடுவதிலும் கோட்டை விட்டுள்ளதாகவே கருதவேண்டி உள்ளது.

இந்திய மத்திய அரசின் இலங்கை தொடர்பான கொள்கை எந்த பாதையில் செல்ல போகிறது என்பது தெளிவான செய்திகளின் மூலம் எமக்கு உணர்த்தப்பட்ட போதிலும் த.தே.கூ இன்னும் மோடி பற்றி தாலாட்டு பாடி தமிழரை தூங்க வைக்கவே முயல்கிறது. இன்னும் எவ்வளவு நாளைக்குதான் சரியான வியூகம் அமைக்காது தூங்க வைக்கப் போகின்றார்களோ? தெரியாது.

உண்மையிலேயே த.தே.கூ வெறுமனே அரசியல்வாதிகளால் நிரப்பப்பட்ட ஒரு அமைப்பேயாகும். அங்கு கொள்கை வகுப்பு பிரிவு என்பதே இல்லை.

அதன் முகங்களாக பாராளுமன்ற, மாகாணசபை, பிரதேசசபை உறுப்பினர்களே காணப்படுகின்றனர். அடிமட்ட தொண்டர் பலம் என்பது இல்லவே இல்லை. மாறாக இலங்கையின் ஆளும் கட்சியான சுதந்திரக்கட்சி மற்றும் ஐக்கிய தேசிய கட்சி என்பவற்றுக்கு அடிமட்ட தொண்டர் பலம் அதிகம். இதைவிட வெகுஜன அமைப்புக்கள், தொழிற்சங்கங்கள் மூலமும் மக்களிடம் நெருங்கிய தொடர்பினை பேணி வருகின்றன. இந்தியாவின் பா.ஜ .க வினை பொறுத்தவரை நாடு முழுவதும் பறந்து காணப்படுகின்ற சங்க பரிவார் அமைப்புகளே அதன் முதுகெலும்பாகும். இதன் மூலமாகவே அது தேர்தலில் அறுதி பெரும்பான்மையை பெற்று கொண்டது.

இப்போது நமது விடயத்துக்கு வருவோம் தமிழ் கூட்டமைப்பானது கொள்கை வகுப்பு பிரிவு ஒன்றை கொண்டுள்ளதா. அது வெகுஜன அமைப்புகளை பேணி வருகிறதா. அரசியல் நிலை பற்றி மக்களை விளிப்பூட்டுகின்றதா. தமிழ் புத்திஜீவிகளுடன் உறவினைப் பேணுகிறதா. தேர்தலின் பின்னர் மக்கள் சந்திப்புகளை மேற்கொள்கிறதா, ஆகக்குறைந்தது மாவட்ட மட்டங்களில் அலுவலகங்களை பேணி வருகின்றதா? போன்ற கேள்விகளுக்கு எல்லாம் கிடைக்கும் கவலையான பதில் இல்லை என்பதாயே உள்ளது. இன்றைய அரசியல் சூனிய வெளியில் த.தே.கூ இன் பாத்திரமானது பாரதத்தில் தேரோட்டியான கிருஸ்னரின் பாத்திரத்துக்கு ஒப்பானதே. ஆகவே தூங்கி கிடந்து பொழுதை வீணே கழிக்காமல் ராஜதந்திரமாக எமது தேசிய பிரச்சினையை கையாள வேண்டியுள்ளது. கூட்டமைப்பு விழித்துக் கொள்ளுமா?. கொழும்பிடமிருந்தும், சுப்பிரமணிய சுவாமிகளிடமிருந்தும் கற்று கொள்ள வேண்டிய பாடங்கள் தமிழர் தரப்புக்கு நிறையவே உண்டு. இன்றைய தமிழரின் நிலையை கவிதை ஒன்றினால் கூறியபடி இந்த கட்டுரை முடிகிறது.

எப்போதும் யாராவது தூக்கி விடவேண்டுமென்ற எதிர்பார்ப்புடன்

"நீ வீழ்ந்தே கிடக்கிறாய்
அருகே தடி ஒன்று கிடப்பதை மறந்து."

திருஞானசம்பந்தன் லலிதகோபன்

# 2013ல் மேலும் பல மதுவரி அனுமதிகள்

அரசாங்கம் "மஹிந்த சிந்தனை" திட்டத்தின் ஊடாக மதுப்பாவனையை ஒழித்துக் கட்டுவதாக கூறிக்கொண்டிருப்பது மதுவரித் திணைக்களத்தின் செயற்பாட்டை எவ்விதத்திலும் கட்டுப்பாட்டை கொண்டுவரவில்லை.

2013ம் ஆண்டில் 62 புதிய மதுவரி அனுமதிகளை மதுவரித் திணைக்களம் வழங்கியுள்ளது. 2012ல் 57 அனுமதிகளே வழங்கப்பட்டிருந்தன.

மஹிந்த சிந்தனை அமுலாகிய காலங்களான 2005 தொடக்கம் 2013 வரை சுமார் 500 புதிய மதுவரி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. 2013ல் மதுவரியாக ரூபா 66,008 மில்லியன்களை மதுவரித்திணைக்களம் வருமானமாக ஈட்டியுள்ளது.

## கிண்ணியா பண்ணையாளருக்கு மாகாணசபை கடன்

கிண்ணியா பண்ணையாளர்களுக்கு கிழக்கு மாகாணசபையின் விவசாய, கால்நடை அபிவிருத்தி அமைச்சு கடனுதவிகளை வழங்கியுள்ளது.

கிண்ணியாவில் தேர்ந்தெடுக்கப்பட்ட இருபது பண்ணையாளர்களுக்கே கடன் உதவிகளை கிழக்கு மாகாண கால்நடை அமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் வழங்கியிருந்தார்.

## 50000 தொன் அரிசி இறக்குமதிக்கு அரசு முஸ்தீபு.....

கடும் வரட்சியை அடுத்து எதிர்காலத்தில் நிகழ எதிர்பார்க்கப்படும் அரிசித் தட்டுப்பாட்டை நீக்கும் முகமாக 50,000 மெட்ரிக் தொன் அரிசியை இறக்குமதி செய்து இருப்பில் வைக்க அமைச்சரவையின் அனுமதி கோரப்பட்டுள்ளது.

சிறு மற்றும் பெரும் போகங்களில் அரிசி உற்பத்தியில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியை அடுத்தே இந்தியாவில் இருந்து அரிசியை இறக்குமதி செய்யும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு இறக்குமதி செய்யப்படுவதை ஊக்குவிக்கவே இறக்குமதி வரி ரூபா 5 ற்கு குறைக்கப்பட்டது.

# மக்களைப் பாதுகாக்கும் கடப்பாட்டை இலங்கை அரசு தவற விட்டுள்ளது

## -ஆசிய மனித உரிமைப் பணியகம்-

Asian Human Rights Commission

இலங்கை அரசாங்கம் பொதுமக்களை பாதுகாப்பது என்ற தனது முக்கிய கடமையை நிறைவேற்ற தவறிவிட்டதாக ஆசிய மனித உரிமை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஐந்து வயது சிறுவன் கல்கமுவவில் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையிலேயே இது குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கம் பொதுமக்களை பாதுகாப்பது என்ற தனது முக்கிய கடமையை நிறைவேற்ற தவறிவிட்டது என்பதை இந்த சம்பவம் புலப்படுத்துகிறது.

பொதுமக்களை பாதுகாக்க வேண்டிய முக்கிய கடப்பாடுடைய காவல் திணைக்களத்தை அரசாங்கமே பலவீனப்படுத்தியதும் இதற்கு ஒரு காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சு பொலிஸாரின் செயற்பாடுகளில் தலையீடு செய்வதும் இதற்கு ஒரு காரணம். பொலிஸார் அடிப்படைக்கட்டமைப்பிற்குள் பணிபுரிவதற்கான தமது திறமையை இழந்தவிட்டனர் எனவும் ஆசிய மனித உரிமை ஆணைக்குழு குற்றம்சாட்டியுள்ளது.

# "ஓமானில் கருக்கலைப்பு" - நடவடிக்கைக்கு உத்தரவிட்ட தூதுவரைத் திருப்பியழைத்தது இலங்கை

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக தொழில் ஊழியர்களின் நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய்வை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்ட ஓமானின் தூதுவரை இலங்கை மீளப் பெற்றுக்கொண்டுள்ளது.

ஓமானில் பணியாற்றும் இலங்கைப் பணிப்பெண்கள் கருக்கலைப்பில் ஈடுபடும் விடயத்துடன் தொழில் அலுவலர்களுக்கும் தொடர்புள்ளதாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

ஓமான் தூதரகத்தில் தஞ்சம் கோரிய பணிப்பெண்ணொருவரை கருக்கலைப்பிற்கு உட்படுமாறு தொழில் அலுவலர் கோரியதாக தகவல் வெளியானதைத் தொடர்ந்தே இக் குற்றச்சாட்டு வெளிக்கிளம்பியது.

ஓமானில் உள்ள தொழில் தருனர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கோண்டே இச் செயற்பாடு நடைபெற்றதாக பெரிட விரும்பாத தகவல் மூலமொன்று தெரிவித்துள்ளது.

இவ்விடயம் வெளியாகியதை அடுத்து விசாரணைக்கு உத்தரவிட்ட தூதரையே உடனடியாக இலங்கை மீள அழைத்துள்ளது. (டைம்ஸ்)

# போதைப்பொருள் கைப்பற்றப்பட்ட பின்.... என்ன நடக்கும்

ஹெரோயின் கைப்பற்றப்பட்ட பின்னர் என்ன நடக்கும் என்பதை காவல்துறை போதைப்பொருள் குற்றத்தடுப்பு சிரேட்ட அதிகாரியொருவர் டைம்ஸ் பத்திரிகைக்குத் தெரிவித்துள்ளார்.

அவரின் கூற்றுப்படி பல்வேறு அமைப்புக்களால் கைப்பற்றப்படும் ஹெரோயின் போதைப் பொருள் தடுப்பு ஆணையகத்திடம் கையளிக்கப்படும். அவ்வாறு கையளிக்கப்படும் ஹெரோயின் அரச பகுப்பாய்வாளருக்கு அனுப்பி வைக்கப்படும். அவர் தனக்கு அனுப்பப்பட்ட கலவையில் எவ்வளவு தூய ஹெரோயின் உள்ளது என்பதைக்கணித்து அறிவார்.

அதனையடுத்து அத்தகவலுடன் ஹெரோயின் நீதிமன்றத்திடம் கையளிக்கப்பட்டு வழக்கு விசாரணைகள் முடிந்து தீர்பளிக்கும் வரை நீதிமன்றத்திலே வைத்திருக்கப்படும்.

வழக்கு நிறைவு பெற்ற பின்னர் மேன் முறையீடுகள் எவையும் இல்லாத போது, ஹெரோயின் இருப்பு அழிக்கப்படும்.

கழிவறையில் தண்ணீருடன் கலந்து விடப்பட்டு ஹெரோயின் அழிக்கப்படும். அதன் போது நீதிபதி, போதைப்பொருட் தடுப்பு காவல்துறை அலுவலர்கள், தீங்குதரும் மருந்துப்பொருட் கட்டுப்பாட்டுத் திணைக்கள அலுவலர்கள் அங்கு பிரசன்னமாகியிருப்பர் என அவர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனக்குடா விமானத்தளம் இந்தியாவுக்கு அச்சுறுத்தலா?




திருகோணமலை நகரில் இருந்து கிண்ணியா நோக்கி 8 கி.மீ தூரத்திலும் கிண்ணியாவில் இருந்து 5 கி.மீ தூரத்திலும் அமைந்துள்ளது சீனக்குடா. இங்குதான் சீனக்குடா விமானப் படைத்தளம் உள்ளது. கிழக்கு மாகாணத்திற்கான விமானப் படையினரின் மிகவும் முக்கியமான விமானப் படைத்தளம் இதுதான். சுமார் 6 ஆயிரத்திற்கும் அதிகமான ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்ட இந்த விமானப் படைத்தளத்தில் போர் விமானங்களான கிபிர் மற்றும் ஏனைய யுத்த விமானங்கள் இறங்கும் வசதியுள்ளது.

இப்போதும் இங்கு துப்பாக்கி சுடும் பயிற்சி மற்றும் ஏனைய இராணுவப் பயிற்சிகளும் கடந்த காலங்களாக இருந்து இன்று வரையும் நடைபெற்று வருகின்றது. தற்போதும் சுமார் 450 விமானப் படைச் சிப்பாய்கள் 6 மாதங்களுக்கொரு தடவை பயிற்சி பெற்று வெளியாகின்றனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள பலாலி விமானப் படைத்தளத்தை விட மிகவும் முக்கியமானது இந்த சீனக்குடாத் தளம். தற்போது இரத்மலானை விமான நிலையத்தில் இருந்து வாரத்தில் நான்கு நாட்கள் இரத்மலானை- சீனக்குடா- பலாலி- இரத்மலானை ஆகிய மூன்று வழிப் பயணத்தை விமானப் படையினர் பிரயாணிகளுக்காக நடத்தி வருகின்றனர்.

இப்படிப்பட்ட தளம்தான் விரைவில் சீன விமானப் படையினரின் நேரடிக் கட்டுப்பாட்டில் வரவுள்ளது. இது இந்தியாவுக்கு மிகவும் ஆபத்தானது என்பதை ஆணித்தரமாக எத்தி வைப்போம். சீனக்குடா விமான நிலையம் அமைந்துள்ள காணி என்பது தமிழ், முஸ்லிம் மக்களுக்குச் சொந்தமான காணியாகும். இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது குண்டுத் தாக்குதல்களுக்குப் பயந்து மக்கள் தானாக வெளியேறிய பின்பு 1948 ஆம் ஆண்டுக்குப் பின்னர் உருவாக்கபப்ட்ட சீனக்குடா விமான நிலையம் இறுதி யுத்த காலத்தில் கிழக்கு மாகாணத்தில் மிகவும் முக்கியமான விமானத் தளமாகப் பார்க்கப்படுகின்றது.

தற்போது ஒவ்வொரு ஆண்டும் சீனக்குடா விமான நிலையம் விஸ்தரிக்கப்பட்டு வருகின்றது. இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்பு சீனர்கள் திருகோணமலையில் மிக நீண்ட காலம் வாழ்ந்துள்ளார்கள். ஆனால் கடந்த 5 ஆண்டுகளாக சீனக்காரர்கள் திருமலையை விட்டு வெளியேறி விட்டார்கள். அதே போன்று சீனக்குடாவிலும் சீனர்கள் வாழ்ந்துள்ளார்கள். இப்படியாக சீனக்குடாவுக்கும் சீனர்களுக்கும் ஒரு தொடர்பு இருந்துள்ளது.

சீன விமானங்கள் சீனக்குடாவில்

500 கோடி ரூபா செலவில் 44 போர் விமானங்களைப் பழுது பார்க்கும் திட்டத்தின் கீழ் சீனக்குடா விமான நிலையம் சீனாவிடம் கையளிக்கப்படவுள்ளது..

அதாவது இலங்கை விமானப் படைக்கான விசேட பராமரிப்பு என்ற போர்வையில் சீனக்குடா விமான நிலையம் சீனாவிடம் இலங்கை கையளித்த பின்பு சீனாவின் யுத்த விமானங்கள் மற்றும் சீனாவின் உளவு விமானங்கள் நேரடியாக சீனக்குடாவில் வந்திறங்கும்.

சீனக்குடாவில் அமையவுள்ள சீனாவின் விமானத்தளம் இந்தியாவுக்கு பெருத்த அச்சுறுத்தல் என்பதுடன் இந்தியாவை குறி வைத்து சீனாவின் உளவு நடவடிக்கைகள் தொடரும் என்பதில் மாற்றுக் கருத்திற்கு இடமில்லை எனலாம்.

சீனாவின் போர் விமானங்கள் மற்றும் உளவு விமானங்கள் நேரடியாக சீனாக்குடாவில் மட்டுமல்லாது பாலாலி மற்றும் இரத்மலானை ஆகிய விமான நிலையங்களிலும் வந்திறங்கும். சீனா நேராக தென் இந்தியாவின் கரையோரப் பகுதிகளை கண்காணித்து தனது உளவு வேலைகளைப் பார்க்கும்.

இப்படியாக இந்தியாவுக்கு அச்சுறுத்தலாகவே இந்த சீனக்குடா விமான நிலையம் அமையப் போகின்றது. இந்தியாவின் புதிய அரசு தனது உள்நாட்டுப் பாதுகாப்பில் அதிக கவனம் செலுத்திவருகின்றது. அதனால்தான் பிரதமர் நரேந்திர மோடியின் அரசு புதிய உள்நாட்டுப் பாதுகாப்புக் கருதி ஆயிரம் கோடி ரூபாவை உள்நாட்டுப் பாதுகாப்புக்காக ஒதுக்கியுள்ளது.

இந்த நிலையில் இலங்கை சீனாவுக்குத் தளம் அமைத்துக் கொடுத்துள்ளதானது இலங்கை இந்தியாவை ஒரு விதமான அச்சுறுத்தல் பாணியிலான நடவடிக்கையாக இருக்குமோ என்ற சந்தேகம் வலுப்பெற்று வருகின்றது.

நரேந்திர மோடி தனது பிரச்சாரத்தின் போது இந்தியா என்ற வலிமை மிக்க நாட்டை காங்கிரஸ் கட்சி பலவீனமான நாடாக மாற்றி விட்டது என்று தனது சகல தேர்தல் மேடைகளிலும் முழங்கி வந்தார். ஆனால் இப்போது மோடியின் ஆட்சியின் கீழ் மேலும் பலவீனமாக மாறி விட்டதே.

சீனா சகல வழிகளிலும் இந்தியாவைச் சுற்றி பலமான பாதுகாப்பையும் மேற்கொண்டு வருகின்றது. இந்த நிலையில் இந்தியா கைகட்டிப் பாத்துக் கொண்டிருப்பது மேலும் மேலும் இந்தியாவின் பாதுகாப்புக்கு மிகவும் அச்சுறுத்தலான விடயம் என்பதை உறுதிபடச் சொல்ல முடியும்.

### இந்தியா சீற்றம்

சீனாவுக்கு சீனக்குடா விமான நிலையம் வழங்கியதனால் இந்தியா, இலங்கை மீது சீற்றம் கொண்டுள்ளது. இந்தியா தனது கண்டனத்தையும் கவலையையும் இலங்கையிடம் தெரிவித்துள்ளது. இந்தியாவின் கண்டனத்தை தெரிவிப்பதற்காக இந்தியாவின் விமானப் படைத் தளபதியே கொழும்பு வந்து ஜனாதிபதியிடம் இந்தியாவின் கண்டனத்தையும் கவலையையும் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் விமானப்படைத் தளபதி எயார் சிப் மார்ஷல் அருப் ராஹா கடந்த வாரம் கொழும்பு வந்து ஜனாதிபதி மஹிந்த, பாதுகாப்பச் செயலர் கோத்தபாய, வெளி நாட்டமைச்சர் பீரிஸ், இலங்கை விமானப்படைத் தளபதி மார்ஷல் குணதிலக, இராணுவத் தளபதி லெப்டினன்ட் தயா ரத்நாயக்க ஆகியோரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். இலங்கையில் இருந்து இந்தியாவுக்கு எதிராக எந்தவொரு சக்திக்கும் இடமளிக்க மாட்டோம் என்று இலங்கைத் தரப்பால் இந்திய விமானப் படைத் தளபதியிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருநாட்டுப் பாதுகாப்பு தொடர்பிலும் இச்சந்திப்பில் பேசப்பட்டுள்ளதாக அறியப்படுகின்றது. கடந்த பெப்ரவரி மாதம் இந்தியாவின் புதிய விமானப் படைத் தளபதியாகப் பொறுப்பேற்றுள்ள அருப் ராஹா தனது முதலாவது வெளிநாட்டுப் பயணமாக இலங்கைக்கே வந்து போயுள்ளார். இவரது இலங்கைப் பயணம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்றே இந்திய தரப்பால் பார்க்கப்படுகின்றது.

தற்போது இந்தியாவின் சீற்றத்தைத் தணிப்பதற்காக இலங்கை அரசு வடக்கில் பலாலி விமான நிலையத்தை இந்தியாவுக்கும் பயிற்சி வழங்கும் ஒரு தளமாக வழங்குவதற்கான பேச்சளவிலான பேச்சு வார்த்தையில் இந்தியா ஈடுபட்டுள்ளதாக சில இந்தியத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது எவ்வளவு தூரம் சாத்தியப்படும் என்பதற்கு இந்திய தரப்பில் நம்பிக்கையில்லை என்பது எமது கணிப்பு. காரணம் இலங்கை மீது இந்தியா நாட்டமை காட்டக் கூடிய காலம் கைநழுவி விட்டது. ஏனென்றால் சீனர்களும் இலங்கைப் பௌத்தர்களும் மதத்தால் ஒன்று. அதனால் என்னதான் இந்தியா இலங்கைக்கு வாரி வழங்கினாலும் இலங்கை சீனாவின் பக்கம்தான் நிற்கும். அந்தளவு இலங்கை சீனாவின் மீது அபார நம்பிக்கை வைத்துள்ளது.

### இலங்கை - இந்தியா ஒப்பந்த மீறல்

சீனக்குடாவில் சீனாவின் தளம் அமைப்பது சம்மந்தமான தகவல்களை இந்தியாவுக்கு வழங்குமாறு இந்திய வெளியுறவு அமைச்சர் சுஷ்மா சுவராஜ் இலங்கையின் வெளிநாட்டமைச்சர் ஜி.எல். பீரிசிடம் உத்தியோக பூர்வமாகக் கேட்டுள்ளார்.

சீனக்குடாவில் சீனாவின் விமானத் தளம் அமைப்பதோ அல்லது சீனாவின் களம் அமைப்பதோ 1987 ஆம் ஆண்டின் இலங்கை இந்திய ஒப்பந்தத்தை மீறும் செயல் என்று இந்தியா இலங்கையிடம் தனது கண்டனம் மூலமாகத் தெரிவித்துள்ளது. 1987 ஆம் ஆண்டின் இலங்கை இந்திய ஒப்பந்தம் என்பது இலங்கையின் எந்தவொரு துறைமுகங்களும் இந்தியாவுக்குத் தெரியாமல் வெளி நாடுகளுக்கு எந்தவொரு தேவைக்கும் பயன்பாட்டுக்கும் வழங்கக் கூடாது பாவிக்கக்கூடாது என்று உள்ளது.

இந்த ஒப்பந்தமானது அமெரிக்கா திருகோணமலைத் துறைமுகத்தை தன்வசம் எடுப்பதற்கான முயற்சியொன்றை மேற்கொண்ட போது இந்தியா என்ற ஆசியச் சண்டியன் இலங்கைக்கு இந்த ஒப்பந்தம் என்ற கடிவாளத்தையிட்டது. ஆனால் துறைமுகம்தானே யொழிய விமான நிலையம் அல்ல என்ற வாதத்தை இலங்கை இந்தியாவிடம் முன்வைத்தள்ளது.

ஆனால் இலங்கை. இந்திய ஒப்பந்தத்தை எப்பவோ இலங்கை மீறி விட்டது. அதாவது ஹம்பாந்தோட்டையில் சீனாவின் உதவியுடன் ஹம்பாந்தோட்டை துறைமுகக் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கபட்டதோ அப்போதே இலங்கை, இந்திய ஒப்பந்தம் மீறப்பட்டுள்ளது. இப்போது இரண்டாவது மீறலாக சீனக்குடா விமான நிலைய சம்பவம் மாறியுள்ளது.

தமிழர்களைப் பழிவாங்கப் போய் பாதுகாப்பைக் கோட்டைவிட்ட இந்தியா. இலங்கையின் வடகிழக்குப் பகுதி என்பது இந்தியாவின் பாதுகாப்புப் பிரதேசம் என்பதில் மாற்றுக் கருத்திற்கு இடமில்லை.

விசேடமாக பாகிஸ்தானின் பயங்கரவாதிகளின் தாக்குதல் முயற்சிகளை முறியடிப்பதில் எப்போதும் கண்ணாகவே உள்ளது. ஆனால் இலங்கையில் மிகவும் முக்கியமான அச்சுறுத்தல் வரப்போகின்றதே என்ற விடயத்தில் இந்தியா இன்னும் கோட்டை விட்டுக் கொண்டே வருகின்றது.

இப்போது சீனா இலங்கையை தனது கைக்குள் போட்டுக் கொண்டு கடல் மார்க்கமாகவும் ஆகாய மார்க்கமாகவும் இந்தியாவை நெருங்கி விட்டது.

### சீனாவுடன் நெருங்கி வரும் இலங்கை

சீனாவுடன் இலங்கை பொருளாதார ஒத்துழைப்பை மேம்படுத்தும் நோக்குடன் கடல்வழிப் பட்டுப் பாதை வர்த்தக உடன்பாட்டிலும் இலங்கை சீனாவுடன் ஒப்பந்தம் செய்துள்ளது. அதன் அடிப்படையில்தான் சீனாவின் மீன்பிடி டோலர்கள் இலங்கையின் கடல் எல்லைகளில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றது.

இலங்கையின் பாதுகாப்பு விடயத்தில் இலங்கை சீனாவிடம் பல வகையான ஒப்பந்தங்களைச் செய்துள்ளது. சீனாவுடன் கூட்டு இராணுவப் பயிற்சி. கூட்டு பயங்கரவாத அழிப்பு, கூட்டு இராணுவ நடவடிக்கை, இலங்கைக்கான இராணுவ உதவிகள் என்று பாதுகாப்பு சம்மந்தமாக பல வகையான உடன்படிக்கைகளில் இலங்கை சீனாவுடன் இணைந்துள்ளது.

அந்த வகையில்தான் அண்மையில் சீன இராணுவத் தளபதி தனது சீருடையுடன் இலங்கை வந்து ஜனாதிபதி, பாதுகாப்புச் செயலர். இலங்கை இராணுவத் தளபதி உட்பட இலங்கையின் பாதுகாப்பு அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்திவிட்டுச் சென்றார்.

இப்போது நக்குண்டவர் நாவிழந்தவர் போன்று சீனா மற்றும் பாகிஸ்தான் ஈழத் தமிழர்களை அளித்த கூட்டில் இணைந்து கொண்டு இலங்கை மண்ணில் இருந்து இந்தியாவுக்கு எதிரான சக்திகள் அதிகரித்துள்ளது.

அதனால்தான் வடமராட்சியில் இந்தியா உணவுப் பொட்டலங்களைப் போட்டது போன்று இந்தியாவால் செயல்பட முடியாமல் போய் விட்டது. ஈழத் தமிழர்கள் கொலையில் இந்தியா இணைந்ததினால் இந்தியாவின் பாதுகாப்புக்கு பெருத்த அச்சுறுத்தல் ஏற்பட்டு விட்டது.

சீனக்குடாவை சீனாவுக்கு வழங்குவதின் பின்னணி

சீனக்குடாவை சீனாவுக்குக் கையளிப்பதின் பின்னால் பல இரகசியத் தவல்கள் புதைந்துள்ளது. கடந்த வருடம் சீனாவுக்கு ஜனாதிபதி மஹிந்த சென்று சீனாக்குடா விமான நிலையக் கையளிப்பு பற்றி பேசியதாக இப்போது தகவல் வெளியாகின்றது. ஆனால் அந்தத் தகவலில் எவ்விதமான உண்மையுமில்லை என்பதே உண்மை.

ஜனாதிபதி மஹிந்தவின் விசேட தூதுவராக கடந்த 5 ஆம் திகதி சீனாவுக்கு அமைச்சர் பசில் ராஜபக்ச சென்றார். அவர் அங்கு சீனாவின் உதவிப் பிரதமரைச் சந்தித்து சீனக்குடா விமான நிலையக் கையளிப்பு சம்மந்தமான உறுதிமொழி உட்பட இலங்கையின் உத்தியோகபூர்வ அனுமதியையும் வழங்கியுள்ளார்.

இது திடீரென்று இலங்கையால் எடுக்கப்பட்ட முடிவு என்பதில் மாற்றமில்லை. காரணம் இலங்கை தற்போது சர்வதேச நெருக்கடியொன்றில் சிக்கித் தவிக்கின்றது. அதாவது இலங்கை ஜெனிவாவின் பிடியில் இருந்து நாளாந்தம் இறுகி வருகின்றது.

இந்த நெருக்கடிகளில் இருந்து மீள்வதற்காக இலங்கை சீனாவின் செல்லப் பிள்ளையாக மாறி வருகின்றது. சீனாக்குடா விமான நிலையத்தை சீனாவுக்கு கையளிப்பதன் மூலமாக இந்தியாவை தனது கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்கு இலங்கை முயற்சிக்கின்றது. அதன் மூலமாக ஜெனிவாவின் பிடியில் இருந்து இலங்கையை இந்தியாவின் புதிய அரசு காப்பாற்ற வேண்டும் என்று இலங்கை அதிகளவு எதிர்பார்க்கின்றது.

கடந்த ஏப்ரல் மாதம் பிரதமர் மோடியின் பதவி ஏற்பு வைபவத்திற்கு இந்தியா சென்ற மஹிந்த மோடியிடம் 20 நிமிடங்கள் பேச்சுவார்த்தை நடத்தினார். இலங்கை 13 ஆம் திருத்தச் சட்டத்தை அமுல் படுத்தி காணி பொலிஸ் அதிகாரங்கள் வழங்கி தமிழர்களுக்கு தீர்வு வழங்க வேண்டும் என்று மோடி கொஞ்சம் உயர்த்திப் பேசியுள்ளர்.

அது மஹிந்தவுக்குப் பிடிக்கவில்லை. அதன் பின்புதான் மஹிந்த சீனாக்குடாவை சீனாவிடம் கையளிப்பதற்கான முடிவுக்கு வந்துள்ளார்.

இந்தியாவின் பாதுகாப்பு மிகவும் முக்கியமானது என்று இந்தியா கருதுமானால், ஈழத் தமிழர்களுக்கு இந்தியா தானாக முன்வந்து நல்லதொரு தீர்வை வழங்கி இலங்கையின் வட கிழக்கு என்பது இந்தியாவின் பாதுகாப்புப் பிரதேசம் என்ற கோணத்தில் எப்போதும் இந்தியா வடகிழக்குப் பகுதியில் ஒரு கண்வைத்துக் கொண்டு வடகிழக்கு மாகாண ஆட்சியாளர்களை தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும். இந்தியா ஈழத் தமிழர்களை ஓரம்கட்டிவிட்டு சிங்கள அரசுடன் இணைந்து கொண்டு தேனிலவு நடத்துவது இந்தியாவுக்கு இன்னும் பெருத்த நஷ்டத்தை ஏற்படுத்தி விடும்.



இந்தியாவின் கொள்கை வகுப்பாளர்கள் என்று சொல்லப்படுகின்ற கேரளக்காரர்கள் இலங்கைத் தமிழர்கள் விடயத்தில் இந்தியாவைப் பிழையாக வழிநடத்தி வருகின்றார்கள். கேரளக்காரர்களின் பிழையான வழி நடத்தல்தான் இன்று இந்தியாவை பிழையாக இட்டுச் செல்கின்றது. அதனால்தான் இன்று சீனா இலங்கையின் சீனக்குடா விமானத் தளத்தையும் கைப்பற்றியுள்ளது.

நன்றி - எம்.எம்.நிமால்டீன் (www.newstamilwin.com)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...நாட்டு நடப்பு...

# திருடனாய்ப் பார்த்து திருந்தாவிட்டால். . .

- பாலையூற்றான் -

இன்று நல்வழியை விட தீய வழியை நாடுபவர்களின் எண்ணிக்கையே அதிகரித்த வண்ணம் உள்ளது. எவருக்கும் தாம் விரும்பியவற்றை மற்றும் சுக போகங்களை மிக இலகுவாகவும், விரைவாகவும் பெற்றுக்கொள்ள நல்ல வழிகளை விட தீய வழியே மிக உகந்தது என்பதே அதற்குக் காரணம்.

அதனால் தான் எழுபது கோடி ருபா பெறுமதியுள்ள போதைவஸ்து பாகிஸ்தானிலிருந்து இலங்கைக்கு சர்வ சாதாரணமாக கொண்டு வரப்பட்டுள்ளது. அதற்கும் ஒரு 'தில்' வேண்டுமல்லவா? மனதில் 'தில்' இருப்பவர்களுக்கு அவை பெரிய விடயமுமல்ல.



அவள் அந்த குடும்பத்தில் மூன்றாவது பெண். பாடசாலைக் காலங்களில் அவளின் அட்டகாசத்திற்கு குறைவே இல்லை. அவள் வாலிப வயதுடையோரின் கனவுக்கன்னி (Dream girl). ஓர் அழகான வாலிபன் ஒருவனை அவள் இன்று கண்டால், மறுநாளே காதல் மடலை வரைந்து அவன் கையில் எப்படியோ திணித்துவிடுவாள்.

அவளுக்கு இருக்கும் எந்த தில்லும் அப்பகுதியில் வேறு எந்த யுவதிகளுக்கு இல்லை என்று தான் கூற வேண்டும். வாலிபர்களிடம் பணத்தை சுரண்டி டாம்பீகமாக காலத்தை கழிப்பதே அவளின் பொழுது போக்கு. அதற்காக நல்ல வழியை நாடமுடியுமா?

அவளின் பெற்றோர்களுக்கு அவளைப் பற்றி என்ன? முழுக் குடும்பத்தை பற்றியும் எந்தவித கவலையும் இல்லை. அதனால் ஒட்டு மொத்த குடும்பமும் சீரழிந்து மிக கேவலமாக வாழ்கின்றனர். தமது பிள்ளைகள் கட்டுக் கோப்பாக இல்லை என்பது பற்றி அவர்கள் என்றுமே பெரிது படுத்திக் கொள்வதே இல்லை.

அவளின் தாயார் கூட சவுதி நாட்டுக்கு பணிப்பெண்ணாகச் சென்றவள். அங்கு அவள் விபச்சாரத்தில் ஈடுபட்டதால், தலை மொட்டை அடிக்கப்பட்டு உடனடியாக 'நாடு கடத்தப்பட்டாள். வறுமை நிமித்தம் வெளிநாடு சென்றவள் வெறுங்கையுடன் வீடு திரும்பினாள்.

வெளிநாடு சென்று வந்தவர்கள் பலர் தமது நடை உடை பாவனைகளை மாற்றிக் கொண்டுள்ளதை நாம் அறிவோம். ஆனால் அவளின் கோலத்தை கண்ட எவரும் அருவருப்பு கொள்வார்கள். 'சுத்தம் சுகம் தரும்' என்பார்கள் அவளிடம் சுத்தம் என்ற வார்த்தைக்கே இடமில்லை.

ஊரில் அவளை பேய் என்று தான் அழைப்பார்கள். அவள் என்றுமே குளிக்கமாட்டாள். உடு புடவைகளைக் கூட கழுவி சுத்தமாக அணியமாட்டாள். அதனால் என்னவோ ஊரார் அவளை பேய் என அழைத்து வருவது வழமை.

அவளின் பிள்ளைகள் அவளுக்கு அது பற்றி எடுத்துக் கூறுவதே இல்லை. ஆனால் அவர்கள் மிகவும் இடாம்பீகமாக நடந்து கொள்வார்கள். ஊர் முழுக்க கடன்பட்டு. வயிற்றை கழுவும் அவர்கள் கடன் கொடுத்தோரை ஏமாற்றுவதற்கு என்றுமே பின் நிற்பதில்லை. மொத்த குடும்பமும் கொடுக்கல் வாங்கலில் பலரை ஏமாற்றி வந்ததால் அங்கு அவர்களுக்கெதிரான வழக்குகளுக்கும் குறைவில்லை.

'கனவுக்கன்னி' என அழைக்கப்பட்டு அக் குடும்பத்தின் மூன்றாவது பெண் பாடசாலையை விட்ட பின்னரும் அவளின் சேட்டைகள் ஓய்ந்ததாக இல்லை. மிட்சு சீமெந்து கம்பனியில் கூலித் தொழிலாளி ஒருவனை எப்படியோ வளைத்துப் பிடித்துக் கொண்டாள். அவன் தனது வீட்டாருக்கே தனது உழைப்பில் ஒரு சதமேனும் கொடுப்பதில்லை. அவளே தஞ்சம் என அவளின் காலுக்கடியில் விழுந்து கிடந்தான்.

எப்படியோ இருவருக்கும் இடையில் திருமணம் இரகசியமாக இடம்பெற்றது. திருமணத்திற்கு முன்னே அவள் கருவுற்றிருந்ததால் அவசர அவசரமாக அந்த திருமணம் நடந்து முடிந்தது. திருமணம் இடம் பெற்று ஆறு மாத காலத்தில் அவள் ஒரு பெண் குழந்தையை பெற்றெடுத்தாள். அந்தக் குழந்தைக்கு தந்தை தான் இல்லை என்பதை கணவன் அறிந்து கொண்டாலும் அதை அவன் பெரிதுபடுத்தவில்லை. அவனது குடும்பமும் அதே தரத்தை சார்ந்தது என்பதால் எவரும் அதை பொருட் படுத்தவில்லை.

அவனது உழைப்பு முழுவதையும் அவள் சுரண்ட ஆரம்பித்ததினால் அவனது பெற்றோர் நடுத்தெருவுக்கே வந்துவிட்டனர். அவனது தகப்பன் அரசாங்க அலுவலகமொன்றில் பியோனாக பணிபுரிந்தாலும் அவர் பெறும் சம்பளம் அவரது குடும்பத்தை கொண்டு செல்ல போதாமல் இருந்தது. அவனுக்கு திருமண வயதில் மூன்று சகோதரிகள் உள்ளனர். அவர்களுக்கு திருமணம் நடக்குமுன் அவன் திருமணம் செய்து கொண்டதால் அந்த குடும்பத்திலும் சிக்கல் நிலை தோன்றியது. அவனுக்கு சீதனம் தருவதாக கூறி இறுதியில் அவனை ஏமாற்றி விட்டனர் அவனது மாமா. மாமி.

அதனால் அவனது பெற்றோர் தங்களது குடும்பத்திலிருந்து முற்றாக அவனை ஒதுக்கி வைத்தனர். அவனது மனைவி அவனை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ளவும், தனக்கு இசைவாக நடந்து கொள்ளவும், மாந்திரீக முறையை அவள் கையாண்டு அவனை வசியப்படுத்தி வைத்திருப்பதாக ஊரார் பேசிக் கொள்ளவும் தவறவில்லை.



தற்பொழுது அவளுக்கு வயதுக்கு வந்த இரண்டு பெண் பிள்ளைகள் இருந்தும் அவள் தனது துர் நடத்தையை மாற்றிக் கொள்ளவில்லை. அனேகமாக அவளின் கணவனுக்கு பகலில் வேலை இல்லை. மாதம் முழுவதும் இரவில்தான் வேலை அதுவும் அவளுக்கு சாதகமாக அமைந்திருந்தது

பகலில் கூட பல ஆண்கள் அவள் வீட்டுக்கு வந்து அவளோடு பேசிக் கொண்டிருப்பார்கள். ஆனால் அவன் கண்டும் காணாதமாதிரி நடந்து கொள்வான். அவளின் எந்தவொரு நடவடிக்கைகளிலும் அவன் தலையிடுவதில்லை. பெட்டிப் பாம்பாக அவன் நடந்து கொள்வது சகலருக்கும் வியப்பாக இருந்தது. முழு வீட்டு நிர்வாகமும் அவளின் கையிலே இருந்து வந்ததால் உழைத்த பணத்தை மட்டும் அவளின் கையில் கொடுப்பதே அவனின் கடமை. தனக்கு வயது வந்த பிள்ளைகள் இருப்பதையிட்டு அவள் கவலை கொள்ளாததால் அவனும் தனது பிள்ளைகள் தொடர்பில் எந்தவித அக்கறையும் செலுத்துவதில்லை. ஆனால் அவளின் சுதந்திரமான போக்கு அங்கு அவள் ஓர் இரகசிய விபச்சாரியென முத்திரை பதிக்க தவறவில்லை.

எமது சமூகத்தில் கூட தம்மைப் பற்றி எவர் என்ன கதைத்தாலும் பொருட்படுத்தாது நடப்பவர்கள் பலர் உள்ளனர். அவர்களுக்கு பிரச்சினையொன்று வரும் பொழுது தான் சமூகத்தைப் பற்றி யோசிப்பார்கள். அதுவரை சமூகம் என்ன கூறினாலும் அது தொடர்பில் அக்கறை கொள்ளவே மாட்டார்கள்.

அவ்வாறே அவளும் நடந்து கொண்டாள். அவளுக்கு அறிவுரை வழங்க அங்கு ஒருவருமே இல்லை. காரணம் அவளின் குடும்பத்தில் உள்ளவர்களும் அவளைப் போன்றவர்களே. தங்களது தீய நடத்தையின் காரணமாகவே அயலவர்கள் தங்களுடன் நெருங்கிப் பழக முனைவதில்லை என்பதைக் கூட அவர்கள் புரியாதவர்களாக இருந்து வந்தார்கள்.

சிலர் தீய நடத்தையை பின்பற்றினாலும் காலப் போக்கில் அது தவறானதென உணர்ந்து திருத்திக் கொள்வார்கள். ஆனால் சிலர் தங்களது இறுதி மூச்சு இருக்கும்வரை தங்களின் தவறை உணர்ந்து திருத்திக் கொள்ளவே மாட்டார்ககள்.

அன்று சாமம் நான்கு மணி போல் அவளின் வீட்டை காவல்துறையினர் சுற்றி வளைத்திருந்தனர். ஊர் மக்கள் அனைவரும் பரபரப்புடன் அன்று அதிகாலையே நித்திரையை விட்டு எழுந்திருந்தனர். மீண்டும் சுற்றி வளைப்பு ஆரம்பித்ததையிட்டு மக்கள் பீதி கொண்டிருந்தனர்.

மீண்டும் பயங்கரவாதம் தலை தூக்கி விட்டதா? புலிகள் கிராமத்திற்குள் ஊடுருவி விட்டார்களா? என்ற கேள்விகள் மட்டும் எங்கும் ஒலித்துக்கொண்டிருந்தன. அன்று அவள் கணவன் வழமையாக இரவு வேலைக்கு சென்றிருந்தான். வீட்டில் இருந்த அவளும் அவளது வயது வந்த இரு பெண் பிள்ளைகளையும் காவல் துறையினர் ஜீப் வண்டியில் ஏற்றினர்.



வேலியால் பாய்ந்தோட முயற்சித்த மூன்று ஆண்களையும் காவல்துறையினர் மடக்கிப் பிடித்து ஜீப்பில் ஏற்றிக் கொண்டனர். ஜீப் வண்டி மெது மெதுவாக அக்கிராமத்தை விட்டு நகர்ந்து சென்று கொண்டிருந்தது.

அங்கு பொது மக்களுக்கு தங்களது முகத்தை காண்பிக்க முடியாது அவளும், அவளது வயது வந்த இரு பிள்ளைகளும் தத்தம் கரங்களால் முகத்தை மூடிக் கொண்டு சென்ற காட்சியின் அர்த்தத்தை அவ்வூர் பொதுமக்கள் புரிந்து கொள்ள தவறவில்லை.




## 3 தண்ணீர் போட்டிலுக்கு £75



லண்டனை சேர்ந்த பிரபல தொழிலதிபர் தன்நண்பர்கள் இருவருடன் ஸ்டார் ஓட்டலுக்கு சென்று அங்குள்ள ரெஸ்டாரொண்டில் மூன்று தண்ணீர் பாட்டில் மட்டும் ஆர்டர் செய்துவிட்டு சர்வரிடம் பில்கேட்டார். பில்தொகை £75 ஆகும். இத்தொகை குறித்து நிர்வாகம், மாலை 4மணிக்கு மேல் வரும் வாடிக்கையாளர்களுக்கு மினிமம் £50 பில்தொகை வசூலிப்பதாக கூறினர்.

## வீர வணக்கம்



ஆப்பிரிக்க மக்களின் விடுதலைக்காகவும் போராடி கடந்த டிசம்பர் மாதம் உயிர் நீத்த நெல்சன் மண்டேலாவின் பிரமாண்ட உருவச்சிலைக்கு வந்த இளம் பெண் அச்சிலைக்கு வீர வணக்கம் செலுத்திய பின்னர், தனது ஆடைகளை எல்லாம் களைந்து வீசி விட்டு, நிர்வாண கோலமாக நடந்து சென்று சிலை அமைக்கப்பட்டிருந்த பீடத்தின் மீது சிலையை கட்டியணைத்தவாறு சில நிமிடங்கள் நின்றிருந்தாள்.



## இது எப்படி முடியுது!!!

114 கிலோ எடையுள்ள உலகின் மிகவும் குண்டான அமெரிக்காவின் மேரிலாண்ட் என்று அழைக்கப்படும் LuAyne Brown என்ற 29 வயது பெண், ஒல்லிப்பெண்களுக்கு சரிசமமாக மிக அபாரமாக Pole Dance ஆடி வருகிறார். இவர் திருமணமாகி இரண்டு குழந்தைக்கு தாயானவர். இந்நடனப் பயிற்சியை அவர் தொடர்ந்து செய்துகொண்டு வந்ததால் அவரால் தற்போது கூட ஒல்லிப்பெண்களுக்கு இணையாக Pole Danceஆட முடியும் என்பதை நிரூபித்து வருகிறார்.

## மரணத்தை எட்டிப் பார்த்த பெண்கள்



அமெரிக்காவின் இந்தியானா மாநிலத்தில் உள்ள மான்ரோ கவுண்டியில் இரயில் ஒன்று இரண்டு பெண்கள் மீது ஏறியுள்ளது. இவர்கள் இருவரும் இரயிலில் இருந்து தப்பிக்க தண்டவாளத்தை விட்டு வெளியே போக முயற்சித்துள்ளனர். ஆனால் தவறி கீழே விழுந்ததால் இரயில் அவர்கள் மீது ஏறியுள்ளது, இந்த சம்பவம் இரயில் ஓட்டுநரின் கமெராவில் பதிவாகியுள்ளது. இந்நிலையில் இவர்கள் இருவரும் காயங்களுடன் தப்பியுள்ளனர்.

## உயிர் காப்பான் செல்ஃபோன்



சீனாவில் Taiwan என்ற நகரில் உள்ள மதுபாரில் ஒருவர் தன் நண்பர்களுடன் மதுவகைகளை குடித்துக் கொண்டிருந்தபோது அவருடைய நண்பருக்கும் அவருக்கும் இடையே தகராறு ஏற்பட்டது. இதனால் ஆத்திரமடைந்த நண்பர் துப்பாக்கியால் சுட்டார். குண்டு அவரது இதயம் இருந்த பகுதியில் தாக்கியது. ஆனால் அவருக்கு சிறிய காயம் கூட ஏற்படவில்லை. காரணம் அவர் சுட்ட இடத்தில் இருந்த சட்டைப்பையில் அவர் தனது செல்போனை வைத்திருந்தார். அவர் உயிர் தப்பினாலும், அவருடைய செல்போன் முற்றிலும் சேதமடைந்துவிட்டது.

## நல்ல சிந்தனை



ஜெர்மனி நாட்டின் தலைநகர் பெர்லினில் புதிதாக கட்டப்பட்டிருக்கும் 10 மாடிகள் கொண்ட ஓட்டல் ஒன்றில் உள்ள டாய்லட் முழுக்க முழுக்க கண்ணாடியால் கட்டப்பட்டுள்ளதால் டாய்லட்டை வாடிக்கையாளர் பயன்படுத்துவது வெளியே இருந்து பார்க்கும்படியாக உள்ளது. இதுவொரு புதுமையான முயற்சி என ஓட்டல் உரிமையாளர் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயின் மனம்

சிறுகதை

அதிகாலையில் எழுந்திருந்து, எனது பதினைந்து வயது மகன் பள்ளிக்குச் செல்ல அவசர அவசரமாக அவனை ஆயத்தம் செய்து கொண்டிருந்தேன். சாதாரணமாக இந்த வயதுள்ள குழந்தைகள், தங்கள் வேலைகளைத் தாங்களே செய்து கொண்டு, பையில் நோட்டு புத்தகங்களைத் திணித்துக் கொண்டு, பள்ளிக்குப் புறப்பட்டு விடுவார்கள்.



ஆனால் ஆடிசம் என்ற குறையுடன் பிறந்துள்ள என் மகனுக்கோ, அவனுடைய ஒவ்வொரு தேவையையும் கவனிக்க ஒரு ஆள் நிச்சயமாக வேண்டும். இந்த வயதிலும் பல் தேய்க்கும் பொழுதும், குளிக்கும் பொழுதும் அருகில் நின்று கொண்டு இப்படிச் செய், அப்படிச் செய் என்று விளக்க வேண்டும். குளித்த உடன் உடைகளைத் தலைகீழாகப் போடாமல் சரியாக உடுத்துகிறானா, சட்டைப் பொத்தான்களை வரிசையாகப் போடுகிறானா, ஷூவை மாற்றிப் போடாமல் சரியாக அணிந்து கொள்கிறானா என்றெல்லாம் கூடவே இருந்து கண்காணிக்க வேண்டும்.

இப்படி அவனுடைய ஒவ்வொரு தேவையையும் கவனித்து, அவனைத் தயார் பண்ணி, அவன் கையைப் பிடித்துக்கொண்டு, காலை ஏழு மணிக்கு வரும் பள்ளிக்கூட பஸ்ஸைப் பிடிக்க, பஸ் நிறுத்தத்தை நோக்கி ஓட வேண்டும்.

கடந்த பத்து வருட காலமாக, நான் இயந்திரத்தை முடுக்கி விட்டாற்போல் செய்துகொண்டு வரும் தினசரி வேலைகள் இவை. பஸ்ஸைப் பிடித்து, அவனை பள்ளிக்கு ஏற்றி அனுப்பிய உடன், சில நாட்கள் என் மனதில் விவரிக்க இயலாத அளவிற்கு ஆயாசம் உண்டாகும். நாமும் பத்து வருடங்களாக கர்ம சிரத்தையாக இவனை சிறப்புப் பள்ளிக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறோம். இத்தனை ஆண்டுகளில் இவன் உருப்படியாக என்ன கற்றுக் கொண்டிருக்கிறான்? இவனிடம் ஏதாவது முன்னேற்றம் தெரிகிறதா? என்றெல்லாம் சிந்தனையை ஓட விட்டால், அன்று முழுவதும் என்னால் ஒரு வேலையையுமே சரிவர கவனிக்க முடியாது. அதனால், இப்படிப்பட்ட எண்ணங்களை வளர விடாமல், மனதிற்குக் கடிவாளம் போட்டு நிறுத்தி, கிட்டத்தட்ட ஒரு ரோபோவைப் போல, நான் என் அன்றாட வேலைகளைக் கவனிக்கப் பழகிக்கொண்டு விட்டேன். என் மகனை பஸ்ஸில் ஏற்றிய உடன், என் கடமை முடிந்துவிட்டது போல், நான் வீட்டு வேலைகளை முடித்து, அலுவலகத்திற்குச் செல்வதற்கான ஏற்பாடுகளில் மூழ்கிவிடுவேன்.

அன்று, நான் என் மகனை அழைத்துக்கொண்டு பஸ் நிறுத்தத்தை அடையவும், எங்கள் வீட்டு வேலைக்காரி செல்லம்மாள், எதிர்புறத்தில் பஸ்ஸிலிருந்து இறங்கவும் சரியாக இருந்தது. இதுவும் அநேகமாக வழக்கமாக நடக்கும் ஒரு நிகழ்ச்சிதான். ஆனால், அன்று வழக்கத்திற்கு மாறாக செல்லம்மாள், தன் பேரன் முத்துவையும் உடன் அழைத்து வந்திருந்தாள்.

பன்னிரெண்டு வயதிருக்கும் அவள் பேரனைக் கண்ட உடன், நான் கேட்ட முதல் கேள்வியே, அவனைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பாமல் ஏன் இப்படித் தன்னுடன் வேலை செய்ய அழைத்து வந்திருக்கிறாள் என்பதுதான்.

பஸ் நிறுத்தத்திலிருந்து வீடு வந்து சேரும் வரையில் மடைதிறந்த வெள்ளம். ஒரு குரல் அழுது தீர்த்தாள், செல்லம்மாள்.

"இவன் அப்பன், சரியான குடிகாரனுங்க. எம்மவளக் கண்ணாலம் கட்டிக்கொடுத்து ஒண்ணும் சுகமில்லங்க. அவ சம்பாதிக்கிறதையும் பிடுங்கிக்கிட்டு குடிச்சிட்டுக் கிடக்கிறான். கேட்டா, அடி, ஒதை! இந்தப் புள்ளை இஸ்கூலுக்கு போய்க்கிட்டுதான் இருந்திச்சிங்க. பஸ் சார்ஜ், நோட்டுப் புத்தகம் அப்பிடின்னு எதுக்குமே பைசா கொடுக்க மாட்டேங்கிறான், இவன் அப்பன். கேட்டா, படிச்சு என்னா பண்ணப்போறே, சும்மா வூட்ல கிடன்னு புள்ளையைத் திட்டறான். சும்மானாலும் ஊரைச் சுத்திக்கிட்டு திரியறதுக்கு, என் கூட இட்டாந்தா, வூட்டு வேலையாவது கத்துக்கிடுமே!" என்று மூச்சிரைக்க, அவள் சொல்லிக் கொண்டு வந்தாள். கேட்பதற்கு மிகவும் வருத்தமாக இருந்தாலும், என்னுடைய பிரச்சினைகளில் மூழ்கிக் கிடக்கும் நான், மேற்கொண்டு அதைப் பற்றி அதிகம் யோசிக்கவில்லை.

அன்றிலிருந்து செல்லம்மாளுடன், அவள் பேரன் முத்துவும் வேலைக்கு வருவது வழக்கமாகி விட்டது. காலை வேளைகளில், பஸ் நிறுத்தத்தில் என்னைப் பார்த்தால், தினமும் இரண்டொரு வார்த்தைகளாவது என்னிடம் பேசாமல் போக மாட்டாள், செல்லம்மாள். அலுக்காமல், சலிக்காமல் முடுக்கிவிட்ட டேப் ரிக்கார்டரைப் போல், அவள் தினமும் ஒரே மாதிரியான கேள்விகளைக் கேட்பாள். அவைகள் பெரும்பாலும் என் பதிலை எதிர்பாராத கேள்விகளாகவே இருக்கும்.

"என்னங்க புள்ளை இஸ்கூலுக்குப் போவுதா?"

"இன்னும் பஸ் வரலீங்களா?"

"ஏம்மா, இந்தப் புள்ளை வாயைத் திறந்து ஒண்ணுமே பேசமாட்டேங்குதே, இஸ்கூலுக்குப் போய் என்னா படிக்குது? இங்கிலீஷ் எல்லாம் படிக்குதா?"

"இப்ப எந்த கிளாசில படிக்குதுங்க?"

இவள் மட்டுமென்ன, அக்கம்பக்கத்தில் குடியிருப்பவர்கள், பஸ் நிறுத்தத்தில் சந்திக்கும் மற்ற பெற்றோர்கள் என்று பலரும் இப்படி ஏதாவது கேள்விகளை கேட்டுக்கொண்டே தான் இருப்பார்கள்.

என் மகனைப் பற்றி இப்படிப் பலரும் கேட்கும் கேள்விகளுக்கு, நான் பதிலளிப்பதும். அளிக்காததும் அந்த சமயத்தில் என் மனநிலையைப் பொறுத்து இருக்கிறது. நாலு பேரைப் போல் எம்.ஏ., பி.ஏ., எல்லாம் படிக்காவிட்டாலும், எப்படியாவது என் மகனை எழுதப் படிக்கத் தெரிந்தவனாக ஆக்கிவிட வேண்டும் என்று என் மனதில் உள்ள வெறி, இவர்களுக்கு புரியுமா? இல்லை, இவர்களுக்குப் புரிய வைக்க வேண்டியது அவசியம் தானா?

செல்லம்மாள் பாட்டுக்கு, அநாவசியக் கேள்விகளை அடுக்கிக் கொண்டே போகையில், அவள் பேரன் முத்து, சாலையின் இருபக்கத்திலும் விதவிதமான சீருடைகளில், பஸ்ஸிற்காக காத்திருக்கும் பள்ளிக் குழந்தைகளை ஒருவித ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருப்பான். இத்தனை குழந்தைகள் புத்தகமும் பையுமாகப் பள்ளிக்கூடம் செல்லும்பொழுது, தான் மட்டும் இந்த வயதில் பத்துப் பாத்திரம் தேய்க்கவும், வீடு மெழுகவும் ஆயாவுடன் வேலைக்கு வருவது ஏன் என்று அவன் மனம் ஏங்குகிறதோ?

சில நாட்கள், நான் என் மகனைப் பள்ளிக்கு அனுப்ப ஆயத்தம் செய்து கொண்டிருக்கும் பொழுதே, வேலைக்கு வந்து விடுவாள், செல்லம்மாள். துடைப்பத்தை எடுத்துக்கொண்டு வீடு கூட்ட வரும் முத்து, துடைப்பத்தை அப்படியே போட்டு விட்டு, என் மகனின் பையை எடுத்து வைத்துக்கொண்டு அதிலுள்ள புத்தகங்களை ஆசையுடன் திறந்து பார்ப்பான்.



அல்லது வரவேற்பு அறையில் மேஜை மேல் வைக்கப்பட்டிருக்கும், பளபள ஆங்கிலப் பத்திரிகைகளை எடுத்துப் புரட்டிப் பார்ப்பான். செல்லம்மாளோ, "இன்னும் எட்டு வூடு செய்யணும். போதும் புஸ்தகம் படிச்சது. எந்திரிச்சி வேலையை கவனி" என்று பேரனை அதட்டுவாள். முத்துவும், புத்தகத்தை மூடி வைத்துவிட்டு யதார்த்த உலகிற்கு வருவான்.

இச்சம்பவங்கள், கடந்த சில தினங்களாக என் மனதில் ஒரு சலனத்தை உண்டாக்க ஆரம்பித்துள்ளன. அழுக்கு உடையும், பரட்டைத் தலையுமாக காட்சியளித்தாலும், முத்துவின் முகத்தில் நல்ல களை. கண்களில் அசாத்தியக் கூர்மை. நிச்சயமாக, இவனுக்கு சராசரி மனிதனை விட மூளை சற்று அதிகமாகவே இருக்கலாம்.

இவனைப் படிக்க வைத்தால் கட்டாயம் படிப்புவரும். இவனைப் போல், ஓர் அறிவுள்ள குழந்தையைப் படிக்க வைக்காமல், பத்து வருட காலமாக ஏ,பி,சி,டியையும் 1,2,3 யையுமே சரியாக கற்றுக் கொள்ள முடியாமல் போராடிக்கொண்டிருக்கும் என் மகனை ஆயிரக்கணக்கில் பணம் செலவழித்து படிக்க வைப்பது எந்த விதத்தில் நியாயம்? முத்து இன்று, பள்ளிக்குச் செல்லும் குழந்தைகளையும் புத்தகங்களையும் ஏக்கத்துடன் பார்கிறான். ஆனால், நாளாவட்டத்தில் இவனே படிப்பில் ஆர்வம் போய் ஒரு போக்கிரியாகவும் தலையெடுக்கலாம். காவாலி போல் ஊர் சுற்றிக் கொண்டு பீடி, சிகரெட் துண்டங்களைப் பொறுக்கி "தம்" அடிக்கலாம். பெரியவனாகி, கூலி வேலை செய்து வரும் பணத்தில் அவன் அப்பனைப் போல் சீட்டு, குடி, அடி, உதை என்பதையே வாழ்க்கை முறையாக அமைத்துக் கொள்ளலாம்.

சமீப காலமாக முத்துவைப் பார்க்கும் பொழுதெல்லாம் என் மனதில் இப்படிப்பட்ட சிந்தனைகள் உருவாகி என்னுள் ஒரு குற்ற உணர்வை ஏற்படுத்த ஆரம்பித்துள்ளன.

ஏற்கனவே குழம்பிக் கொண்டிருந்த என்னை அன்று எங்கள் அலுவலகத்தில் நடந்த சொற்பொழிவு வெகுவாக பாதித்தது. உலக வங்கியைச் சார்ந்த பொருளாதார நிபுணர் ஒருவர், "மக்களின் ஆரோக்கிய நிலையும், அரசாங்கத்தின் பொறுப்பும்" என்ற தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றினார்.

உலக நாடுகள் ஒவ்வொன்றும் மக்களின் உடல் ஆரோக்கியத்திற்கும், பொது சுகாதாரத்திற்கும் நாட்டின் வருமானத்திலிருந்து எத்தனை சதவிகிதம் ஒதுக்குகின்றன என்று புள்ளிவிவரங்களை அடுக்கிக் கொண்டே போனார், அந்தப் பேச்சாளர்.

புற்றுநோய், எய்ட்ஸ் போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்க சராசரி ஒரு நபருக்கு ஆகும் செலவென்ன என்றெல்லாம் விளக்கிக் கொண்டு போன அந்த நிபுணர், பிறவியிலேயே குறைகளுடன் பிறக்கும் குழந்தைகளின் கவனிப்பு என்ற தலைப்புக்கு வந்தார்.

அதுவரையில், ஏனோ, தானோவென்று சொற்பொழிவைக் கேட்டுக்கொண்டிருந்த நான், சட்டென்று விழித்துக்கொண்டேன். மந்த புத்தி, ஸ்பாஸ்டிக் மற்றும் பல விதமான குறைகளுடன் பிறக்கும் குழந்தைகளின் பிரத்தியேகக் கவனிப்பு, பயிற்சி, சிறப்புப் பள்ளி என்று அவர்கள் நலனுக்காக, மேலை நாடுகளில் அரசாங்கம் ஏகப்பட்ட தொகை செலவு செய்கிறது என்றும் புள்ளிவிவரங்களை எடுத்து விட்டார், அந்த நிபுணர்.

பொருளாதார ரீதியாக இந்தச் செலவுகள் எதிர் காலத்தில் பலன் ஒன்றும் அளிக்க முடியாத செலவுகள் என்றும், சமூகத்திற்கும், அரசாங்க கஜானாவிற்கும் இச்செலவுகள் ஒரு சுமைதான் என்பது போலவும் அவர் பேசியவுடன், எனக்குத் தாங்க முடியாத ஆத்திரம் உண்டாகியது. இந்த அமெரிக்கர்கள் என்ன மனிதாபிமானமே இல்லாதவர்களா? வாழ்க்கையின் எல்லா பிரச்னைகளையும் பணத்தால் மட்டும் எடை போடுகிறார்களே என்று என் மனம் கொதித்தெழுந்தது.

மாலையில் அலுவலகம் முடிந்து பஸ்ஸைப் பிடித்து ஜன்னல் ஓர இருக்கையில் அமர்ந்தேன். குளிர்ந்த காற்று சுரீரென்று என் முகத்தைத் தாக்கியது. என் மனம், காலையில் அந்த அமெரிக்கப் பொருளாதார நிபுணர் ஆற்றிய சொற்பொழிவை நோக்கிச் சென்றது. இப்பொழுது, ஆத்திரம் தணிந்து மனம் ஒரு நிலைக்கு வந்திருந்தது.

அவர் சொல்வதிலும் ஒருவித நியாயம் இருக்கிறதோ? பணத்தட்டுப்பாடு உள்ள ஒரு ஏழை நாட்டில், இப்படிப்பட்ட செலவுகள் ஒரு சுமைதானோ? உடனே எனக்கு முத்துவின் நினைவு வந்தது. என் மகனைப் படிக்க வைக்க சிறப்புப் பள்ளி, சிறப்பு ஆசிரியர் என்று மாதம் ஆயிரம் ரூபாய் வரையில் செலவழிக்கிறேன்.

இந்தப் பணத்தில் முத்துவைப் போல் நான்கு குழந்தைகளைப் படிக்க வைக்கலாமே! என் மகனைப் படிக்க வைப்பதால் குடும்பத்திற்கும், சமூகத்திற்கும் என்ன பயன்? முத்துவை படிக்க வைப்பதன் மூலம், நாட்டிற்கு உபயோகமான ஒரு பிரஜையை உருவாக்கலாமே? அல்லது குறைந்தபட்சம் ஒரு போக்கிரி அல்லது குடிகாரன் உருவாவதையாவது தடுக்கலாமே என்றெல்லாம் என் மனம் எண்ண ஆரம்பித்தது.



இனியும் நாம் முத்துவைப் பற்றிய குற்ற உணர்வுடன் வாழ்ந்து கொண்டிருக்கக்கூடாது. ஆக்கபூர்வமாக ஏதாவது செய்ய வேண்டும் என்று என்னுள் ஒரு உந்துதல் ஏற்பட்டது. நான் தீர்மானமான ஒரு முடிவிற்கு வந்தேன். "எப்பாடுபட்டாவது அலைந்து திரிந்து முத்து மறுபடியும் பள்ளியில் சேர்ந்து படிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்."

முத்துவின் படிப்புக்கு ஆகப்போகும் செலவு. நான் என் மகனுக்காகச் செலவழிக்கும் தொகையில் ஒரு சிறு விகிதமே. அவன் "அப்பன்" கொடுக்காவிட்டால் போகிறான். நானே முத்துவை படிக்க வைப்பேன், அவனை ஒரு நல்ல பிரஜையாக உருவாக்க முயற்சிப்பேன் என்று சபதம் செய்து கொண்டேன். எத்தனையோ நாட்களுக்குப் பிறகு, அன்று எனது உள்ளத்தில் நிம்மதியும், சந்தோஷமும் பெருகுவதை உணர்ந்தேன்.

நன்றி - பார்வையை மீட்க.. ..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவி முரசு

## படைத்ததேன்?

பல்லி முட்டை இட்டதும்
பார்த்திடாது - போய்விடும்!
மெல்லக்குஞ்சு சுவர்களின்
மேல் இரைக்கு ஊர்ந்திடும்!

ஓணான் மண்ணுள் முட்டையை
ஒளித்துவைத்துப் போய்விடும்!
காணாமலே குஞ்சு இரை
கண்டு தின்று பெருத்திடும்!

எறும்பு கறையான் முட்டைகள்
எண்ண முடிந்திடாதவை!
பெறுமாம் கோடிக்கணக்கிலே,
பிடியின் கன்று ஒன்றுதான்!

மாதம் பத்தாய்ச் சுமப்பதாய் -
மனிதக் குழவி வளர்த்திட
போதும்பாடு என்பதாய்ப்
புதுமையாய்ப் படைத்ததேன்?

தாமரைத்தீவான்.. [ஈச்சந்தீவு, கிண்ணியா]



## முன்னேற்றமும் பின்னடைவும்

அபிவிருத்தியில் முறையில்லை
அரச பதவிகளுக்கு தகுதியான
ஆட்களைச் சேர்ப்பதிலும் குறையில்லை
தரமற்ற பொருட்களை
தடை செய்வதிலும் குறையில்லை
வரப் பிரசாதங்களை மக்களுக்கு
வழங்குவதிலும் குறையில்லை
அரசியலில் தேசியப் பிரச்சினைக்கு
சிறந்த தீர்வெதனையும்
நேர்மையுடன் காணாத குறைவே
இங்கு நீடித்து வருகிறது!

விசாரணைக் குழுக்கள் மூலம்
வெற்றி கிட்டிய தீர்வெதுவும்
வரலாற்றுப் பதிவுகளாக இங்கு
வந்த சரிதம் அன்று முதல் இன்றுவரை
ஆரோக்கியந் தரவேயில்லை
காலத்தை வீணடிக்கும் பொய்க்
கோலம் போடுதல்களை விட்டு
அனுகூலமான அரசியல் தீர்வுக்கு
அடிகோலுவதே சிறந்த வழி!

– சேனையூரான் –

## ஒவ்வொரு வரிகளும் உனக்கே சொந்தம்



எரிந்த சாம்பலிலும்
சிற்பம் செய்து விடலாம்
எரியும் தீயிலும்
ஓவியம் வரைந்து விடலாம்
உண்மையான காதலுடன்
மனது உருகும் போது

*****

உடைந்த சிறகுகளுடன்
இந்த பறவை கடல் தாண்ட போகிறது
சிறகை உடைத்து
விட்டுச் சென்ற
உயிரைத் தேடி

– சந்தீபனி –

## பிரிதல்

கண்ணுக்குள் ஏதோவொரு
பறவையின் இறகொன்று
வானில் பேசியபடி
காற்றில் பயணித்தபடி

தடவுதலின் குதூகலிப்பில்
இறகினை பிரிந்த அந்த
பறவையினை அறியாத படி.

கால்களுக் கருகினில்
தொட்டும் தொடாமலும்

இறகினுள்ள வர்ணங்கள்
கைதேர்ந்த ஓவியனின்
தூரிகையின் மூளையினால்

மனதில் படிநித உணர்வானது
இறகினை என் கரமதில்
அற்புதம் ஆகா அதிசயம்



– திருமலை சுந்தா –

## கணவன்

கணவன் பசியுடன் கூடிய ஓநாய்
மற்ற ஓநாய்களிடமிருந்து காப்பாற்ற
வந்தவன்
ஆனால்
உன்னைத் தன் தாடைக்குள்
எடுத்துக் கொள்வான். கூறுவான்
எவவளவு பாதுகாப்பாக இருக்கிறாய்
உன்னை ஒன்றும் தின்றுவிடமாட்டேன்
கணவன் பசியுடன் கூடிய ஓநாய்
மற்ற ஓநாய்களிடமிருந்து காப்பாற்ற
வந்தவன்
ஆனால்
உன்னைக் கூறுகளாக பிய்த்தெறிவான்
தனது ஒவ்வொரு கூறுகளையும்
புகுத்திக் கொள்வான் பின் கேட்பான்
உனது அடையாளம் தான் என்ன?
ரெட்ரைடிங்கூட் போல்
ஓநாயிடமிருந்து தப்பி ஓடிவிட நீ.
நினைப்பாய்
அவன் இப்போது உன்னைத் தாவிப்
பிடிப்பான்
நீயும் நம்பிக்கை தொலைந்து
உனது தொலைந்த அடையாளத்தைக்
காண முயல்வாய்
கணவன் பசியுடன் கூடிய ஓநாய்

நூல் : மறுபாதி
–மஞ்சி திவானா [பஞ்சாபி]–
தமிழில் : கஞ்சாக் கறுப்புக் கள்ளன்

# இருமரபுந்துய்ய எதிர்வீரசிங்க நல்லூபால வன்னிபத்தின் உயில்:

பாகம் 05

### திருகோணமலை வன்னிபங்களும் அதன் தேசவழமைகளும்

கடந்தவார தொடர்ச்சி .. ..

திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த நான்கு வன்னிமைகளும் இவ்வாவண உருவாக்கத்தில் பங்குகொண்ட வேளை தங்கள் பகுதிகளில் நடைமுன்றயில் இருந்த தேசவழமை குறித்து அறிக்கை சமர்ப்பித்திருந்தார்கள். இவ்வாறு எழுதப்பட்ட அறிக்கைகள் சுருக்கமானவை என்றாலும் திருகோணமலை தேசவழமை குறித்த சில முக்கிய அம்சங்களை இவ்வறிக்கைகள் மூலம் அறியக்கூடியதாக உள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாவணத்தில் முக்கிய இடம் வகிப்பது சொத்துரிமை தொடர்பான விதிகளாகும். பெற்றோர் தேடிய சொத்துக்கள் பிள்ளைகளுக்கு கிடைக்கும், பரம்பரைச் சொத்துக்கள் மருமக்களைச் சேரும் என்பது திருகோணமலை வன்னிபங்களில் நிலவிய வழமையாகும்.

இது மருமக்கள் தாயமுறையினை அடிப்படையாகக் கொண்டது. வன்னிப பிரிவுகளான கட்டுக்குளப்பற்று, கொட்டியாரப்பற்று, தம்பலகாமப்பற்று என்பன முக்குவரிடம் காணப்பட்ட வழமையை ஒத்த மருமக்கள் தாயமுறையினை தமது தேசவழமையாகக் கொண்டிருக்க, விதிவிலக்காக திருகோணமலைப்பற்று யாழ்ப்பாணத்தை ஒத்த தேசவழமை முறையினைக் கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது. குடிமக்கள் வன்னிபத்திற்கு அறிவித்து , அனுமதி பெற்று காடுகளைத் திருத்தி குடியிருப்பாகவோ , தோட்டமாகவோ பயன்படுத்த முடியும். அந்நிலங்கள் அவர்களுக்கு உரித்தானவையாகும். அவற்றை அவர்கள் விற்கவோ, ஒற்றியாகக் (அடமானம்) கொடுக்கவோ அல்லது சீதனமாகக் கொடுக்கவோ உரித்துடையவர்களாக இருந்திருக்கிறார்கள். எனவே குடிமக்கள் தாம் திருத்தி, வளப்படுத்தி, செய்கைபண்ணும் நிலங்களின் மீது உரிமை கொண்டவர்கள் என்ற கோட்பாடு திருகோணமலை வன்னிமைகளில் நிலவியதை இதன்மூலம் அறியக்கூடிதாக இருக்கிறது.

சொத்துரிமைக்கு அடுத்ததாக திருமணம் தொடர்பான வழமைகள் இடம்பெற்றுள்ளது. திருமணங்கள் பெற்றோரினால் பேசித் தீர்மானிக்கப்படும் வழக்கம் அக்காலத்தில் இருந்திருக்கிறது. திருமணம் செய்ய விரும்புவோர் வன்னிபத்திற்கு அது தொடர்பில் அறிவித்து அவர் முன்னிலையில் திருமண ஒப்பந்தம் எழுதிக்கொள்ள வேண்டும். மணமகனோ, மணமகளோ தமது வாக்குறுதியில் தவறினால் குற்றப்பணம் கொடுப்பதற்கும், தண்டனை அனுபவிப்பதற்கும் உரித்தானவர் ஆவார் என்பதனை உத்தரவாதம் செய்தல் வேண்டும். முறைப்படி நடைபெறும் திருமணத்தில் மணமகன் மணமகளின் கழுத்தில் தாலி அணிவிக்கவேண்டும். தாயின் சீதனம், பெற்றோரின் தோட்டம் என்னும் வகையில் அடங்கும் சொத்துக்கள் என்பன கல்யாணப் பெண்ணுக்கு சீதனமாக கொடுக்கும் வழக்கம் இருந்திருக்கிறது. வன்னியனார் முன்னிலையில் இடம்பெறும் கத்தோலிக்க, இஸ்லாமிய திருமணங்கள் அவர்களது சமய முறைகளின்படி இடம்பெறும்.

இவற்றுடன் இந்த ஆவணங்கள் இப்பிராந்தியத்தில் நிலவிய அடிமை முறைபற்றிய பதிவுகளைக் கொண்டிருக்கிறது. எவரேனும் ஒருவர் மனிதனொருவரைக் கூலியாளாகக் கொண்டால் அம்மனிதனுக்கு வேண்டிய உணவு, துணி, கூலிப்பணம் என்பனவற்றைக் கொடுக்க வேண்டும். அடிமைகள் எசமானின் நிலங்களில் பயிர்ச் செய்கையில் ஈடுபடுவதோடு . அவரது வீடு, வளவு, தோட்டம் ஆகியவற்றிலும் வேலை செய்தல் வேண்டும். அத்துடன் சமயத்தில் எசமானின் மெய்ப்பாதுகாவலர் போல் செயற்படவும் ஆயத்தமாக இருத்தல் வேண்டும் என்றும் இவ்வாவணங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

இவ்வாவணத்தில் முக்கியம் பெறும் இன்னொரு அம்சம் கோணேசர் கோயில் தொடர்பானது. வயல் நிலங்கள், தோட்டங்கள் என்பனவற்றில் இருந்து பெறப்படும் வருமானத்தில் 10 வீதம் கோணேசர் கோவிலுக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்பதாகும். ஒல்லாந்தர் ஆட்சியில் வன்னிபங்களே தங்கள் பிரதேசத்தின் நிர்வாகங்களுக்குப் பொறுப்பாக இருந்தனர். வன்னிபங்களுக்கும் , ஒல்லாந்தர்களுக்கும் இடையே வரி தொடர்பான உடன்பாடும் ஏற்பட்டிருந்தது.

10.04.1815 ஆம் திகதியிட்ட மேற்படி அறிக்கை சுருக்கமானதாக இருந்தாலும் அக்காலவழக்கில் இருந்த தேசவழமை பற்றிய வரலாற்றாதாரமாக கொள்ளத்தக்கவை. இவ்வகைத் தமிழர் தேசவழமைகளும் சமூக வழமைகளும் என்ற நூலில் பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்கள் அலெஷாந்தர் ஜோன்ஸ்ரன் ஆவணச் சுவடிகளை முழுமையாக மொழி பெயர்த்துத் தந்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.



மேற்கூறிய அனைத்து ஆதாரங்களும் திருகோணமலைப் பிராந்தியத்தில் நிலவி வந்த வன்னிபங்களின் சுயாட்சி முறைக்கு ஆதாரங்களாகின்றன. இவை தவிர வன்னிபங்கள் தொடர்பான பல ஓலைச்சுவடிகளும், காணி உறுதிகளும் பண்டைய காலந்தொட்டு தம்பலகாமத்திலுள்ள ஆதிகோணநாயகர் ஆலயத் தொழும்பாளர்களிடம் தலைமுறை தலைமுறையாக பேணிப்பாதுகாக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

தம்பலகாமம் தொடர்பான வரலாற்றுத் தேடலில் ஈடுபட்டிருந்தபொழுது எனது முன்னைநாள் ஆங்கில ஆசான் திரு.இந்திரசூரியன் அவர்களிடம் இருந்து ஒரு உயில் கிடைக்கப்பெற்றது. இது திருகோணமலை வன்னிபங்கள் தொடர்பான வரலாற்றாதாரங்களில் முக்கியம் பெற்றதாக இருந்தது. ஓலைச்சுவடிகளும் மற்றும் கல்வெட்டு வரலாற்றாதாரங்களும் கிடைகுமெனச் சல்லடைபோட்டுத் தேடி சலிப்படைந்திருந்த ஒரு நாளில் இந்த வரலாற்றுப் பொக்கிசம் எமது கைக்குக் கிடைத்தது குறிப்பிடத்தக்கது.

**திரு வேதபுராண காவியங்களின் பிரகாரம் தெக்ஷிணகயிலாய. திருகயிலம்பதியாகிய திருகோணமலையில் எழுந்தருளியிருக்கும் எங்கடவுளாகிய சிவபெருமான் கோணநாயகனை வணங்கி. தற்காலம் திரு.கொட்டியாபுரப்பற்று மேன்காமத்தில் வசிக்கும் இருமரபுத்துய்ய எதிர்வீரசிங்க நல்ல பூபால வன்னிபனாகிய நான் திரு.தம்பலகாமம் கோணநாயகர் கோயிற் கருமங்களைப் பற்றி பராமரிப்புத் தத்துவ நியமன உறுதி முடித்துக் கொடுத்த விபரம்"**
என்று தொடங்குகிறது (ருஉஏ0 என்று தமிழில் இலக்கமிடப்பட்ட) 1893 ஆம் ஆண்டு ஆனி மாதம் 14 ஆந்திகதி எழுதப்பட்ட மேன்காமம் வன்னிபத்தின் உயில்.

தொடரும் ..

வைத்திய கலாநிதி த.ஜீவராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## திறமைக்கு வாய்ப்பு

அரசியல் கோதாவில் இருந்து விலகி விட்ட குஷ்பு இப்போது சின்னத்திரையில் மட்டும் ஒரு சில நிகழ்ச்சிகளில் நடித்து வருகிறார். அதனால் முழுநேர தயாரிப்பாளராக முடிவெடுத்துள்ளார். ஒரே நேரத்தில் 5 படங்களை தயாரிக்க திட்டமிட்டுள்ளாராம் குஷ்பு. அப்படி தான் தயாரிக்கும் படத்தை தனது கணவர் சுந்தர்.சி மட்டுமின்றி மற்ற இயக்குனர்களுக்கும் இயக்க வாய்ப்பு கொடுக்கப்போகிறாராம்.

## சிவாவுடன் சேர மறுப்பு



பொன்ராம் மீண்டும் சிவகார்த்திகேயனை வைத்து அடுத்த படத்தை ஆரம்பித்துவிட்டார். இந்த படத்திற்கு "ரஜினி முருகன்" என்ற டைட்டில் வைக்கபப்ட்டுள்ளது. இந்த படத்தை பிரபல இயக்குனர் லிங்குசாமி, தனது திருப்பதி பிரதர்ஸ் நிறுவனத்தின் மூலம் தயாரிக்கின்றார். இந்நிலையில் இந்த படத்தில் சிவகார்த்திகேயனுக்கு ஜோடியாக நடிக்க சமந்தாவிடம் லிங்குசாமி தனிப்பட்ட முறையில் கேட்டுக்கொண்ட போதிலும் அவர் நடிக்க மறுத்துவிட்டதாக கூறப்படுகிறது. விஜய், சூர்யா, விக்ரம் போன்ற முன்னணி நடிகர்களுடன் மட்டுமே இனிமேல் ஜோடியாக நடிக்க சமந்தா முடிவு செய்திருப்பதாகவும் வளரும் அல்லது வளர்ந்து வரும் ஹீரோக்களுடன் ஜோடி சேரப் போவதில்லை என்றும் சமந்தா கூறியுள்ளதாக கிசுகிசுக்கப்படுகிறது.

## சிவாக்குப் போட்டி செந்தில்



தமிழ் சினிமாவில் சின்னத்திரையில் இருந்து வெள்ளித்திரைக்கு வந்து கலக்கியவர்கள் சந்தானம், சிவகார்த்திகேயன். அதே வரிசையில் தற்போது செந்தில். இவர் நடிப்பில் விரைவில் வெளிவரயிருக்கும் படம் வெண்நிலா வீடு. இப்படத்தை வெற்றி மகாலிங்கம் இயக்க தன்ராஜ் மாணிக்கம் இசையமைத்துள்ளார். மேலும் இதில் இவருக்கு ஜோடியாக சென்னை-28 புகழ் விஜயலட்சுமி நடித்துள்ளார்.

## ஒன்னேகால் கோடி???



அஜீத்தின் 55வது படத்திலும் கதைக்கு முக்கியத்துவம் வாய்ந்த வேடத்தில் நடிக்கிறார். கதைப்படி இளவட்ட அஜீத்துக்கு ஜோடியாக நடித்துள்ள த்ரிஷா ஒரு குழந்தைக்கு அம்மாவாகவும் நடித்து வருகிறார் இந்த நிலையில், வேறு புதிய படங்களில் இனனும் கமிட்டாகாத த்ரிஷாவை, குயின் இந்தி பட்த்தின் தமிழ் ரீமேக்கில் நடிக்க நடிகர் தியாகராஜன் அழைத்து பேசினாராம். அப்போது, ஒன்னேகால் கோடி சம்பளம் தந்தால் நடிக்கிறேன் என்றாராம் த்ரிஷா.

## கவுதமி விட்டுக்கொடுப்பாரா!



வேடம் தனக்கு பொருந்துமா? என்று மோகன்லால் மீனா நடித்து சந்தேகமாக இருந் மலையாளத்தில் மாபெரும் வெற்றி ததால் மறுத்து பெற்ற த்ரிஷ்யம் ரீமேக் தமிழ் படத்தில் விட்டதாகவும், தான் நடிக்க நடிகை ஸ்ரீதேவி முதலில் அந்த படத்தில் மீனா சம்மதம் தெரிவித்திருந்தாலும் பின்னர் கேரக்டரில் கமலுக்கு மறுத்துவிட்டார். நீண்ட இடைவெளிக்கு ஜோடியாக நடிக்க பின்னர் கமல்ஹாசன் படத்தில் நடிப்பது ஆசைப்பட்டதாகவும், ஆனால் அந்த தனக்கு ஒரு நல்ல வாய்ப்பாக கேரக்டரை கவுதமி விட்டுக்கொடுக்க தயார இருந்தாலும். அந்த படத்தில் ில்லாததால், தான் அந்த படத்தில் இருந்து இடம்பெற்றுள்ள போலீஸ் அதிகாரி விலகுவதாகவும் தெரிவித்தார்.





## நோ ஆபாசம்!?

மத்திய தணிக்கை குழு முதன்மை செயல் அதிகாரி ராகேஷ் குமார் 'திரைப்படங்களில் ஆபாச காட்சிகள், வசனங்களை முற்றிலும் நீக்க முடிவு செய்திருக்கிறோம். குறிப்பாக பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகள் தயவுதாட்சண்யமின்றி நீக்கப்படும். வசனங்களை மௌனமாக்கினாலும், காட்சிகளை மங்கலாக்கினாலும் படம் பார்க்கும் ஆடியன்சுக்கு அது புரிந்து விடுகிறது. அதனால் இனி மௌனமாக்கல், மறைத்தல் இன்றி நேரடியாக காட்சிகளை நீக்க இருக்கிறோம். அப்படி நீக்கினால் மட்டுமே யு சான்றிதழ் வழங்கப்படும்.' என்று அதிரடியாக கூறினார்.

## யார் பின்னணியில்??



இந்த அடுத்த சூப்பர் ஸ்டார் பட்டத்தை தான் ஏற்றுக்கொள்வதாகவும், கூறிய விஜய் இதற்கான பாராட்டு விழா நடத்த அனுமதி கேட்ட விஜய் ரசிகர்களுக்கு அவர் அனுமதியும் கொடுத்தார். ஆகஸ்ட் மாதம் இரண்டாவது வாரத்தில் இந்த விழா பிரமாண்டமாக மதுரையில் நடத்த திட்டமிடப்பட்டிருந்தது. இந்நிலையில் ஆகஸ்ட் இரண்டாவது வாரத்தில் சுதந்திர தின விழா வருவதால் அதற்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யவேண்டும் என்றும், இதுபோன்ற தனிமனித விளம்பர விழாக்களை தவிர்க்கவேண்டும் என்று விஜய் தரப்புக்கு அறிவுரை வழங்கியதோடு இந்த விழாவுக்கு அரசு அனுமதி அளிக்க மறுத்துள்ளது.

# சினிமுரசு

## சினிமா குறுஞ் செய்திகள்

- **விநியோகஸ்தர்கள் பிடியில் விஷால்**

நான் சிகப்பு மனிதன் தோல்வியால் பல விநியோகஸ்தர்கள் விஷாலிற்கு நெருக்கடி கொடுக்க, பூஜை படத்தை குறைந்த விலையில் தருவதாக அறிவித்தாராம்.

- **சூரியிடம் சண்டை போட்ட சிம்பு**

போதை தலைக்கு ஏறிய சிம்பு சும்மா இருப்பாரா, அந்த பக்கம் அமைதியாக நின்றுக் கொண்டிருந்த சூரியை கலாய்க்க ஆரம்பித்துவிட்டாராம்.

- **வைரமுத்துவுடன் இளையராஜா சேர வாய்ப்பில்லை.**

28 வருடங்களுக்கு பிறகு இளையராஜாவும், வைரமுத்துவும் மீண்டும் இணையபோவதாக கோலிவுட்டில் செய்திகள் வெளிவந்துகொண்டிருக்கின்றன. ஆனால் இந்த தகவல் பொய்யானது என்று இளையராஜா மறுத்துள்ளனர்.

- **மனைவிக்கு ரூ.380 கோடி ஜீவனாம்சம்**

பிரபல பாலிவுட் நடிகர் ஹிருத்திக் ரோஷன் தனது மனைவியை விவாகரத்திற்கு செய்வதற்காக அவருக்கு 'ரூ.380 கோடி ஜீவனாம்சம் தர ஒப்புக்கொண்டுள்ளதாக செய்திகள் வெளிவந்துள்ளன.

- **மனம் திறந்து பாராட்டிய ஷங்கர்**

இயக்குனர் ஷங்கர், சமீபத்தில் வேலையில்லா பட்டதாரி படத்தை பார்த்த போது 'தனுஷின் நடிப்பு என்னை மிகவும் கவர்ந்தது. மேலும் அனிருத்தின் இசை என்னை ஈர்த்துவிட்டது' என டுவிட் செய்துள்ளார்.

- **நடிகை ஜனனியின் பெயர் - ஜாதியால் மாற்றம்**

விழாவில் பேசிய ஒரு பிரபல இயக்குனர் நடிகைகள் தங்கள் பெயருக்கு பின்னால் ஜாதி அடைமொழியை போடுவதை தடை செய்யவேண்டும் என ஆவேசமாக பேசியதை அடுத்து ஜனனி அய்யர் தனது பெயரை ஜனனி என மாற்றியுள்ளார்.

- **குழப்பத்தில் தல**

தல 55 ஐ முடிப்பதற்குள் சிம்பு, விக்ரம் படத்தின் அறிவிப்புகளை கௌதம் வெளியிட்டதால் ரத்னம் கடும் கோபத்தில் இருக்கிறாராம், அஜித் தான் இந்த படத்தின் வாய்ப்பை கௌதமிற்கு வழங்கியதால் இவர்களுக்கிடையே என்ன சொல்வது என்று தெரியாமல் இருக்கிறாராம் தல.

- **கத்திக்கு கறுப்புக்கொடி**

கத்தி திரைப்படத்தின் இறுதிக்கட்ட படப்பிடிப்புக்காக கத்தி' படக்குழுவினர் ஐரோப்பா நாடுகளுக்கு படப்பிடிப்பிற்காக வருகின்றனர் என்ற செய்தி அறிந்ததும், ஐரோப்பாவில் உள்ள தமிழ் அமைப்பினர் கத்தி படக்குழுவினர்களுக்கு தங்கள் எதிர்ப்பை காட்ட இப்பொழுதே தயாராகி வருகின்றனர்.

- **ஒரே படத்தில் யுவன், தனுஷ், இளையராஜா**

வை ராஜா வை படத்தில் தனு' ஒரு பாடல் எழுதுகிறார், அப்பாடலுக்கு யுவன் இசையமைக்க, இளையராஜா பாடவுள்ளார் என நெருங்கியவட்டாரங்கள் தெரிவிக்கின்றது.

- **4 ஆயிரம் கோடி வசூல்**

தீபிகா படுகோனே அறிமுகமாகி 7 வருடங்களில் அவர் நடித்திருப்பது 17 படங்களில். இந்த படங்கள் மூலமாக அவர் 4 ஆயிரம் கோடி ரூபாய் வசூலித்து சாதனை படைத்திருக்கிறார்.

## இயக்குனர் அனீஸின் திருமணம் என்னும் நிக்காஹ் திரை விமர்சனம்



சாப்ட்வேர் இன்ஜினியராக பணிபுரியும் ஜெய், சென்னையில் இருந்து கோவை செல்வதற்காக ரயிலில் செல்கிறார். ரயிலில் டிக்கெட் கிடைக்காததால் முஸ்லீம் ஒருவருடையை பெயரில் முன்பதிவு செய்யப்பட்ட டிக்கெட்டில் பயணம் செய்கிறார். அதே போல நஸ்ரியாவும், தனது முஸ்லீம் தோழி ஒருவரின் பெயரில் வேலை விஷயமாக கோவை செல்கிறார். ரயிலில் இருவரும் ஒருவரை ஒருவர் முஸ்லீம் என்றே அறிமுகப்படுத்திக்கொள்கின்றனர்.

ரயிலில் ஏற்படும் ஒரு சிறு பிரச்சினையில் இருந்து நஸ்ரியாவை ஜெய் காப்பாற்றுவதால் இருவருக்கும் நட்பு ஏற்படுகிறது. பின்னர் மீண்டும் இரண்டு நாள் கழித்து சென்னை திரும்பும் போது தற்செயலாக மீண்டும் சந்திக்கின்றனர். நட்பாக ஆரம்பித்த அவர்களுடைய உறவு பின்னர் காதலாக மாறுகிறது.

இருவரும் ஒருவருக்கொருவர் முஸ்லீம் என்று சொல்லி அறிமுகப்படுத்திக்கொண்டதால், எங்கே தான் முஸ்லீம் இல்லை என்று தெரிந்தால் காதலுக்கு பிரச்சனை வரும் கருதுகின்றனர். முஸ்லீம் பழக்கவழக்கங்களை தெரிந்து கொள்வதற்காக ஜெய் தனக்கு தெரிந்த முஸ்லீம் நண்பர் வீட்டில் அடிக்கடி சென்று வருகிறார்.

இந்நிலையில் ஜெய்க்கும், நஸ்ரியாவுக்கு அவரவர் வீட்டில் வரன் தேடுகின்றனர். எனவே இருவரும் ஒருவருக்கொருவர் தான் முஸ்லீம் இல்லை என்ற உண்மையை கூறும்போது, உண்மையில் இருவருமே பிராமணர்கள் என்ற உண்மை தெரிய வருகிறது. இவர்களது காதலை இருவர் வீட்டிலும் ஏற்றுக்கொள்ள, திருமணத்திற்கு ஏற்பாடு செய்யும் நேரத்தில், திருமணத்தில் திடீரென ஒரு சிக்கல் வருகிறது. அந்த சிக்கலை கடந்து ஜெய் - நஸ்ரியா சேர்ந்தார்களா? என்பதே க்ளைமாக்ஸ்.



முஸ்லீம் பெண், பிராமண பெண் என்று எந்த வேடத்திலும் வந்தாலும் அவருடைய அழகை ரசிக்கலாம்.

முதல்பாதியை விறுவிறுப்பாகவும், காமெடியாகவும் கதையை கொண்டு சென்ற இயக்குனர், இருவருமே முஸ்லீம் இல்லை என்று தெரிந்தவுடன் எப்படி கதையை நகர்த்துவது என புரியாமல் தடுமாறியிருக்கிறார். இரண்டாம் பாதியின் வலுவற்ற திரைக்கதையும், சொதப்பலான க்ளைமாக்ஸும் படத்தின் மைனஸ்கள்.

இந்த திருமணத்தில் சுவாரஸ்யம் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Square Reader



ஸ்வைப் கார்ட், சைன் கார்ட் உட்பட்ட பின்கார்ட்களையும், சிப்களையும் வாசிப்பதற்கு Square Reader எனும் புதிய கருவி அறிமுகம் செய்யப்படவுள்ளது.

பிரித்தானியாவில் பாவனையிலுள்ள பின்கார்ட்களை கருத்தில் கொண்டு எதிர்வரும் 2015ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இக்கருவி அறிமுகம் செய்யப்படவுள்ளது.

## குழந்தைகளுக்கான டேப்லட்



கூகுளின் பிந்திய இயங்குதளப்பதிப்பான Android 4.4 இல் இயங்கக்கூடிய யேடிை துச வுயடிடநவ எனும் குழந்தைகளுக்கான புதிய டேப்லட் அறிமுகம் செய்யப்படவுள்ளது. 270 டொலர்கள் பெறுமதியான இந்த டேப்லட்டில் Tegra 3 Processor, பிரதான நினைவமாக 2GB RAM மற்றும் சேமிப்பு நினைவகமாக 16GB தரப்பட்டுள்ளது.

மேலும் 8 அங்குல அளவு, 1920 x 1200 Pixel Resolution உடைய தொடுதிரையினைக் கொண்டுள்ள இந்த டேப்லட்டில் 5 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமெரா, 2 மெகாபிக்சல்களை உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கமெரா என்பனவும் தரப்பட்டுள்ளன.

## வளைந்த தொலைக்காட்சி



LG நிறுவனம் 105 அங்குல அளவுடைய பெரிய தொலைக்காட்சி ஒன்றினை அறிமுகம் செய்துள்ளது. முதன் முதலில் தென்கொரியாவில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ள இத்தொலைக்காட்சியானது, வளைந்த மேற்பரப்பினை உடையதுடன், அல்ட்ரா HD தொழில்நுட்பத்தினை உள்ளடக்கியுள்ளது. அத்துடன் 4K Resolution, 21:9 அளவிடை என்பனவற்றினையும் 7.2 சேனல் ஸ்பீக்கர் சிஸ்டத்தினையும் கொண்டுள்ளது. பலத்த வரவேற்பைப் பெற்றுள்ள இத்தொலைக்காட்சிகள் இதுவரை 117,000 டொலர்கள் பெறுமதிக்கு முன்பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## 100 மடங்கு வேகத்தில்

தற்போது பாவனையில் காணப்படும் 3G, 4G மொபைல் வலையமைப்புக்களை விடவும் அதிக வேகமான 5G வலையமைப்பு 2020ம் ஆண்டில் லண்டனில் அறிமுகம் செய்யப்படவுள்ளதாக லண்டன் மேஜர் Boris Johnson அறிவித்திருக்கின்றார்.. அதாவது



4G வலையமைப்பினை விடவும் 100 மடங்கு வேகம் அதிகம் கொண்ட வலையமைப்பே அறிமுகமாகவுள்ளது.

## DNA மைக்ரோசிப்



பிரித்தானியாவைச் சேர்ந்த Christofer Toumazou எனும் ஆராய்ச்சியாளர் DNA மைக்ரோசிப்பினை உருவாக்கி சாதனை படைத்துள்ளார். இந்த படைப்பிற்கு ஐரோப்பியன் இன்வென்டர் விருது வழங்கப்பட்டுள்ளது. இச்சிப்பினை பயன்படுத்தி பரம்பரை அலகுகளில் காணப்படும் மரபணுக்குறைபாடுகளை 20நிமிட நேரத்தினுள் இனங் கண்டுகொள்ள முடியும்.

## ஃபேஸ்புக் நீக்கியதா!!

பேஸ்புக் ஆனது மொபைல் சாதனங்களுக்கான அப்பிளிக்கேஷனை வெளியிட்டுள்ளமை யாவரும் அறிந்ததே. தற்போது இந்த அப்பிளிக்கேஷனில் இருந்து குறுஞ்செய்தி அனுப்பும் வசதியை நீக்கவுள்ளதாக பேஸ்புக் நிறுவனம் அறிவித்துள்ளது. அதற்குப் பதிலாக குறுஞ்செய்திகளை அனுப்புவதற்காக மட்டும் அந்நிறுவனத்தினால் Facebook Messenger எனும் புதிய அப்பிளிக்கேஷன் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

# விளையாட்டுப் பையன்


## விண்டோஸ் - 08



விண்டோஸ் 7 மற்றும் விஸ்டாவிலிருந்து வந்தவர்களுக்கு விண்டோஸ் 8-ல் பல விடயங்கள் புதிதாகவே தெரியும். அதற்காக சில ஷார்ட் கட் கீகள் கொடுக்கப்பட்டுள்ளன.

- Windows Key + X - Control Panel, Task Manager, File Explorer and Command Prompt ஆகியவற்றுடன் அடங்கிய மெனு ஒன்று பாப் அப் ஆகி, நாம் தேர்வு செய்திடத் தயாராய் கிடைக்கும்.
- Windows Key + Q - Application Search Tool ஒன்று நமக்குக் கிடைக்கும். நாம் இன்ஸ்டால் செய்திட்ட அனைத்து சாப்ட்வேர் அப்ளிகேஷன் புரோகிராம்களிலும் நமக்குத் தேவையானதைத் தேடிக் கண்டறியும் திறனை இது வழங்குகிறது.
- Windows Key + C - விண்டோஸ் 8 சிஸ்டத்தில் புதிதாக இணைக்கப்பட்டுள்ள சார்ம்ஸ் மெனு (charms menu) வினை இது தரும்.
- Windows Key + I - திறந்து பயன்படுத்திக் கொண்டிருக்கும் அப்ளிகேஷனுடைய செட்டிங்ஸ் மெனுவினை அணுக இது அனுமதி தரும். எடுத்துக் காட்டாக, நீங்கள் குரோம் பிரவுசர் திறந்து பயன்படுத்திக் கொண்டிருந்தால், இந்த கீகளை அழுத்துகையில், Internet options செட்டிங்ஸ் மெனுவினை இது தரும்.
- Windows Key + D - அடிக்கடி பயன்படுத்தும் ஷார்ட் கட் கீ இது. இது டெஸ்க்டாப் நிலையை நமக்குத் தரும். விண்டோஸ் 7 சிஸ்டத்திலும் இதே செயல்பாடு இருப்பது குறிப்பிடத்தக்கது.
- Windows Key + M - டெஸ்க்டாப் நிலையைத் தருவதுடன், அதில் அப்போது திறந்து இயங்கிக் கொண்டிருக்கும் விண்டோக்களை மினிமைஸ் செய்வதற்கான திறனைத் தருகிறது.
- Windows Key + Tab - மேற்கொள்ளும் பல்வேறு அப்ளிகேஷன் பணிகளை மாற்றிக் கொள்ளும் வசதியைத் தரும் பாப் அப் கட்டம் கிடைக்கும்.
- Windows Key + W - அனைத்து தேடும் பயன்பாட்டினை இயக்குகிறது. search settings அமைத்துத் தருகிறது. இதன் மூலம் பயனாளர் விண்டோஸ் 8 சிஸ்டத்தின் குறிப்பிட்ட அமைப்பினை எளிதாகக் கையாளலாம்.
- Windows Key + F - அனைத்து தேடும் பயன்பாட்டினை இயக்குகிறது. இங்கு அனைத்து பைல்களைத் தேடும் வாய்ப்பு தரப்படுகிறது. இதன் மூலம் பயனாளர் டாகுமெண்ட், இமேஜஸ், ஆடியோ மற்றும் பிற பைல்களைத் தேடி அறிந்து சேவ் செய்திடலாம்.
- Windows Key + E - My Computer, File Explorer பிரிவைக் காட்டுகிறது. இதன் மூலம் ஹார்ட் டிஸ்க்கில் உள்ள அனைத்து ட்ரைவ்களையும் கையாளலாம்.

## No Virus Thanks



விண்டோஸ் இயங்குதளத்தினைக் கொண்டு இயங்கும் கணனிகளில் மல்வேர்கள் அல்லது வைரஸ்கள் தாக்கிய பின்னர் சில கோப்புக்கள், கோப்புறைகளை அழிக்கவோ, நகல் செய்யவோ அல்லது இடம்மாற்றவோ முடியாமல் போகும்.

இதன்போது "file is currently in use", "The file is in use by another program or user", "folder or file is open in another program", "Cannot delete file: Access is denied", "Make sure the disk is not full or write-protected" போன்ற செய்திகள் தோன்றுவதை அவதானித்திருப்பீர்கள்.

இவ்வாறான கோப்புக்கள், கோப்புறைகளை கையாள்வதற்கு NoVirusThanks எனும் மென்பொருள் உதவுகின்றது. இம்மென்பொருளை பயன்படுத்தி ஸ்கான் செய்வதன் மூலம் குறித்த கோப்புக்கள், கோப்புறைகளை இனங்கண்டு அவற்றினை அழிக்கவோ, பெயரை மாற்றவோ, இடம் மாற்றவோ அல்லது நகல் செய்யவோ முடியும்.

# ஒரு கொலையின் கதை

3-1 மாயன்

## திருகோணமலையில் கொல்லப்பட்ட இளைஞன் ஒருவனின் கொலைகளுடன் கூடிய உண்மைகளை அடிப்படையாகக் கொண்ட கதையின் இறுதிப்பாகம்

**முன்கதைச் சுருக்கம்:**

- அந்த இளைஞன் ஏன் கொல்லப்பட்டான் என்பதைக் கண்டறிவதற்கு புலனாய்வாளர்களுக்கு முதலில் எவ்வித சான்றுகளும் கிடைக்கவில்லை.
- பின்னர் கொல்லப்பட்ட இளைஞனின் கைகளுக்குள் சுருட்டப்பட்ட நிலையில் கிடைத்த தொலைபேசி மீள நிரப்பு அட்டையொன்றின் உதவியுடன் இருவர் கொலைக்கான சந்தேக நபர்களாக சந்தேக வட்டத்துக்குள் கொண்டு வரப்பட்டனர்.
- அவர்களைப் பின்தொடர்ந்த அதேவேளை அவர்களது தொடர்பாடல்கள் யாவும் ஒட்டுக்கேட்கப்பட்டதுடன் மேலும் பல நடவடிக்கைகளால் அவர்களே இக்கொலைச் சந்தேகநபர்கள் என தெளிவாகத் தெரிந்துகொண்ட புலனாய்வாளர்கள் அவர்கள் இருவரையும் கைது செய்தனர்.
- அதனைத் தொடர்ந்து அவர்களுக்கும் கொல்லப்பட்டவருக்கும் இடையிலான தொடர்பு என்ன என்பதையும் கொலைக்கா அடிப்படை எதுவென்பதையும் கண்டுகொள்ளும் முயற்சியில் ஈடுபட்ட புலனாய்வாளர்களுக்கு பல தடயங்கள் கிடைத்தன.
- கொலைக்கு பயன்படுத்தப்பட்ட கத்தி, கொலையின் போது அணிந்திருந்த இரத்தம் தோய்ந்த ஆடைகள், மற்றும் சாட்சிகளாக அவர்களது நண்பர்கள் அவர்களிடமிருந்த சில சான்றுப் பொருட்கள் என்பன கைப்பற்றப்பட்டன
- இதேவேளை சந்தேகநபர் ஒருவரின் கணணியும் புலனாய்வாளர்களால் கைப்பற்றப்பட்டிருந்தது. அக்கணணியினை ஆய்வு செய்த போது........

### பாகம் 3 - இறுதி அத்தியாயம் ஆரம்பம்

கணணி வித்துவரான புதிய புலனாய்வாளர் ஒருவரின் கைகளில் அந்த மடிக்கணணி அமைதியாக இருந்தது.

அந்த மடிக்கணணியினை திறப்பதற்கான கடவுச் சொற்கள் அனைத்தும் அவர்களுக்குத் தெரிந்திருந்தன. அவற்றை அவர் அழுத்த... கடவுக் கதவின் ஊடாக திறந்த அந்தக் கணணியின் திரையில் இருந்த ஒரு முக்கியமான கோப்பு அவர்களுக்கு அந்தக் கொலையின் மூன்றாவது சந்தேகநபரை வெளிக்காட்டியது.

ஆம்.... அந்தக் கோப்பில் கொலைச் சந்தேக நபரான அலிகவிற்கும் கொலையுண்ட கேதீஸின் மனைவிக்கும் ஏற்பட்டிருந்த தொடர்புகள் தொடர்பான பல விடயங்கள் அவர்களின் முன்னே விரிந்தன.....

இக்கொலையின் முக்கோணத்தில் மூன்றாவது புள்ளியில் இன்று வரை நிரப்பப்படாதிருந்த வெற்றிடம் நிரப்பப்பட்டது.

ஆம்...... கேதீஸைக் கொலை செய்யக் காரணம் எதுவாக இருக்கலாம் என ஆராய்ந்து வந்த புலனாய்வாளர்களின் கேள்விக்கு பதில் கிடைத்தது..... இந்தக் கொலையின் இறுதி முடிச்சும் அவர்கள் முன்னே அவிழ்ந்தது....

விறல்மிக்க உதவிக் காவல் அத்தியட்சகரின் முன்னே அவர்கள் கூடியிருந்தனர்.

கொலை தொடர்பான பெரும்பாலான விடயங்களை அவர்கள் தொகுத்து அறிக்கையாக்கியிருந்தனர். அந்த அறிக்கை அனைவருக்கும் வழங்கப்பட்டு இருந்தது. அத்தியட்சகர் மெதுவாகத் தனது குரலைக் கனைத்தார். அவ்வொலி அந்த அறையில் இருந்த அமைதியைக் கலைத்தது.

"அடுத்த கட்ட நடவடிக்கை என்ன என்பதை நீங்களும் அனுமானித்திருப்பீர்கள்" அவர்கள் அமைதியாகவே இருந்தார்கள்......

" கொலைச் சந்தேக நபர்கள் இருவர் தொடர்பாகவும் பெரும்பாலான விடயங்கள் பூர்த்தியாகி விட்டன.... இனி தற்போது கண்டு பிடிக்கப்பட்ட மூன்றாவது சந்தேக நபரான கொலையுண்டவரின் மனைவியான ஹிம்சா தொடர்பாகவும் அவளுக்கு இக்கொலையிலுள்ள தொடர்பு என்ன என்பதையும் ஆராய வேண்டும்" ... புலனாய்வாளர்களின் அமைதி அதனை ஆமோதித்தது... அவர்கள் அதற்குக் தயாரானார்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வியல் -12

# பிரச்சினைகளும் இலட்சியங்களும்



(வி.என்.சந்திரகாந்தி)

எமது நாளாந்த வாழ்க்கை முறையை சுமூகமாக எடுத்துச்செல்ல இயலாதவாறு தடைபோடவல்ல சவால்களைத்தான் நாம் பிரச்சினைகள் என்று கருதுகின்றோம். ஒவ்வொருவருக்கும் வெவ்வேறுபட்ட சவால்கள் இருக்கின்றன. ஒரு குடும்பஸ்தன் எதிர்கொள்ளும் சவால்கள் வேறு...... ஒரு அரசியல்வாதி..... ஒரு உத்தியோகத்தன்..... ஒரு மாணவன்.... என்று ஒவ்வொருவரும் எதிர்கொள்ளும் சவால்கள் வேறு வேறானவை!

அப்படிப்பட்ட சவால்கள் அல்லது பிரச்சனைகள் வெவ்வேறு வகைப்பட்டனவாகவும் அமையும்.

நன்றாக ஓடிக்கொண்டிருக்கும் ஒரு வியாபார தலம் திடீரென நட்டத்துக்கு அல்லது வேறு பாதிப்புக்களுக்கு உள்ளாகல்.... ஏதாவது ஒரு காரணத்தால் நாம் செய்து வந்த தொழிலை இழத்தல்.... எம்மேல் அன்பு பாராட்டி எமக்கு உதவிகள் புரிந்து வந்த நபர்களின் பிரிவு அல்லது உயிர் இழப்பு..... காரணமில்லாமல் எதிரிகள் தோன்றல்..... அரசியல் பகை...!

இப்படிப்பட்ட பிரச்சனைகளுக்கு இலகுவில் ஆளாகி தமது வாழ்க்கையை தொலைப்பவர்கள் பெரும்பாலும் அறிவற்ற வர்களாகவும், உடல் பலவீனமானவர்களாகவும் திட சிந்தனை அற்றவர்களாகவும் உறுதியான செயற்பாடு குன்றியவர்களாகவும் இருப்பார்கள். பிரச்சனைகள் சிறியனவாக இருந்தாலும் கூட அவை இலகுவில் அவர்களை ஓரம் கட்டி வாழ்க்கைக் கடலில் மூழ்கடித்துவிடும்!

ஆனால் மலையத்தனை பிரச்சனைகளை எதிர்கொள்ள நேர்ந்தாலும் அவற்றிற்கு சமாதிகட்டி விட்டு ஒன்றும் அறியாதவர்கள் போல் செல்லும் ஜாம்பவான்களும் நம் மத்தியில் இருக்கின்றார்கள்.

உண்மை..... சத்தியம்.... திடசங்கற்பம்.... மதிநுட்பம்.... நல்நடத்தை.... உடற்பலன் ஆகிய தராதரங்களைக் கொண்டவர்களே அந்த வெற்றியாளர்கள்.

பிரச்சனைகளோடு இணைந்து கைகோர்த்து நடந்து உரிய நேரத்தில் அவற்றை ஆழியில் புதைத்துவிட்டு செல்ல அவர்களால் முடிகின்றது!

சரி..... இப்போ பார்ப்போம்.... நாம் பிரச்சனைகளை எதிர்கொள்ள முடியாத நலிவுற்றவர்களாக இருக்க வேண்டுமா...? அல்லது பிரச்சனைகளுக்கு முடிவு கட்டக்கூடிய வெற்றியாளர்களாக இருக்க வேண்டுமா?

நிச்சயமாக நீங்கள் இரண்டாவது தெரிவைத்தான் விரும்புவீர்கள்...!

ஏனென்றால் அடிப்படையில் நீங்கள் ஒவ்வொருவருமே மனத்தாலும் புத்தியாலும் சித்தத்தாலும் உயர்ந்தவர்கள்.

ஆன்மா என்கின்ற அதீத சக்தி உங்களுக்குள் விழிப்புடன் இருகின்றதென்பதை நம்புங்கள்!

இப்போ நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் ஒரு உறுதியான தீர்மானத்துக்கு வருவதே...!

எமக்கென நாம் உயர்ந்த இலட்சியங்களை வகுத்துக்கொள்ள வேண்டும். அந்த இலட்சியத்தை நோக்கிய பாதையில் உண்மை சத்தியம் நேர்மை ஆகிய நெறிகளில் நின்று வீறுநடை பயில வேண்டும். அப்போது எமக்குள்ளாக ஒரு மனோபலம் உண்டாகும். அது காரிய சித்திக்கு வழிவகுக்கும். இலட்சியத்தை நோக்கிய எமது முயற்சிகளுக்கு வெற்றி கிட்டும் போது எமது எண்ணத்தில் மகிழ்ச்சி உண்டாகின்றது.....

எமது இலட்சியம் எமக்கு மட்டுமன்றி எம்மைச் சார்ந்தவர்களுக்கும் நன்மை பயக்குமாதலால் அவர்களுடைய பேராதரவு எங்களுக்கு கிட்டும்.

பிரச்சனைகளை நீங்கள் கைதட்டி அழைத்தாலும் அவை உங்களைக் கண்டு அஞ்சும்!

இலட்சியத்துக்காக வாழ்ந்த மனிதர்களை சரித்திரம் ஒரு போதும் மறப்பதில்லை.

கிரேக்க வேதாந்த ஞானி சாக்ரெடிஸ், யேசுநாதர், ஆபிரகாம் லிங்கன், ஆபிரிக்க அமெரிக்கர் விடுதலை பிதா மார்டின் லூதர் கிங், அகண்ட பாரதத்தின் தேசிய தலைவர் மஹாத்மாகாந்தி.... இவர்கள் அனைவருமே பல்வேறுபட்ட பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்தும் தமது இலட்சியத்திலிருந்து சிறிதளவும் நழுவாது வாழ்ந்த தலைவர்கள். இவர்கள் அத்தனை பேருமே கொலை செய்யப்பட்டார்கள். மரணத்துக்குப் பின்னரும் அவர்களது இலட்சியமும் புகழும் பேசப்பட்டன.

மஹாத்மா காந்தியின் மரணச் செய்தியைக் கேட்டு அமெரிக்க ஜனாதிபதி ஹாரி ட்ருமன் 'அகில உலகும் இந்தியாவுடன் சேர்ந்து வருந்துகின்றது' என்ற செய்தியை அனுப்பியிருந்தார். காந்தியின் முதற் போர்க்களமாகிய தென்னாபிரிக்காவிலிருந்து அவரை வெறுத்த தளபதி ஜான் ஸ்மட், 'நம்முடன் இருந்த இளவரசர் பிரிந்து விட்டார்' என்ற புகழுரையை அனுப்பியிருந்தார். இத்தாலியில் வாட்டிகன் போப்பாண்டவர் பையஸ் VII தனது இரங்கல் மொழியில் 'கிறிஸ்தவ மதத்தின் நண்பர், சமாதானத்தின் சீடர் ஒருவர் மறைந்தார்' என்று எழுதியிருந்தார். சீனாவும், இந்தோனேசியாவும் 'ஆசிய விடுதலையின் முதல் மூலகர்த்தா மாண்டார்' என்று கூறி அதிர்ச்சியடைந்தன!

இத் தலைவர்கள் தாம் எதிர் கொண்ட பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்த விதத்தில் தான் அவர்களது வெற்றி தங்கியுள்ளது. பாரத பிரதமர் இந்திராகாந்தியும் ராஜீவ்காந்தியும் கூட கொலை செய்யப்பட்ட தலைவர்கள் பட்டியலில் இருக்கிறார்கள். அவர்கள் பற்றி பேசப்படுவதில்லையே!

என்வே எமது வாழ்க்கையின் வெற்றி பிரச்சனைகளுக்கு நாம் முகம் கொடுக்கும் விதத்திலேயே தங்கியிருக்கின்றது!

# குறுக்கெழுத்து புதிர் 020

முடிவுத் திகதி : 08.08.2014

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | ம | 20 | | 2 க | | | |
| 3 | | பே | | 4 | | | | ■ |
| | ■ | 5 | | லை | 24 பு | ■ | ■ | 18 |
| 6 | 21 | ளி | 7 | | | | | 19 |
| ரா | | 8 | | 17 | | 23 | 16 | லை |
| 22 | 9 | | ■ | வி | | | | |
| 10 | | | ■ | | 11 | | | |
| | ■ | | 12 | | | | | |
| | 13 | | | 14 ம | | 15 | | உ |

*விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி :*
*மலைமுரசு. இல - 159ஏ,*
*கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.*

## மேலிருந்து கீழாக

1. தமிழர்களின் பாரம்பரிய கூத்துக்களில் இதுவம் ஒன்று.
4. இது கொதிக்கத்தான் இவ்வளவு பாடு.
8. ஒளித்து திரிபவர்களை பிடிக்க விடப்படும் ஆணை.
16. பெண்ணின் இதனை நிலவுக்கு ஒப்பிடுவர். - குழம்பியுள்ளது.
17. இலங்கை அரசின் கிராம எழுச்சித் திட்டம்.
18. ஆதி மனிதனின் வீடு.
19. தாண்டவக்கூத்தாடுபவர்
20. இவ்வாசை உள்ளவன் நியாயவாதியாக இருக்க மாட்டான்.
21. முஸ்லீம்களின் தொழுகை நடைபெறும் இடம் - மேலிருந்து கீழாக
22. காத்தோட்டமாய் இருப்பதற்கு வீட்டில் இது அமைக்கப்படும்.
23. சூரியனைக் குறிக்கும் இது மாதத்தையும் குறிக்கும்.
24. சிலை செய்யும் கலைகளில் இதுவும் ஒன்று.

- விடைகளை இங்கு வெளியாகி உள்ள கூப்பனில் எழுதி கத்தரித்து அனுப்பவும்.
- முற்றிலும் சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ருபா 150, ருபா 100, ருபா 50 பெறுமதியான கொள்வனவு கூப்பன் வழங்கப்படும்.

## இடமிருந்து வலமாக

1. அர்ஜுனனின் இது கண்டு சத்துருக்கள் அஞ்சுவர்
2. நாரதரின் வேலை.
3. தவளையின் இளமைப் பெயர் - குழம்பியுள்ளது.
4. நிலப்பொந்தினுள் முட்டை இடும் பிராணி.
5. நீரிலும் நிலத்திலும் வாழும் உயிரினம் ஒன்று.
6. ஆறுமுகன் மணந்த காட்டுவாசிப் பெண்.
7. துடைப்பம் என்பதன் பேச்சுத்தமிழ்
8. எதிர்த்தரப்பினரை நீதிமன்றில் குறிக்கும் சொல்.
9. வயதெல்லை கிடையாத இவ்வேலையை செய்ய அம்மா அடிக்கடி சத்தம் போடுவாள்.
10. உடல் கூனல் - திரும்பியுள்ளது.
11. ஊருக்குப் போன மகன் அம்மாவுக்கு இது அனுப்பினான். குழம்பியுள்ளது.
12. சதி வேலை புரிபவர்களை இவ்வாறும் அழைக்கலாம்.
13. பெண்கள் இதனாலும் சிவப்பர் - திரும்பியுள்ளது.
14. பாலைவனத்தில் அதிகம் காணப்படுவது.
15. பேரன் மீது கொண்ட காதலால் தாத்தா இதை எழுதி வைத்தார். - திரும்பியுள்ளது.
16. சகுணி விரித்த சதி ......... யினுள் விழுந்ததினால் தான் த்ரௌபதிக்கு அந்நிலை உருவானது.

### [illegible] விடைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 இ | 19 ரா | வ | ண | ன் | 20 வெ | ட் | டு | ■ |
| ந் | 2 மா | 3 தா | ய | ம் | கு | 4 தா | ம் | 24 ம |
| 5 தி | ட் | 22 டா | 23 ணி | ■ | ளி | 28 ர | 21 தி | லை |
| 6 ய | ம | ன் | கா | 25 நெ | ■ | ம் | மி | த் |
| ர் | ■ | ■ | ங் | ட் | 7 ன் | ம | ர் | த |
| 8 கு | ள | ம் | 9 க | டு | கு | ■ | 10 தி | ல் |
| 11 ரு | த் | தி | ர | ன் | 13 அ | க | ழ் | 27 வு |
| 12 தி | ரு | ம | ந் | 26 தி | 14 ர | 15 ம் | ர | ம |
| 16 சை | வ | ம் | ■ | 17 [illegible] | [illegible] | ■ | 18 [illegible] | சு |

# தேசிய SMS செய்திகள்

- **இலங்கை, போலந்து இடையே புதிய சேவை**

இலங்கை போலந்து நாடுகளுக்கிடையிலான விமான சேவைகளுக்கான இரு நாட்டு வர்த்தக ஒப்பந்தமொன்று அண்மையில் இரு நாட்டு முக்கிய பிரதிநிதிகளால் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

- **விசாரணைக்குழு முன் சாட்சியமளிக்கத் தயார்**

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சாட்சியமளிக்குமாறு விசாரணைக்குழு த.தே.கூ க்கு அழைப்பு விடுத்தால் இரா.சம்பந்தன் எம்.பி. தலைமையிலான குழு ஏதோவொரு வழியில் சாட்சியமளிக்கத் தயாராகவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

- **யாழ்ப்பாண ஊடகவியலாளர்கள் ஆர்ப்பாட்டம்**

இலங்கையின் வடக்கே ஊடகங்களும், ஊடகவியலாளர்களும் எதிர்கொள்ளும், அச்சுறுத்தல்கள் மற்றும் வன்முறைகளை எதிர்த்தும், அவற்றுக்குக் கண்டனம் தெரிவிக்கும் வகையிலும் யாழ்ப்பாணத்தில் பேருந்து நிலையத்திற்கு எதிரில் வியாழனன்று ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றுள்ளது.

- **15 பாடசாலைகள் மூடப்படுகின்றன.**

உயர்தரப் பரீட்சை விடைத்தாள்கள் திருத்தும் பணிகளுக்காக ஆகஸ்ட் 30ம் திகதி முதல் செப்டம்பர் 12ம் திகதி வரை கொழும்பு ரோயல் கல்லூரி, விசாகா கல்லூரி உள்ளிட்ட 15 பாடசாலைகள் மூடப்படவுள்ளன.

- **குடியிருப்புகளுக்கு அனுமதி தாருங்கள்**

28 வருடங்களுக்கும் மேலாக வாழ்ந்துவருகிறோம். எமது குடியிருப்புகளுக்கு அனுமதி தாருங்கள் என முத்தையன்கட்டு இடதுகரை வாழ் தமிழ் உறவுகள் கோரிக்கை விடுத்தவண்ணம் உள்ளனர்.

- **முதலாம் உலகப்போர் நினைவு பிரார்த்தனையில் மகிந்த பங்கேற்கமாட்டார்.**

இலங்கை அரசாங்கம் போர்க்குற்றச்சாட்டுகளை எதிர்நோக்கவேண்டி உள்ளதால் அடுத்தவாரம் கிளாஸ்கோவில் நடக்கவுள்ள கொமன்வெல்த் முதலாம் உலகப்போர் நினைவு பிரார்த்தனையில் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச பங்கேற்கமாட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

- **7 பேருக்கு மரண தண்டனை**

கடந்த 2006 ஆம் ஆண்டு இளைஞன் ஒருவரை கொலை செய்த குற்றத்திற்காகவே இந்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது

- **புகலிடக் கோரிக்கையாளர்களில் பலருக்கு மன அழுத்தங்களும், உடற்காயங்களும்**

அவுஸ்திரேலிய கேர்ட்டின் தடுப்பு முகாமில் வைக்கப்பட்டுள்ள 153 இலங்கை தமிழ் புகலிடக் கோரிக்கையாளர்களில் 80 வீதமானவர்கள் மன அழுத்தத்திற்கு உட்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

- **கிளாஸ்கோ 2014: இலங்கை வீராங்கனை சந்திரிகா சுபாஷினி**

400 மீட்டர் அரையிறுதிப் போட்டி வரை முன்னேறியிருந்த இலங்கையின் ஓட்ட வீராங்கனை சந்திரிகா சுபாஷினியால் இறுதிப் போட்டிக்குள் நுழைய முடியவில்லை. எனினும், இந்தப் போட்டியில் இந்த ஆண்டில் தனது சிறந்த ஓட்ட நேரத்தை அவர் பதிவு செய்துள்ளார்.

- **போர்க் கப்பல் இலங்கைக்கு வருகை**

பங்களாதேஷ் கடற்படைக்கு சொந்தமான இரண்டு கப்பல்கள் 31.07.2014 அன்று கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தன. ஒஸ்மான் என்ற கப்பலில் 250 கடற்படையினரும், மதுமதி என்ற கப்பலில் 70 கடற்படையினரும் வருகை தந்துள்ளனர்.

- **மனைவியை கொலை செய்து விட்டு தற்கொலை செய்த கணவன்**

வவுனியா மாகாரம்பைக் குளம் பகுதியில் தனது மனைவியை கோடரியால் வெட்டி கொலை செய்துவிட்டு தனது மாமா (65) வையும் மற்றும் மாமி (55) யையும் தாக்கிவிட்டு மரமொன்றில் தூக்கிட்டு தற்கொலை சந்தேக நபரும் தற்கொலை செய்துகொண்ட சம்பவம் 31.07.2014 அன்று 11.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

- **பிரான்சில் தமிழ் இளைஞன் சடலமாக மீட்பு**

பிரான்ஸைச் 23 வயதுடைய இராஜதுரை லஜீவன் எனும் இலங்கை தமிழ் இளைஞன் ஒருவருடைய சடலம் ஆற்றிலிருந்து நேற்று பிரான்ஸ் காவல் துறையினரால் மீட்கபட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி

01. மாம்பழம் - சதை எனின், தோடம்பழம் ................
1. சுளை 2. வித்து 3. சோறு

02. ஆண்டுக்கொரு தடவை பூத்துக் காய்க்கும் மரம் எது?
1. வேம்பு 2. வாழை 3. தென்னை

03. புத்தகம் என்பதுடன் நெருங்கிய தொடர்புடைய சொற் கூட்டத்தை தெரிவு செய்க.
1. விளையாட்டு, எழுத்து, சொற்கள் 2. பக்கம், பறக்கும், சொற்கள்
3. அறிவு, சொற்கள், பாடங்கள்

04. எனது அருகில் இருப்பவர் எனது அம்மா. ஆனால் நான் அவரின் மகன் அல்ல. என்றால் நான் யார்?
1. சிறுவன் 2. மகள் 3. ஒருவர்

05. நான் கடித்தாலும் கடிபட மாட்டேன். பிடித்தாலும் பிடி பட மாட்டேன். ஆனால் கண்ணில் காண முடியும். நான் யார்?
1. காற்று 2. தண்ணீர் 3. கல்

06. பாம்பும் கீரியும் போல என்பதன் பொருள்
1. ஒற்றுமை 2. பொறுமை 3. மிருகம்

பின்வரும் பாடலை வாசித்து கீழுள்ள இரு வினாக்களுக்கு விடையளிக்குக.

பார்க்க அழகு விசிறி
பனை ஓலை விசிறி
வெப்பம் போக்கும் விசிறி
விரும்பித் தேடும் விசிறி

07. பனை ஓலை விசிறி எதனைப் போக்க உதவுகின்றது?
1. அழகை 2. குளிரை 3. வெப்பத்தை

08. விரும்பித் தேடுவது எதனை
1. பனை ஓலையை 2. பனை ஓலை விசிறியை
3. அழகு விசிறியை

09. கீழ்வரும் பாடலின் சரியான ஒழுங்குவரிசையைத் தெரிவு செய்க.

அ. சொட்டுதம்மா எச்சிலும்
ஆ. துட்டுக் கெங்கே போவது
இ. ரொட்டி என்று சொன்னதும்
ஈ. மட்டில்லாத ஆசைதான்

1. ஆ, அ, ஈ, இ 2. இ, ஈ, அ,ஆ 3. அ, இ, ஆ, ஈ

10.. இரண்டு நாக்கினைக் கொண்ட பிராணி எது?
1. உடும்பு 2. தவளை 3. முதலை

11. நீர் அருந்தாமல் வாழும் பிராணி எது?
1. பாம்பு 2. பல்லி 3. உடும்பு

12. "பச்சைக் கம்பளம் விரித்தது போல் பசுமையாகக் காணப்பட்டது" எனும் வாக்கியத்தில் பச்சைக் கம்பளம் என்பது?
1. உவமையணி 2. இரட்டைக்கிளவி 3. பயனிலை

13. உப்புப் பைக்கற் ஒன்றை வாங்கும் போது அவ்வுறையில் இவ்வாறான குறியீடு காணப்பட்டால், இக்குறியீடு குறிப்பது?



1. ஈரலிப்பு உள்ள இடத்தில் வைக்க வேண்டாம்.
2. குழாய் நீரைச் சுத்தமாக பயன்படுத்துக.
3. உப்பை கழுவாமல் பயன்படுத்துக.

14. "புத்திக் கூர்மையற்ற ஒருவருக்கு உயர் பதவி கிடைத்தால் அவர் இறுமாப்புக் கொள்வது" இதனைக் கூறும் பழமொழி எது?
1. உயர, உயர பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா.
2. அர்ப்பனுக்கு வாழ்வு வந்தால் அர்த்த ராத்திரியில் குடை பிடிப்பான்.
3. வல்லவனுக்குப் புல்லும் ஆயதம்.

15. காலையிலும், நண்பகலிலும் கடிக்கும் நுளம்பின் பெயர் என்ன?
1. கியுலக்ஸ் 2. ஈஸ்ட், ஈஜிப்டஸ் 3. அனோபிலிஸ்

16. மின்னை அளக்கும் கருவியின் பெயர் என்ன?
1. அம்பியர்மானி 2. மின் அளப்பான் 3. மின்மானி

17. எறும்பு ஒன்று 3 நிமிடத்தில் 9மீ தூரம் செல்லும் எனின், 5 நிமிடத்தில் எத்தனை மீற்றர் தூரம் செல்லும்?
1. 12மீ 2. 15மீ 3. 27மீ

18. பரிசுப் பொதியொன்றில் ரூபா 16.25 பெறுமதியான 15 அப்பியாசக் கொப்பிகள் வீதம் 10 பொதிகள் தயாரிக்கப்பட்டன. எனின், அப்பொதிகளின் மொத்த பெறுமதி யாது?
1. ரூபா 243.75 2. ரூபா 2437.50 3. ரூபா 162.50

19. ஒருவர் 60கி.மீ தூரமுடைய ஓர் இடத்திற்குச் செல்வதற்கு 1 மணித்தியாலத்திற்கு 40கி.மீ எனும் வேகத்தில் செல்லக்கூடிய மோட்டார் சைக்கிளில் சென்றால், அவர் இத்தூரத்தை சென்றடைய எடுத்திருக்கக் கூடிய நேரம் எவ்வளவு?
1. 2 மணித்தியாலங்கள் 2. 1.3 மணித்தியாலங்கள் 3. 90 நிமிடங்கள்

20. ரூபா 164 பெறுமதியுள்ள பொருட்களை வாங்கிய தியானா ரூபா 200 இனை கொடுத்தாள். வியாபாரி அவளிடமிருந்து இன்னும் 14 ரூபாவைப் பெற்றுக்கொண்டு மிகுதிப்பணத்தைக் கொடுத்தார். அவர் கொடுத்த மிகுதிப் பணம் எத்தனை ரூபாய்?
1. ரூபா 50 2. ரூபா 22 3. ரூபா 64

21. இலங்கையின் தேசப்படத்தில் நதிகளை குறிப்பதற்கு பயன்படுத்தும் நியம நிறம் எது?
1. நீலம் 2. சிவப்பு 3. கறுப்பு

22. பண்டைய இலங்கையின் வரலாறு பற்றிக் கூறும் நூல் எது?
1. மகாவம்சம் 2. திரிபீடகம் 3. சூல தீபம்



**புலமைப் பரிசில் வழிகாட்டல்**
**ஆசிரியர் திரு.ந.மனோகரன்**

---



ம.ஹரிஸா, 8ஏ.
புனித மரியாள் கல்லூரி
திருகோணமலை.



கெ.விதுசிகன், 5பீ.
புனித சூசையப்பர் கல்லூரி
திருகோணமலை.

## சிந்திக்க .. ..

உனக்காக சிரிக்கும் உதடுகளை விட,
உனக்காக கண்ணீர் விடும் கண்களை
நேசிக்கத் தெரிந்து கொள்!
அக்கண்ணீர் உப்பாக இருந்தாலும்
உண்மையானது!

## சிறுவர் முரசு



## மூடநம்பிக்கை

குட்டிக் கதை

அரசன் ஒருவன் சகுனங்களில் ஆழ்ந்த நம்பிக்கை உடையவன். அரண்மனை சோதிடர் இந்த நம்பிக்கை மேல் குளிர் காய்ந்து கொண்டிருந்தார். ஒரு நாள் இப்படித்தான் "அரசே, அதிகாலை எழுந்தவுடன் இரண்டு காக்கைகளை ஒன்றாகப் பார்த்தால் நாள் சிறக்கும்" என்று நம்பிக்கை ஊட்டினார்.

மன்னன் சேவகனை அழைத்தான். காலையில் எங்காவது இரண்டு காக்கைகள் தென்பட்டால் உடனே தனக்குத் தெரிவிக்க வேண்டும் என்று கட்டளையிட்டான்.



அதன் பின் தினமும் பொழுது விடியும் முன்பே சேவகன் தெருவில் அலையத் தொடங்கி விடுவான். ஒரு நாள் அரண்மனக்குப் பக்கத்துத் தெருவில் இரண்டு காக்கைகள் ஒன்றாக அமர்ந்திருப்பதைக் கண்டான். "அடடா! நல்ல சகுனம், இன்று மன்னர் நமக்கு நிச்சயம் பதவி உயர்வு கொடுப்பார் என்று மகிழ்ச்சி மிகுதியுடன் மூச்சிரைக்க ஓடி வந்து மன்னரிடம் விபரம் சொன்னான்.

இதைக் கேட்டு துள்ளி எழுந்த மன்னன் சேவகனுடன் அந்த இடத்திற்கு ஓடினான். அதற்குள் ஒரு காக்காய் "வாக்கிங்" போய் விட்டது. மன்னனுக்கு மூக்கின் மேல் கோபம் வந்து விட்டது. தளபதியை அழைத்து "இந்தப் பொறுப்பற்ற சேவகனுக்குப் பத்து கசையடி கொடு" என்று உத்தரவிட்டான்.

சேவகன் சிரிக்க ஆரம்பித்து விட்டான். "இடுக்கண் வருங்கால் நகுக" என்று படித்துப் புரிந்து வைத்திருந்தவன் போலும். மன்னனுக்கு ஆத்திரம் இன்னமும் அதிகமானது. "நீ சிரித்ததற்கு சரியான காரணம் சொல்லாவிட்டால் இன்னமும் பத்து கசையடி" என்று உறுமினான்.

சேவகன் சொன்னான். "மகா மன்னரே. இன்று நான் மட்டும்தான் அதிகாலையில் இரட்டைக் காக்கைகளைப் பார்த்தேன். கை மேல் பலன் கிடைத்து விட்டது அல்லவா?" என்றான். மன்னருக்கு சுருக்கென்று ஏதோ உரைத்தது.

– மூடநம்பிக்கையில் முட்டாள்களாகக் கூடாது –

## கல்வி நன்று

சின்னத்தம்பி வாடா,
சிரித்துக் கொண்டு வாடா!
என்னுடனே ஓடி
எனக்கு முந்துவாயா?

முந்திவிட்டால் அம்மா
முழுப்பரிசும் தருவார்!
பிந்திவிட்டால் பரிசைப்
பெற்றிடுவேன் நானே!

பெற்றுவிட்டால் சிரிப்பாய்,
பெறாவிட்டால் அழாதே!
மற்று மொன்றில் பெற்றே
மகிழ்ச்சி அடைவாயே!

வெற்றி தோல்வி
விழி இரண்டு தானே!
கற்றுக்கொள்ள வேண்டும்,
கல்வி நன்று தானே!



– தாமரைத்தீவான் (சுச்சந்தீவு, கிண்ணியா) –



எத்தனை கைகள் உள்ளன? (09)

## Grammar

Very often the past simple ends in -ed.
Ex: I work in a travel agency now. Before that I worked in a shop.
We invited them to out party but they decided not to come.
She passed her examination because she studied very hard.
Some of the past simple does not end in -ed.
Ex: We saw Rose in town a few days ago.
It was cold, So I shut the window.
In questions or negatives we use did, didn't.
Ex: Did you go out last night?
I went to cinema but I didn't enjoy the film much.
They didn't invite her to the party, So she didn't go.
The past of be (am/ is/ are) is was/ were.
Ex: I was angry because they were late.
They weren't able to come because they were so busy,

Write a note to your class teacher that you are unable to attend the weekend duty, because you have maths quiz competition on that same day. Tell your excuse.

## உடல் எடை குறைக்க ஈஸி வழி

தினமும் உணவுப் பழக்கத்தில் அதிக கவனம் செலுத்தாமையே உடல் எடை அதிகரிக்க மிக முக்கிய காரணம். 7 நாட்களுக்கு உணவுப் பழக்கத்தில் சில மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டால் சுமார் 6 கிலோ வரை எடை குறையும்.



முதலாம் நாள்: ஆரஞ்சு, ஆப்பிள், அன்னாசி, மாதுளை, தர்ப்பூசணி, சப்போட்டா என்று எந்தப் பழங்களை வேண்டுமானாலும் சாப்பிடலாம். தண்ணீர் சத்து நிறைந்த தர்ப்பூசணி மிகவும் நல்லது. ஆனால் வாழைப்பழம் தவிர்க்க வேண்டும்.

இரண்டாம் நாள்: காய்கறிகளை சேர்த்துக் கொள்ள வேண்டும். ருசிக்காக உப்பு, காரம் சேர்த்துக் கொள்ளலாம். வயிறு நிரம்ப சாப்பிடலாம். காலையில் உருளைக்கிழங்கு மட்டும் சாப்பிட வேண்டும். காய்கறிகளை வேக வைத்து சாப்பிடுங்கள். எண்ணெய், தேங்காய் சேர்க்கக்கூடாது.

தொடரும்.. ..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

01. எண் பரம்பல் ஒன்றில் முதலாம் காலணை 18உம் காலணை இடை வீச்சு 12உம் ஆகும். இப்பரம்பலின் மூன்றாம் காலணையைக் காண்க?

02. ஏறுவரிசையில் ஒழுங்குபடுத்துக. 0.003Kg, 3075mg, 3.5g

03. சுருக்குக. $(x^2 - 5x + 6) / 3(x-2)$

04. கூட்டல் விருத்தி ஒன்றின் n உறுப்புக்களின் கூட்டுத்தொகை $S_n = n^2 + 2n$ என்னும் சூத்திரத்தினால் தரப்படும். இவ்விருத்தியின் முதலுறுப்பு மற்றும் பொதுவித்தியாசத்தைக் காண்க.

05. ஆள்கூற்றுத் தளம் ஒன்றில் வரையப்பட்டுள்ள முக்கோணி PQR இன் உச்சிகளின் ஆள்கூறுகள் P=(3,1), Q=(-3,4), R (-2,-5) ஆகும். P, Q, R என்பவை x, y நிரைகளாகவும், என்ற ஆள்கூறுகளை நிரல்களாகவும் உடைய தாயத்தை எழுதி அதன் வரிசையைக் குறிப்பிடுக.

06. 16% பங்குலாபம் வழங்கும் கம்பனி ஒன்றின் ரூபா 10 பங்குகளை ரூபா 12 வீதம் வாங்குவதற்கு ஒருவர் 7200 ரூபாவை முதலீடு செய்தார். பங்குகளினுடைய மொத்தப்பெயர் மாத்திரைப் பெறுமானம் யாது?


07. உருவில் காட்டப்பட்டுள்ள O ஐ மையமாக உடைய வட்டத்தில் நாண் AB க்கு சமாந்தரமாக வரையப்படும் நாண்களின் நடுப்புள்ளியின் ஒழுக்கை விபரிக்குக.

08. மெல்லிய கம்பித் தடம் ஒன்றினால் 7cm ஆரையுடைய வட்டம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இவ்வட்ட கம்பித்தடம் வெட்டி நீட்டப்பட்டு சதுர வடிவத் தடமாக மாற்றப்பட்டுள்ளது. இச்சதுர வடிவ தடத்தின் பரப்பளவு யாது?

09. 2x – 4y = 2, x + y = 4 என்னும் ஒருங்கமை சமன்பாட்டு சோடியை தீர்க்காமல் (ஒ-ல)இன் பெறுமானத்தைக் காண்க.

10. சாய்சதுரம் ஒன்றின் மூலைவிட்டங்கள் இரண்டினதும் நீளங்கள் முறையே 16cm, 12cm ஆகும். இச்சாய்சதுரத்தின் பக்க நீளத்தைக் காண்க.

11. 70m விட்டமும் 1m உயரமும் உடைய உருளை வடிவ நீர்த்தாங்கி ஒன்று உருவில் காட்டப்பட்டுள்ளது.




அ. உருளையின் அடி வட்டத்தின் ஆரை யாது?
ஆ. வட்டக் குறுக்கு வெட்டுத் தோற்றத்தின் பரப்பளவு யாது?
இ. தாங்கியின் கொள்ளளவை L இல் தருக.
ஈ. 7cm, 14cm விட்டமுடைய என்னும் இரு நீர்ப்பம்பிகள் முறையே 20m/s, 5m/s வேகங்களில் தாங்கியினுள் நீரைப் பாய்ச்சுகின்றது. தாங்கியை முற்றாக நீரால் நிரப்புவதற்கு எடுக்கும் நேரத்தைக் காண்க.

12. தற்போது தந்தையினதும் மகனினதும் வயதுகளிற்கிடையிலான விகிதம் 4 : 1 ஆகும். 6 வருடங்களுக்கு முன்னர் தந்தையினதும், மகனினதும் வயதுகளுக்கிடையிலான விகிதம் 7:1 ஆகும். தற்போது மகனின் வயது t வருடங்கள் எனின்,
அ. தற்போது தந்தையின் வயதை t சார்பில் தருக.
ஆ. 6 வருடங்களுக்கு முன்னர் தந்தையினதும் மகனினதும் வயதுகளுக்கிடையிலான விகிதத்தை சார்பில் தருக.
இ. விகிதசமன் தொடர்பை எழுதுவதன் மூலம் தந்தையினதும் மகனினதும் தற்போதைய வயதுகளைக் காண்க?
ஈ. இன்னும் x வருடங்களில் தந்தையின் வயது மகனின் வயதின் இரு மடங்காகும் எனின், x இல் ஓர் சமன்பாட்டை அமைத்து x ஐக் காண்க.

13. $2x^2 + 7x + 5$ என்ற கோவையில் x இன் குணகம் யாது?

14. $5^2/_7$ இனை முறைமையில்லாப் பின்னமாகத் தருக.

15. 12 ஐ வரவுக்குறி மூலம் காட்டுக.

## பாடம் : விஞ்ஞானம்

01. குருதியில் இருக்கும் பின்வரும் சிறுதுணிக்கை வகைகளுக்கிடையே கருவைக் கொண்டிராத சிறுதுணிக்கை வகை யாது?
1. ஒற்றைக் குழியங்கள் 2. நிணநீர்க் குழியங்கள்
3. சிறு தட்டுக்கள் 4. இயோசினாடிகள்

02. அமிழ்ந்த இலைவாய்கள் உள்ள இலைகள் எந்தச் சூழலில் வாழ்வதற்கு இசைவாக்கமடைந்த தாவரங்களில் இருக்கும்?
1. நீரினுள்ளே அமிழ்ந்திருப்பதற்கு
2. நீரின் மீது மிதந்து கொண்டு இருப்பதற்கு
3. உலர்ந்த காலநிலை இருக்கும் பிரதேசங்களில் வளர்வதற்கு
4. நல்ல ஈரலிப்பு உள்ள பிரதேசங்களில் வளர்வதற்கு

03. மனித உடலில் சமநிலையைப் பேணுவதற்குப் பின்வருவனவற்றில் எது உதவுகின்றது?
1. நத்தைச்சுருள் 2. செவிச்சிற்றென்புகள்
3. செவிப்பறை மென்சவ்வு 4. தலைவாயில் உபகரணம்

04. திரவம் ஒன்றினுள்ளே இருக்கும் புள்ளி ஒன்றில் உள்ள அமுக்கத்திற் வெல்வாக்குச் செலுத்தாத காரணி எது?
1. திரவத்தின் அடர்த்தி 2. திரவத்தின் கனவளவு
3. ஈவையினாலான ஆர்முடுகல்
4. சுயாதீன மேற்பரப்பில் இருந்து அப்புள்ளியின் ஆழம்

05. மனிதர்களிடையே காணப்படும் பரம்பரை நோயாக அமையாதது எது?
1. கழலை 2. குருதியுறையா நோய் 3. நிறக்குருடு
4. அரிவாட் கலக் குருதிச்சோகை

06. இயக்கு நரம்பின் தொழில்
1. தெறிப்பு வில்லில் மாத்திரம் பங்குபற்றல்
2. மூளையிலிருந்து முண்ணானுக்கு மாத்திரம் கணத்தாக்கங்களைக் கொண்டு செல்லல்
3. மைய நரம்புத் தொகுதியிலிருந்து தசைகளுக்குக் கணத்தாக்கங்களைக் கொண்டு செல்லல்
4. புலனங்கங்களிலிருந்து மைய நரம்புத் தொகுதிக்குக் கணத்தாக்கங்களைக் கொண்டு செல்லல்

07. கணத்தாக்கங்களைக் கொண்டு செல்லல் பயிரிடும் பணிகளில் பல்வேறு தொழில்களுக்காக தாவர ஓமோன்களைப் பயனுறுதி வாய்ந்த விதத்தில் பிரயோகிக்கலாம். எனினும் தாவர ஓமோன்கள் நிறைவேற்ற முடியாத தொழில்
1. சிறு கிளையை வேர்விடச் செய்தல்
2. களைகொள்ளியாகச் செயற்படச் செய்தல்
3. பருவமல்லாத போது பூக்களும் காய்களும் உண்டாகச் செய்தல்.
4. பீடைகொல்லியாகச் செயற்படச் செய்தல்

08. இரண்டு நரம்புக் கலங்கள் சந்திக்கும் இடம் எவ்வாறு அழைக்கப்படும்?
1. இரன்வியரின் கணு 2. நரம்பு நாருரை
3. நரம்பிணைப்பு 4. உட்காவு நரம்பு முனை

09. வன்கூட்டுத்தசையின் இயல்புகளைப் பின்வரும் எந்த விடை சரியாகக் குறிப்பிடுகின்றது?
1. வரிகள் உள்ளது, இச்சைவழி இயங்குகின்றது.
2. வரிகள் உள்ளது, இச்சைவழி இயங்காதது.
3. வரிகள் இல்லாதது, இச்சைவழி இயங்குகின்றது.
4. வரிகள் இல்லாதது, இச்சைவழி இயங்காதது

10. பின்வரும் எந்த அங்கிகள் அழுகல் தாவரம் எனப்படும்?
1. தமது உணவை தாமே உற்பத்தி செய்யும் அங்கிகள்
2. வேறு அங்கிகளை உணவாகக் கொள்ளும் அங்கிகள்
3. இறந்த விலங்குப் பகுதிகளையும், தாவரப் பகுதிகளையும் சார்ந்திருக்கும் அங்கிகள்
4. பச்சைத் தாவரங்களை மாத்திரம் உணவாகக் கொள்ளும் அங்கிகள்

11. பிரிமென்றகடு என்பது வயிற்றுக் குழியில் இருந்து நெஞ்சறைக் குழியை வேறுபடுத்தும் தசை சுவராகும். இதன் பிரதானமான தொழில் யாது?
1. நெஞ்சறையில் உள்ள அங்கங்களும், வயிற்றில் உள்ள அங்கங்களும் தொடுகை யுறுவதைத் தடுத்தல்
2. உட்சுவாசத்திற்கும், வெளிச்சுவாசத்திற்கும் உதவுதல்
3. வயிறு வெளியே தள்ளப்பட்டிருப்பதைத் தடுத்தல்
4. நுரையீரல்கள், இதயம் போன்ற அங்கங்களை தாங்கியிருத்தல்

## பாடம் : வரலாறு

01. உலகமகாயுத்தங்களின் போது ஐரோப்பிய நாடுகளுக்கு வெற்றியை பெற்றுக் கொடுத்த ஐரோப்பிய நாடுகளுள் அடங்காத நாடு எது?
1. பெரியபிரித்தானியா 2. ஐக்கியஅமெரிக்கா 3. பிரான்சு 4. ஜேர்மனி

02. முதலாம் உலக மகா யுத்தத்தில் ஐக்கிய அமெரிக்க பங்கு பெறுவதற்கான உடனடிக் காரணம்
1. பாசிசவாதமும் நாசிசவாதமும் எழுச்சியடைந்தமை
2. ஹிட்லர் போலந்தை ஆக்கிரமித்தமை
3. நீர்மூழ்கிக்கப்பலின் மூலமாக லுசிதானியா கப்பல் தாக்குதலுக்கு உள்ளானமை
4. யப்பான், பேர்ள் துறைமுகத்தை தாக்கியமை

03. குளத்தின் வான் கதவினால் ஆற்றப்படும் பணி
1. குளக்கட்டைநீரரிப்பிலிருந்துபாதுகாத்தல்
2. குளத்துக்குள் சேரும் அடையல்.உக்கல்களைத் தடுத்தல்
3. குளத்தின் மேலதிகநீரைவெளியேற்றல்
4. குளத்தின் நீரைகால்வாய்க்குவிடுவித்தல்

04. பின்வருவனவற்றுள் சேர்.பொன்.இராமநாதனின் சேவை தொடர்பான கூற்று எது?
1. வண்ணார்பண்ணையில் ஆங்கிலப்பாடசாலை ஒன்று ஆரம்பித்தமை
2. பைபிளைத் தமிழில் மொழி பெயர்த்தமை
3. சைவபரிபாலன சபையினை ஆரம்பித்தமை
4. பரமேஸ்வராக் கல்லூரியைக் கட்டுவித்தமை

05. இலங்கையின் வரலாற்றில் கண்டி இராசதானி அநுராதபுர இராசதானிக்கு அடுத்ததாக நீண்ட காலம் நிலைந்திருத்து.
1. போர்த்துக்கேயர் இலங்கைக்கு வரும் போது இலங்கையில் இருந்த இராசதானிகளை அதன் மன்னர்களையும் யுஇடீஇஊ ஒழுங்கில் தருக?
2. பின்வரும் விடயங்களுடன் தொடர்புடைய மன்னர்களை அ, ஆ, இ, ஈ ஒழுங்கில் எழுதுக
அ. கண்ணொறுவ போரை வழிநடத்தி வெற்றி பெறல்
ஆ. 1782 ஆம் ஹியு பொயிட் என்ற ஆங்கிலேயரைச் சந்தித்தல்
இ. கள்ளிக்கோட்டை சமோரின் உதவியுடன் போர்த்துக்கேயரை விரட்ட நடவடிக்கை எடுத்தல்
ஈ.வீரசுந்தர பண்டாரவை கொன்று நிக்கம்பிட்டிய பண்டாரவை கண்டி பிரதிநிதியாக நியமித்தல்
3. 1ம் விமல தர்மசூரியரின் அரசியல் சமயப் பணிகளை சுருக்கமாக விவரிக்குக.
4. கண்டி இராசதானியை போர்த்துக்கேயர் ஒல்லாந்தரால் கைப்பற்றி கொள்ள எடுத்த முயற்சிகளை முறியடித்து தனது சுதந்திரத்தை பாதுகாத்துக் கொள்ள பங்களித்த காரணிகள் இரண்டை விளக்குக?

06. 1. சௌரத் அரசன் கண்டி அரசை மூன்று பாகங்களாக்கி ஒப்படைத்த அவனுடைய குமாரர்கள் யாவர்?
2. பின்வரும் வரலாற்று நிகழ்வுடன் தொடர்புபடும் கண்டி அரசர்கள் யார்?
அ. புனித தந்தங்களைக் கண்டியில் வைப்பித்த இடம்
ஆ. நாயக்க மரபுரிமை அரசை ஆக்கிரமித்தல்.
இ. தலதா மாளிகைக்கு பத்திரிப்புவ அலங்காரத்தை ஏற்படுத்தல்.
ஈ. தலதா மாளிகை சூழலில் நான்கு இந்து ஆலயங்களை அமைத்தல்.

07. 1. கீர்த்தி சிறி இராஜசிங்க அரசர் புத்த சாசன மேம்பாட்டிற்கு ஆற்றிய சேவைகள் இரண்டைக் கூறி விளக்குக.
2. ஒல்லாந்தருக்கும் கண்டி அரசர்களுக்கும் இடையிலான உறவின் தன்மைகளை இரண்டு ஆதாரங்கள் மூலம் விபரிக்குக.

08. 1. டில்லி சுல்தானிய அரசை ஆட்சிசெய்த வம்சங்கள் எவையேனும் மூன்றைக் குறிப்பிடுக.
2. இஸ்லாமிய ஆட்சியாளர்கள் இந்தியா மீது படையெடுத்தமைக்குரிய இரு காரணங்கள் கூறுக.
3. அகபர் சக்கரவர்த்தி நடாத்திய ஆட்சி சிறந்த ஒரு ஆட்சியாக விளங்கியமைக்குரிய காரணங்கள் இரண்டைக் கூறி விளக்குக.
4. இஸ்லாமிய ஆட்சியால் இந்தியாவில் ஏற்பட்ட நிரந்தர மாற்றங்கள் இரண்டைக் கூறி விளக்குக.



ஆசிரியர் : அகிலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆயிரம் ஏக்கர்.....

குடும்பங்களே வசித்து வருவதாகவும் அவர்கள் வெளியேற்றப்படக் கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இவ்விடயம் தொடர்பாக தற்போதுவரை மௌனம் காக்கும் இலங்கைத்தரப்பு எந்தப்பகுதியைச் சேர்ந்த மக்கள் இடம்பெயர்க்கப்படவுள்ளார்கள் என்பதையிட்டு தகவல் எதனையும் வெளியிடவில்லை எனவும், இந்து சமுத்திரப் பகுதியில் தனது இராணுவ ஆதிகக்த்தை நிலைநிறுத்தி ஏனைய எதிரணி நாடுகளின் மீதுஇ விசேடமாக அமெரிக்க மற்றும் இந்திய எதிராளிகளின் மீது, செல்வாக்குச் செலுத்தும் நோக்குடன் இராணுவப் பிரசன்னத்தைத் திருகோணமலையில் பேண சீனா விரும்பியதன் வெளிப்பாடாகவே இத்திட்டம் இருக்கின்றது எனவும் அச் செய்தி தொடர்கின்றது.

## கிராமத்திற்கு 10 லட்சம்....

எடுத்து அக்கிராம அபிவிருத்திச் சங்கங்கள் அபிவிருத்தி வேலைகளைத் தாமே செய்வதாயின் அவற்றை அவர்களுக்கு வழங்கக் கூடாது என்றும் இக்கூட்டத்தில் முன்மொழியப்பட்டதை அடுத்து அதனைக் கடுமையாக திரு.நாகேஸ்வரன் எதிர்த்துள்ளார். அதையடுத்து கிராம அபிவிருத்திச் சங்கங்கள் வேலைத்திட்டங்களை மேற்பார்வை செய்ய முடியும் என்பதுடன் கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்குச் சேரவேண்டிய 5வீத கொடுப்பனவை தாம் வழங்க முடியும் என்றும் பிரதேச அபிவிருத்திக் கூட்டத்தில் கூறப்பட்டுள்ளது.

கடந்த 31ம் திகதி மாவட்ட அபிவிருத்திக் கூட்டத்தில் இவ்விடயம் பேசப்பட்டதை அடுத்து இவ்விடயம் தொடர்பாக ஆளும்கட்சியினர் தமக்குள் பேசியொரு தீர்வை அறிவிப்பதாகக் கூறியிருப்பதாகவும் தெரிகின்றது.

நியாயமாக இப்பிரச்சனை தீர்க்கப்படாது விட்டால் வளைந்துகொடுக்காத கிராம அபிவிருத்திச் சங்கங்கள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரின் கவனத்திற்கு இவ்விடயத்தைக் கொண்டு செல்லும் முயற்சியை மேற்கொள்ளவுள்ளதாக அறியக்கிடைக்கின்றது.

அதேவேளை அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்துள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்களின் வேலைகளில் தவறைக் கண்டுபிடித்து, அவர்களுக்கான கொடுப்பனவுகளை முடக்கும் முயற்சியில் சில ஆளுங்கட்சி உள்ளூராட்சி உறுப்பினர்கள் முயல்வதாகவும் தகவலொன்று தெரிவிக்கின்றது.

## அமைச்சர் அதாவுல்லா....

விடயங்களை பேசுகிறார். ஏன் அன்று வடகிழக்கு இணைக்கப்பட்டிருந்த போது தமிழர்களும், முஸ்லிம்களும் நல்ல உறவினை கட்டியெழுப்பி அன்னியொன்னியமாக வாழவில்லையா? அல்லது வாழத்தான் நினைக்கவில்லையா?. என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இவரைப்பார்த்து நாம் ஒன்றைக்கேட்க வேண்டி இருக்கின்றது. இந்த நாட்டிலே முஸ்லிங்கள் தாக்கப்பட்டபோதும் பள்ளிவாசல்கள் இடித்து தரைமட்டமாக்கப்பட்போதும், வாய் மூடி மௌனிகளாக இருந்துவிட்டு அரசாங்கத்திற்கு எதிராக எந்தக்கருத்தினையும் சொல்ல முடியாத அமைச்சர் கிழக்கினை பிரித்தெடுத்ததன் மூலம் தமிழ் - முஸ்லிம் உறவு வளரும் என்று சொல்வதற்கு இவருக்கு வெட்கமில்லையா எனக்கேட்க விரும்புகின்றேன்.

தமிழ் இனம் சொல்லொண்ணா துன்ப துயரங்களை சந்தித்த ஒரு இனம் இவ்வாரான துன்பதுயரங்களை அனுபவித்துவிட்டு வேதனையில் இருக்கும் போது, கிழக்கு மாகாணத்தினை வடக்கில் இருந்து பிரித்தெடுத்து விட்டு இப்போது தான் தமிழர்களும் முஸ்லிங்களும் ஐக்கிய உறவு என்று சொல்வது நகைப்பிற்குரிய விடயமாகவே பார்க்கவேண்டி இருக்கின்றது எனவும் அவரது அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

## ஆண் நோயாளி....

சம்பவத்தை அப்பெண் கூறியுள்ளார்.

இதனையடுத்து வைத்தியசாலைக்குள் வந்த காவல்துறையிடம் தன்னிடம் திருட வந்த திருடனை அப்பெண் அடையாளம் காட்டியதை அடுத்து அவரை கைது செய்துள்ளனர். ஏற்கனவே இவர் பல திருட்டு சம்பவங்களில் ஈடுபட்டு வந்துள்ளதால் இவருக்கு எதிராக பல முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தது

## சிறுவரைப் பலிகொண்ட....

கடந்த 27ம் திகதி நிகழ்ந்தது. மட்டக்களப்பு-திருகோணமலை நெடுஞ்சாலை வேலைக்காக பாறாங்கற்களைத் தகர்த்தெடுத்த குழிக்குள்ளேயே இவ்விரு சிறுவர்களும் விழுந்த மரணமாகியுள்ளனர்.

தங்கபுரம் பள்ளிக்குடியிருப்பைச்சேர்ந்த டேவிட் ஜயசீலன் (வயது-13), லக்ஷ்மன் லதுசான் (வயது-09) ஆகியோரே இவ்வாறு மரணமடைந்துள்ளனர்.

கடும் நீர்த்தட்டுப்பாட்டை எதிர்கொண்டுள்ள மேற்படிக் கிராம மக்கள் குடிப்பதற்கும் குளிப்பதற்கும் பலமைல் தூரங்களுக்கு நடக்க வேண்டிய நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். எனினும் விடயம் அறிந்த எவரும் சிறுவர்கள் பலியான இவ்விடத்திற்கு நீரெடுக்கச் செல்வதில்லை என தெரிவித்தனர்.

குறித்த இம் மடுவில் முதலைகள் இருப்பதாகத் தெரிவித்த ஊரவர்கள் ஆபத்தான இந்த இடம் எவ்வித பாதுகாப்பும் இன்றித் திறந்து கிடந்ததாலேயே இத்துக்கம் நிகழ்ந்ததாகவும் தெரிவித்தனர்.

சுழியோடிகளின் கடும் பிரயத்தனத்தை அடுத்தே சிறுவர்களின் உடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இம்மடுப் பிரதேசத்தை ஆபத்தான பிரதேசமாக அறிவிக்க மூதூர் பிரதேச சபையோ அல்லது மூதூர் பிரதேசச் செயலரோ நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கேட்டுக்கொண்டனர்.

## தங்கநகரில் மக்களை....

இராணுவத்தினருடனான யுத்தத்தில் கொல்லப்பட்ட விடுதலைப் புலிகளின் பெற்றோர் மற்றும் உறவினரை திரட்டி கொல்லப்பட்ட அனைவரையும் விடுதலைப் புலிகளே கொன்றார்கள் என பேட்டி மற்றும் சாட்சியளிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நடவடிக்கையில் அரசுடன் இணைந்து செயற்படும் சிலர் இயங்குவதாகவும் மக்களுக்கு நிவாரணம் தருவதாகக் கூறியே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப் படுவதாகவும் குளோபல் தமிழ்ச் செய்திகளிற்கு தகவல் கிடைத்துள்ளது.

இதனை உறுதிப்படுத்திய அங்குள்ளவர்கள் ஆரம்பத்தில் இரந்தவர்களுக்கான பதிவைச் செய்தால் இரண்டரை லட்சம் 'ரூபா பணம் அரசினால் கிடைக்கும் எனவும், வீடு கட்டித் தரப்படும் எனவும் அங்குள்ள மக்களை அணுகியுள்ள மூவர் (இவர்களுள் ஒருவர் பிரதி அமைச்சர் ஒருவரின் மைத்துனர், ஏனைய இருவரும் இராணுவப் புலனாய்வாளர்கள்) அதற்கான முன்பணமாக உடனடியாக 'ரூபா ஆயிரம் கொடுத்தும் உள்ளனர்.

அதனை நம்பி மட்டக்களப்பிற்குச் சென்ற மக்களுக்கு அங்கு வைத்து வெறும் காகிதத்தில் கையெத்திட்டுத் தருமாறும் தமது உறவினர்களைப் புலிகளே கொன்றதாகக் கூற வேண்டும் என்றும் அதனையும் எவ்வாறு கூற வேண்டும் என சொல்லிக் கொடுக்கப்பட்டதர்கவும் தெரிவித்தனர்.

எதிர்வரும் ஐந்தாம்திகதி மட்டக்களப்பில் நடைபெறவுள்ள பத்திரிகையாளர் சந்திப்பில் இம் மக்களை முன்கொணர நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருதாகவும் தெரிகின்றது என அச் செய்தி தெரிவித்துள்ளது.

## ஐந்து மாணவர்களின்....

மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்னர் கையளிக்கப்பட்டு இன்றுவரை வெளியிடப்படாத அறிக்கையை வெளியிடுவதுடன் அவ்வறிக்கையில் முன்மொழியப்பட்டுள்ள நடவடிக்கைகளையும் அமுலாக்க வேண்டும் எனவும் சனாதிபதியை அவர் கேட்டுள்ளார்.

"இவ்வாறு செய்யும் போது உள்நாட்டு யுத்தத்தின் போது மேற்கொள்ளப்பட வாய்ப்பாக இருந்த சட்டமீறல் குறித்த உள்நாட்டு விசாரணையை மேற்கொள்ள வேண்டும் என நீண்டகாலமாகக் கோரப்படுவது பூர்த்தி செய்யப்படும்" என அவர் கூறினார்.

## வளாக மாணவர் போரா...

அவர்கள் இப்போராட்டத்தின் பின்புலத்தில் தமது நன்மைகளை அறுவடைசெய்யச் சிலர் காத்திருக்கின்றார்களா? என்றும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

நிர்வாக ரீதியான மாற்றமொன்றினால் மாணவர்களில் கல்வி நடவடிக்கைகளில் எவ்வித மாற்றமும் நிகழப் போவதில்லை என்பதையும், கிழக்குப் பல்கலைக்கழகத்தன் ஊடாகவே திருகோணமலை வளாகத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதால் முதல்வரின் மாற்றம் அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் மாற்றமெதனையும் கொண்டுவரப் போவதில்லை என்பதாலும் இத் தற்காலிகப் பணிநீக்கத்திற்கு எதிராக மாணவர்கள் போராடுவது எவ்வித அடிப்படையும் அற்றது என்றும் விரைவில் மாணவர்கள் கல்வி நடவடிக்கைக்குத் திரும்பவேண்டும் என்றும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# கல்லடி சக்தி வித்தியாலயத்தில் கழிவுப் பொருட் கண்காட்சி

(லியோன்) மட்டக்களப்பு கல்லடி வேலூர் ஸ்ரீ சக்தி வித்தியாலயத்தில் சுற்றாடல்கழக ,கழிவு பொருட்களிலான கண்காட்சி வித்தியாலய அதிபர் திருமதி .டி .அருட்ஜோதி தலைமையில் இன்று காலை 08.30 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது . இக் கண்காட்சியானது தரம் ஒன்று தொடக்கம் தரம் ஐந்து வரையான மாணவர்களின் தயாரிக்கப்பட்ட பொருட்களிலான கண்காட்சியாகும் .இந் நிகழ்வுக்கு அதிதிகளாக மட்டக்களப்பு மத்திய சுற்றாடல் அதிகாரசபை அலுவலக பொறுப்பாளர் .எஸ் .கோகுலன் , பிரதிப் பணிப்பாளர் நஜீப் அலுவலக உத்தியோகத்தர் .திருமதி .ஆர் .பாஸ்கரன் , பிரதிக் கல்விப் பணிப்பாளர் (முன்பள்ளி) சச்சிதானந்தம் ஆகியோர் கலந்துகொண்டனர் . இதனை தொடர்ந்து மாணவர்களின் சுற்றாடல் கீதம் இசைக்கப்பட்டு , மாணவர்களினது பேச்சு, பாடல் நிகழ்வுகள் இடம்பெற்றது . இதனை தொடர்ந்து மாணவர்களுக்கு பதக்கங்களும் ,சான்றிதழ்களும் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது . இரண்டாம் தரம் மாணவர்களுக்கு தாவரப் பதக்கமும் , தரம் மூன்றாம் , நான்காம் தரம் மாணவர்களுக்கு பறவைப் பதக்கங்களும் ,ஐந்தாம் தரம் மாணவர்களுக்கு இயற்கை பதக்கங்களும் சூட்டப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ஸகாத் : ஒரு சமூகக் கடமை

"அல்லாஹ் தன் அருளினால் தங்களுக்கு கொடுத்துள்ள பொருட்களில் யார் உலோபித்தனம் செய்கிறாரோ அது தமக்கு நல்லது என நிச்சயம் என்ன வேண்டாம். அவர்கள் உலோபித் தனத்தால் சேர்த்து வைத்தவை எல்லாம் மறுமையில் அவர்களின் கழுத்தில் அரிகண்டமாகப் போடப்படும்." (3:180) இவ்வாறு ஸகாத்தைக் கொடுக்காது தடுத்துக் கொண்ட மனிதர்களுக்கு எதிராக கலீபா அபூபக்ர் (ரழி) போர்க் கொடி தூக்கிய வரலாறையும் இஸ்லாமிய உம்மத் சந்தித்திருக்கிறது.

**ஸகாத் வழங்குவோர் பெறுவோர்**

ஸகாத் விதியாவதை பொருத்தமட்டில் பூரண சொத்துரிமை விருத்தியுறும் தன்மை நிஸாப் எனும் ஆரம்ப அளவை அடைதல் அடிப்படைத் தேவைகளை விட மேலதிகமாக இருத்தல் கடன் சுமை அற்றிருத்தல் ஒரு வருடம் பூர்த்தியாயிருத்தல் ஆகிய நிபந்தனைகளுடைய சொத்துக்கள் மீது அது விதியாகும். இவ்விதிகளைப் பொருத்தமட்டில் கால் நடைகள், நாணயங்கள், வியாபாரப் பொருட்கள் விவசாயப் பொருட்கள், கனிய மற்றும் கடற் பொருட்கள் வருமானம் தரும் நிலையான சொத்துக்கள், உத்தியோகங்களும் சுதந்திர தொழில்களும் என்பன ஸகாத் கடமைக்கு உட்படக் கூடியவையாக இனங்காணப்படுகின்றன.

தொடரும் ...

## வாரமொரு ஜோக்




- அருணன் -

நாக்கு பல்லைப் பார்த்து கூறியது..!

எனது நண்பனே..! நீ எனக்கு எவ்வளவோ உதவிகளை செய்கின்றாய். உணவுப் பொருட்களை நீ அரைத்து கொடுத்து அதன் சுவையை எனக்கு அறியப்படுத்துவது போன்ற அளவிலடங்கா சேவைகளை செய்து வருகின்றாய். இதற்கெல்லாம் நான் உனக்கு என்ன கைமாறு செய்யப்போகின்றேன் என்பதுதான் புரியவில்லை.

பல்லு கூறியது..

ஐயா சாமி..நீ எனக்கு ஒரு கைமாறும் செய்யவேண்டாம் .மற்றவர்களுடன் பேசும்போது ஒழுங்காக பேசு. அது போதும். ஏனெனில் உன்னால் உடைபடுவது நான் அல்லவா..! என்றது..!

ஒரு வைத்தியருக்கு கிராமவாசி ஒருவரிடமிருந்து அவசர தொலைபேசி அழைப்பொன்று வந்தது.

ஐயா! எனது மனைவியிடம் வாய் தர்க்கம் ஏற்பட்டு கோபத்தில் அடித்து விட்டேன். இதனால் கோபமடைந்து அவள் இன் நான் உயிர் வாழ மாட்டேன் என கூறி வீட்டிலிருந்த பெற்றோலை எடுத்து குடித்துவிட்டு வீட்டை சுற்றி ஓடிக்கொண்டிருக்கிறாள்.. அவளை என்னால் பிடித்து வைத்தியசாலைக்கு அழைத்து வர முடியவில்லை தயவுசெய்து அம்புலன்ஸ் வண்டியை உடன் அனுப்பி வையுங்கள் என்றான்.



வைத்தியர் அமைதியாக கூறினார்...! ஒன்றும் பதட்டப்பட வேண்டாம். குடித்த பெற்றோல் தீர்ந்ததும் அப்படியே ஓடாமல் நின்று விடுவார். அப்புறம் ஓர் ஆட்டோ ஒன்றை பிடித்து இங்கு அழைத்து வாருங்கள் என்றார்! **ஹா! ஹா! ஹா!**




## சுறா மீன் புட்டு



**தேவையான பொருட்கள்**

சுறா மீன் துண்டு - 300 கிராம், வெங்காயம் - 3 - 4, பூண்டு (பொடியாக நறுக்கியது) - 6 பல், பச்சை மிளகாய் - 3, கறிவேப்பிலை – சிறிது, மல்லித் தழை – சிறிது, முழு உளுந்து - 1 தே.க, கடுகு - 1/2 தே.க, மஞ்சள் தூள் - சிறிது, சீரகம் - 1/2 தே.க, உப்பு - தேவைக்கு, எண்ணெய் - 2 மே.க

**செய்முறை**

உருளைக்கிழங்கையும் பட்டாணியையும் வேகவைக்கவும். பின் உருளைக்கிழங்கை தோல் உரித்து, வெங்காயம், மிளகாய் தூள், சிறிது உப்பு சேர்த்துப் பிசைந்து சிறிய உருண்டைகளாக உருட்டவும். கோதுமை மாவில் உப்புப் போட்டுக் கரைத்துக் கொள்ளவும். பின்னர் உருட்டி வைத்துள்ள மசாலா உருண்டைகளை, கோதுமை மாவில் தோய்த்து, குழிப்பணியாரக் கல்லில் எண்ணெய் விட்டு, போட்டு, திருப்பியதும் எண்ணெய் விட்டு பொன்னிறமாக வெந்ததும் எடுக்க வேண்டும்.

## விரால் மீன் குழம்பு



**தே.பொருட்கள்**

விரால் மீன் (3-4 கிலோ எடை யுள்ளது) - 1, சின்ன வெங்காயம் - 1/4 கிலோ, தக்காளி - ¼ கிலோ, தேங்காய்ப்பால் - 2 கப், பூண்டு – 1, கடுகு, 1 தே.க, காய்ஞ்ச மிளகாய் - 2, கறிவேப்பிலை - அளவாக, வெந்தயம் - 1 தே.க, பச்சை மிளகாய் - 2, எண்ணை - ஒரு குழிக்கரண்டி, கொத்துமல்லி - சிறிதளவு

**செய்முறை**

மீனை நன்றாக்கழுவி துண்டுகள் போடவும் பின் குழம்பு வைக்கும் பாத்திரத்தில் எண்ணைவிட்டு கடுகு, காய்ஞ்ச மிளகாய், வெந்தயம், கறிவேப்பிலை போட்டு வதக்கவும் பின்னர் வெங்காயம் போட்டு நல்லா வதக்கி, பூண்டு சேர்த்து வதக்கியபின் பச்சைமிளகாய், தக்காளி சேர்த்து வதக்கி அதோடு மஞ்சள்தூள், மிளகாய்த்தூள், தனித்தூள் சேர்த்து கொத்தமல்லி, கறிவேப்பிலை சேர்த்து தேங்காய்ப் பாலை ஊத்தி கொதித்துவர மீன் துண்டுகளைப் போட்டு ஒரு கொதிவிட்டு இறக்கவும்.

## கோலக் கலை

கோலங்களில் பல வகை உண்டு. இந்துக்கள் தம் திருவிழாக்களின் போது அலங்காரத்திற்காக பல்வேறு வகையான கோலங்களை அவரவர் தேவைக்கேற்பவும் வசதிக்கேற்பவும் தெரிவு செய்து போடக்கூடியதாக உள்ளது.



## கருவளையமா!!



பெண்களுக்கு மட்டுமின்றி ஆண்களுக்கும் ஏற்படுகின்ற கருவளையத்திற்கு தீர்வு தருகிறது எலுமிச்சை. இளம் வயதிலேயே சிலருக்கு தோல் துவண்டு வயதான தோற்றத்தைத் தரும். இதற்கு அருமையான வைத்தியம் எலுமிச்சையில் இருக்கிறது. துருவிய உருளைக்கிழங்கு - அரை கப் எலுமிச்சைச் சாறு - அரை டீஸ்பூன், சிவப்பு சந்தனம் - ஒரு டீஸ்பூன், இந்த மூன்றையும் சுடு தண்ணீரில் கலந்து பேஸ்ட் ஆக்குங்கள். முகத்தை ஒரு மெல்லிய மஸ்லின் துணியால் மூடி, அதன் மேல் இந்த பேஸ்ட்டைத் தடவி அரை மணி நேரம் கழித்துக் கழுவுங்கள். முகத்தில் உள்ள தோல் பகுதி இறுகி, இளமையான தோற்றம் கிடைக்கும்.

முற்றும் ...

# கொட்டியாபுரத்து சிங்கம்

**கொட்டியாபுரம்**
வரலாற்றுக் குறுநாவல்
கி.பி 1600 – 1700 ம் ஆண்டுகளில்
கொட்டியாபுரத்தில் கோலோச்சிய வன்னிமையின் கதை

கடந்த வார தொடர்ச்சி ...

**சம்பூர் சதீஸின்**


அன்றிரவு ஒற்றர் தலைவனையும், படைத்தலைவர் களையும் அழைத்து ஆலோசனை நடத்தினான் இளஞ்சிங்கன்.

அவர்கள் பறங்கியர் தரைகொண்ட இடங்கள் அவர்களின் நகர்வுகள் அடங்கிய திட்டங்கள் சகலதையும் விவாதித்து விட்டு இடிமன்துறை, முத்தூர், வேடங்கந்து ஆற்றடி, மத்தளமலை, கௌவுளியா, கொக்கட்டி, கரடிமலை முதலிய இடங்களில் கண்காணிப்புக்களைப் பலப்படுத்துமாறும், தகவல்களை உடனுக்குடனேயே மேன்காமத்து வன்னிபத்துக்கு தெரியப்படுத்துமாறும், தான் வரும்வரை மைத்துனன் இளஞ்சியனை பொறுப்பாக அமர்த்திவிட்டு, வேண்டிய ஆலோசனைகளை அவர்களுக்கு வழங்கி வழியனுப்பியபின் நித்திரைக்குச் சென்றான்.

**இருசிங்கங்கள்**

அதிகாலையில் சூரியோதயத்துக்கு முன்னேயே மேன்காமத்தை அடைந்துவிட வேண்டுமென்று எண்ணங்கொண்டவனாய் புறப்படத் தயார் நிலையிலிருந்த நண்பனும் தனது மெய்ப்பாதுகாவலனுமாகிய சத்தியன் மற்றும் தயார்நிலையிலிருந்த பத்து குதிரைவீரர்கள் சகிதம் புறப்பட்டான். புரவிகள் காற்றிலும் கடிதாக விரைந்து மருதடிச்சேனை, இடிமன்துறை, பள்ளிக்குடியிருப்பு, பெரியதோப்பு ஊடாக மேன்காமத்தை அடைந்து சிறிது நேரம் வன்னிமையிடம் உரையாடிவிட்டு விசேட அழைப்பின் பேரில் கண்டி செல்வதற்கான காரணங்களையும் அறிந்து கொண்டு, தாய் தந்தையிடம் ஆசி பெற்று புறப்பட இருந்த இளஞ்சிங்கனிடம் "செனரத் மன்னனின் நன்மதிப்பைப் பெறவேண்டும்" என்றும், சத்தியனிடம் - "இளவரசனின் பாதுகாப்பு கவனம்" என்றும் கூறி இருவரையும் வன்னிமை வழியனுப்பி வைத்தார்.

நண்பர்கள் இருவரும் நண்பகல் உணவையும் எடுத்துக்கொண்டு கங்கைவேலியைக் கடந்து குருக்கள் மடத்தை அடைந்தனர். அப்போது கங்கையின் நீர்மட்டம் குறைவாக காணப்பட்டதால் புரவியைக் கொண்டு இலகுவாக கங்கையைக் கடந்தனர். பின்னர் அங்கு இராஜ உடையைக் களைந்து வணிகர் வேடந் தாங்கி காற்றில் புரவிகளிரண்டையும் பறக்கவிட்டனர். அடர்ந்த ஓங்கி உயர்ந்த மரங்களும், திகிலடையச் செய்யும் குவிந்த மரக்கிளைகளுமாகக் காணப்பட்ட வனாந்தரங்களினூடாகச் செல்லும் ஒற்றையடிப் பாதையூடாக ஆங்காங்கே தென்பட்டவர்களிடம் வழியைத் தெரிந்து கொண்டு கண்டி இராசதானிக்குட்பட்ட பிரதேசங்களினூடாகச் சென்று மாத்தளையை அன்றிரவு அடைந்தனர். அன்றைய இரவை அங்கேயே கழிக்கும் திட்டமுடையவர்களாய் சத்திரம் ஒன்றை அணுகினர்.



சத்திரத்தின் கதவு உட்புறமாக பூட்டப்பட்டிருந்தது. சத்திரத்தின் கதவைத் தட்டிய சிறிது நேரத்தின் பின் கதவு திறந்தது. கட்டையான தோற்றங்கொண்ட பருமனான ஒருவர் சிங்கள மொழியில் யார் நீங்கள் என்று வினவினார். சிங்கள மொழியின் பரிச்சயம் இளஞ்சிங்கனுக்கு இருந்ததனால் நாங்கள் வணிகர்கள் என்றும் கொட்டியாபுரப்பற்றில் இருந்து வணிக விடயம் சம்பந்தமாக கண்டிக்குச் செல்கிறோம். ஆனால் செல்லும் வழியில் இருட்டி விட்டது. அதனால்



தங்குமிடம் தேடி இங்கு வந்தோம் என்றும் கூறினான். அவர்களை உள்ளே அனுமதித்த சத்திரக் காவலன் அவர்களிடம் நாடு தற்போது இருக்கும் சூழ்நிலை சரியில்லை. யாரையும் நம்பமுடியவில்லை அதனால் அரசியல் பேசுவதை தவிர்த்துக் கொள்ளுங்கள் என்று கூறிவிட்டகன்றான்.

இரவுணவைப் பெற்று கொண்டு உண்ணும் போது நண்பனிடம் பேச்சைத் தொடங்கிய இளஞ்சிங்கன் கண்டி இராசதானியிலும் நிலைமை சரியில்லை போல என்றான். அதற்கொப்பிசைத் தலையால் சைகை காட்டிய சத்தியன் இளவரசே இது அரசியல் பேச்சு என்று மிகவும் மெதுவாகக் கூறினான். இருவர்களாலும் சிரிப்பை அடக்க முடியாது சிரித்துக் கொண்டிருந்தனர்.

பின்னர் சத்திரத்தின் பின்புறமாகச் சென்ற இருவரும் புரவிகளுக்குச் சாப்பாடு கொடுத்துக் கொண்டிருந்தவனிடம் சிங்களத்தில் நன்றாகச் சாப்பிடுகின்றனவா? அவை மிகவும் களைத்து விட்டன என்ற கேட்டபோது ஆமாம் வணிகர்களே களைப்பு காரணமாக மிக விரைவாக சாப்பிட்டுவிட்டன என்று தமிழில் சொன்ன போது ஆச்சரியமடைந்த இருவரும் உனக்குத் தமிழ் தெரியுமா? என்றனர். அதற்கு அவன் இப்போது தமிழ் தெரியாது விட்டால் ஊமை போல இருக்கவேண்டியது தான் என்று கிண்டலடித்து இங்கு வரும் வணிகர்கள் பெரும்பாலும் தமிழையே பேசுகின்றனர். அவர்கள் மூலமே கற்றுக் கொண்டேன் என்றான் மிகுந்த அடக்கத்துடன்.

... பாகம் 10 தொடரும் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## உதைப் பந்தாட்டப்போட்டி



பண்டாரியாவெளி நகர் விளையாட்டுக்கழகத்தின் 44வது ஆண்டு நிறைவைப் பூர்த்தி செய்யும் மாபெரும் உதைப்பந்தாட்டப் போட்டி எதிர்வரும் 02ம் 03ம் திகதிகளில் பண்டாரியாவெளி நாகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இப்போட்டிக்கு அழைப்பு விடுக்கப்பட்ட அனைத்து கழகங்களையும் 02ம் திகதி ஆகஸ்ட் மாதம் காலை 8 மணிக்கு சமூகம் கேட்டுக்கொண்டனர் நிர்வாகத்தினர்.

## 50வது நினைவையொட்டி வி.போட்டி



கடந்த 25, 26, 27 இல் மண்டூர் விளையாட்டுக்கழகத்தின் 50வது ஆண்டு நிறைவினை முன்னிட்டு மாபெரும் உதைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியும் கலாச்சார விளையாட்டுப் போட்டியும் நடைபெற்றன. இப்போட்டியில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த பெருமளவிலான அணிகள் கலந்து கொண்டன.

இறுதிப் போட்டியில் திருக்கோவில் விநாயகபுரம் விளையாட்டுக் கழகமும், மருங்கைநகர் நாகர் விளையாட்டுக் கழகமும் மோதியன. இந்த ஆண்டுக்கான சம்பியனாக திருக்கோவில் விநாயகபுரம் மின்னொளி விளையாட்டுக்கழகமும் இரண்டாம் இடத்தினை மருங்கைநகர் நாகர் விளையாட்டுக்கழகமும் மூன்றாம் இடத்தினை மண்டூர் மதி ஒளி விளையாட்டுக் கழகமும் பெற்றுக்கொண்டது.

இதன் இறுதி நிகழ்வாக மதி ஒளியின் 50 ஆண்டுகால வெற்றிக் கிண்ணங்களை தாங்கிய வாகன பவனி இறுதி நாளின் நிகழ்வாக இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.







## பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டி

உலக தரிசன நிறுவனத்தின் அனுசரணையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பாலர் பாடசாலை மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டி 28.07.2014 அன்று மட். பழுகாமம் கண்டுமணி மகா வித்தியாலய மைதானத்தினுள் இடம்பெற்றது.

இதில் உலன தரிசன நிறுவன பணிப்பாளர்கள் மற்றும் பொதுமக்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.









## சங்ககார ஆதங்கம்

சாம்பியன்ஸ் லீக் டி20 தொடரில் உள்ளூர் அணிக்காக விளையாடாமல் மும்பை இந்தியன்ஸ் அணிக்காக விளையாட மலிங்காவுக்கு இலங்கை கிரிக்கெட் போர்டு சம்மதித்துள்ளது.



ஆனால் கடந்த முறை, தன்னுடைய விடயத்தில் கிரிக்கெட் போர்டின் ஒரு அதிகாரி தனிப்பட்ட முன்விரோதம் மற்றும் பழிவாங்கல் காரணமாக தனக்கு மட்டும் அணி மாறி விளையாட அனுமதிக்கவில்லை என சங்கக்கரா ஆதங்கப்பட்டுள்ளார்.

# சர்வதேசச் செய்திகள்

### • நவம்பர் மாத தேர்தலுக்கான முன்னெடுப்பா!

கடந்த 2010ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட சுகாதார பாதுகாப்பு சட்டத்தை அமல்படுத்த அதிபர் ஒபாமா தனது அதிகாரத்தை மீறி செயல்பட்டதாக குடியரசு கட்சி குற்றம் சாட்டியுள்ளது. இது தொடர்பாக ஒபாமாவுக்கெதிராக வழங்கு தொடரவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

### • குப்பைத்தொட்டியில் வீசியெறிந்த கொடூர தாய்.



போலந்து நாட்டில் அலுவலகத்தில் கிடைத்த லஞ்ச் பிரேக் சமயத்தில் குழந்தை பெற்று அந்த குழந்தையை குப்பைத்தொட்டியில் வீசியெறிந்துவிட்டு மீண்டும் அலுவலகத்தில் வந்து சாதாரணமாக வேலை செய்த கொடூர மனம் கொண்ட தாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

### • குழந்தை பெறும் காட்சியை நேரில் பார்க்கலாம்.

தான் குழந்தை பெறும் காட்சியை நேரில் பார்வையிட விரும்புபவர்களுக்கு தலா 22 லட்சம் ரூபா விலையில் டிக்கெற் விற்பனை செய்த மொடல்.

### • டிரக்கில் ஏற்றிச்செல்லப்பட்ட ஒட்டகச் சிவிங்கிகள் பரிதாப மரணம்.

தென்னாப்பிரிக்காவில் டிரக் ஒன்றில் ஏற்றிச்செல்லப்பட்ட இரண்டு ஒட்டகச்சிவிங்கிகள் எதிர்பாராதவிதமாக பாலத்தில் மோதி அடிபட்டு பரிதாபமாக பலியாகின. அந்த டிரக்கை ஓட்டிச்சென்ற டிரைவர் கைது செய்யப்பட்டார்.

### • மர்ம நோய் – 672 பேர் பலி



மேற்கு ஆப்பிரிக்க நாடான லைபீரியா மற்றும் அதை சுற்றியுள்ள நாடுகளில் ஒருவித மர்ம நோய் பரவி உள்ளது. எபோலா வைரஸ் என அழைக்கப்படும் ஒருவகை கிருமி மூலம் இந்த நோய் பரவி இருக்கிறது. இதில் பாதிக்கப்பட்டவர்கள் பெரும்பாலானோர் உயிரிழந்து வருகின்றனர். இதுவரை 672 பேர் இந்த நோய்க்கு பலியாகி உள்ளனர்.

### • நூலிழையில் தப்பிய மற்றுமொரு மலேஷிய விமானம்

Tiger Airways விமான நிலையத்திற்கு சொந்தமான விமானம் ஒன்று எடிலைட் விமான நிலையத்தில் தரையிறங்க முற்படுகையில், குறித்த விமான நிலையத்தில் இருந்து மலேசிய விமான சேவைக்கு சொந்தமான MH136 விமானம் புறப்படுவதற்காக ஓடு தளத்தில் பயணத்தை ஆரம்பித்திருந்தது. சிறப்பாக செயற்பட்ட MH136 விமானத்தின் விமானி, பாதையை மாற்றி பாரிய விபத்து ஒன்று நேர்வதை தடுத்தார்,

### • மொபைல் பயன்படுத்திய இங்கிலாந்து பெண்ணால் இந்திய வாலிபர் பலி.

டிரைவிங் செய்து கொண்டே இரண்டு செல்போன்களை பயன்படுத்திய ஒரு பெண்ணால் இந்திய வாலிபர் ஒருவர் பரிதாபமாக பலியான சம்பவம் ஒன்று இங்கிலாந்து நாட்டில் நடந்துள்ளது. அப் பெண்ணுக்கு ஐந்து வருட கடுங்காவல் தண்டனை கொடுத்ததோடு அவருடைய லைசென்ஸையும் ரத்து செய்ய நீதிபதி உத்தரவிட்டார்.

### • வியாபாரிகளை மிரட்டிய ராணுவ ஜெனரல்

தாய்லாந்தில் ஆட்சியைக் கவிழ்த்து ராணுவம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபிறகு மக்களின் நன்மதிப்பை பெறுவதற்காக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. குறிப்பாக ஊழலுக்கு எதிராக கடும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அந்த வகையில் பாலியல் தொழில் அதிகம் நடக்கும் உல்லாச நகரமாக விளங்கும் பாங்காக்கின் பத்பாங் பகுதியில் வியாபாரிகளை மிரட்டி பணம் பறித்த வழக்கில் 56 வயதான மேஜர் ஜெனரல் ஜென்ரோனாராங் தேத்வான் கைது செய்யப்பட்டுள்ளார்.

### • புகைப்பிடிப்பவர்களின் எண்ணிக்கையை குறைக்க புது யுக்தி

ஜப்பான் நாட்டில் சமீபத்தில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி அங்கு புகை பிடிப்போரின் எண்ணிக்கை 20 சதவிகிதத்திற்கும் கீழே குறைந்திருப்பது தெரியவந்துள்ளது. தற்போது அங்கு நிலவிவரும் சிகரெட் விலையேற்றமும் இதற்கு ஒரு முக்கிய காரணமாகக் கூறப்படுகின்றது.

### • எம்.பி.க்களின் பட்டியலை தயாரிக்க மோடி உத்தரவு

நாடாளுமன்றத்தில் பா.ஜ.க. எம்.பி.க்களின் நடவடிக்கை, மிக குறைந்த நாட்களே வருகை புரிந்த சில எம்.பி.க்களின் செயல், பிரதமர் நரேந்திர மோடிக்கு வருத்தத்தை ஏற்படுத்தி உள்ளதால் அவர்களின் பட்டியலை தயாரிக்க பிரதமர் மோடி உத்தரவிட்டுள்ளார்.

# நிகழ்வுகள்

## சுற்றாடல் கழக கண்காட்சி

வியோன் -


மட்டக்களப்பு கல்லடி வேலூர் ஸ்ரீ சக்தி வித்தியாலயத்தில் சுற்றாடல்கழக, கழிவு பொருட்களிலான கண்காட்சி வித்தியாலய அதிபர் திருமதி.டி.அருட்ஜோதி தலைமையில் 31.07.2014 காலை 08.30 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது. இக் கண்காட்சியானது தரம் ஒன்று தொடக்கம் தரம் ஐந்து வரையான மாணவர்களின் தயாரிக்கப்பட்ட பொருட்களிலான கண்காட்சியாகும். இந் நிகழ்வுக்கு அதிதிகளாக மட்டக்களப்பு மத்திய சுற்றாடல் அதிகாரசபை அலுவலக பொறுப்பாளர் எஸ் .கோகுலன் ,மத்திய சுற்றாடல் அதிகாரசபை அலுவலக உத்தியோகத்தர் .திருமதி.ஆர்.பாஸ்கரன், மட்டக்களப்பு வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (முன்பள்ளி) சச்சிதானந்தம், மத்திய சுற்றாடல் அதிகாரசபை பிரதிப் பணிப்பாளர். ஜனாப் MAC நஜீப் ஆகியோர் கலந்துகொண்டனர். சுற்றாடல்கழக கண்காட்சி கூடம் அதிதிகளினால் திறந்து வைக்கப்பட்டடு. மங்கள விளக்கேற்றல் இடம்பெற்றது. இதனை தொடர்ந்து கண்காட்சியை பார்வையிட்ட அதிதிகள் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்விலும் கலந்துகொண்டனர். இறை வணக்கத்தைத் தொடர்ந்து மாணவர்களின் சுற்றாடல் கீதம் இசைக்கப்பட்டு, மாணவர்களினது பேச்சு, பாடல் நிகழ்வுகள் இடம்பெற்றது. இதனை தொடர்ந்து மாணவர்களுக்கு பதக்கங்களும், சான்றிதழ்களும் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. இரண்டாம் தரம் மாணவர்களுக்கு தாவரப் பதக்கமும், தரம் மூன்றாம், நான்காம் தரம் மாணவர்களுக்கு பறவைப் பதக்கங்களும், ஐந்தாம் தரம் மாணவர்களுக்கு இயற்கை பதக்கங்களும் சூட்டப்பட்டது. மத்திய சுகாதார அதிகாரசபை நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் பாடசாலைகளில் மேற்கொள்ளப்படும் நிகழ்சிகளில் சுற்றாடல் பாதுகாப்பு முன்னோடி மாணவர்களின் செயல்பாடுகளுக்கும், திறமைகளுக்கு சன்றிதழ்கள், வர்ணப் பதக்கங்கள் வழங்கப்படுகின்றன.

இதன் ஒரு நிகழ்வாக இப் பாடசாலை சுற்றாடல் முன்னோடிப் படையணி மாணவர்களுக்கு பச்சை வர்ணப் பதக்கங்கள் நிகழ்வில் கலந்துகொண்ட மத்திய சுற்றாடல் அதிகாரசபை பிரதிப் பணிப்பாளரினால் ஜனாப் MAC நஜீப் வழங்கி வைத்தார். இறுதி நிகழ்வாக அதிதிகளின் பாடசாலைத்தோட்டம் பார்வையிடல் நிகழ்வுடன் நிகழ்ச்சிகள் நிறைவு பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கநகரில் மக்களைத் திரட்டுபவர்கள் யார்?



திருகோணமலை தங்கநகர் கிராமத்தில் மக்களைத் திரட்டிப் பொய்ச்சாட்சி சொல்ல நடவடிக்கை எடுக்கப்படுவதாக சர்வதேச செய்திச் சேவையொன்று தெரிவிக்கின்றது.

நிவாரணம் தருவதாகக் கூறி மக்களை ஏமாற்றி அரசிற்கு ஆதரவாகப் பிரச்சாரமொன்றைச் செய்யும் முயற்சியொன்றே முன்னெடுக்கப் பட்டுள்ளது எனத் தொடரும் அச் செய்தி

இம் முயற்சியின் படி யுதத்தில் கொல்லப் பட்ட புலிகளையும் மக்களையும் புலிகளே கொன்றார்கள் என மக்கள் கூற வேண்டும் என கோரப்பட்டு இருப்பதாகவும், அவ்வாறு சொல்லும் பட்சத்தில் நிவாரண உதவிகள் வழங்கப்படும் என அம்மக்களுக்குக் கூறப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கின்றது....

மேலும அச் செய்தி தெரிவித்திருப்ப தாவது......

13



# கிராமத்திற்கு 10 லட்சம் - வேலைக் கொந்தராத்தில் இழுபறி

கிராம அபிவிருத்திச் சங்கங்களால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்களை அரசு சார்ந்த கொந்தராத்துக்காரர்களே நடைமுறைப்படுத்த வேண்டும் என மூதூர் பிரதேச அபிவிருத்திக் கூட்டத்தில் முன்மொழியப் பட்டுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சால் தமிழ்க் கிராமங்களுக்கு வழங்கப்பட்டுள்ள கிராமத்திற்கு ஒரு மில்லியன் ரூபா அபிவிருத்தி நிதியினைக் கொண்டு மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தித் திட்டங்களை தங்களிடம் கையளிக்க வேண்டும் என அரசு சார்ந்த

**“வளைந்துகொடுக்காத கிராம அபிவிருத்திச் சங்கங்களின் வேலைகளைப் பறியுங்கள்”**

உள்ளூர் அரசியல்வாதிகள் கடும் நெருக்குதல்களை கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு வழங்குவதாக மாகாணசபை உறுப்பினர் திரு.நாகேஸ்வரன் மலைமுரசிற்குத் தெரிவித்தார்.

அச்சத்தின் காரணமாகவும், கையூட்டைப் பெற்றுக்கொண்டும் சில அபிவிருத்திச் சங்கங்கள் வேலைகளை மூதூர் பிரதேசசபையைச் சேர்ந்தவர்களுக்கு விட்டுக்கொடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இதேவேளை வளைந்துகொடுக்காத கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு எதிராக நடவடிக்கைகளை 13

# வளாக மாணவர்களின் போராட்டம் அர்த்தமற்றது



## திருகோணமலை அறிவியலாளர்கள் தெரிவிப்பு

(கதன்)



திருகோணமலை வளாக மாணவர்கள் மேற்கொண்டுவரும் கல்விப் பகிஸ்கரிப்பானது அர்த்தமற்றது என திருமலை மாவட்ட அறிவியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

வாளாக முதல்வராக இருந்த வைத்தியர். வர்ணகுலேந்திரன் தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ள நிலையில் அவருக்கு எதிரான விசாரணைகளுக்கு அவர் முகம்கொடுப்பதைத் தவிர்ப்பதற்காகவா மாணவர்கள் போராட்டத்தை முன்னெடுக்கின்றார்கள் என அவர்கள் கேள்வி எழுப்பி யுள்ளனர்.

விசாரணைகளின் பின்னர் குற்றமற்றவராயின் அவர் பணிக்குத் திரும்பப் போகும் நிலையில் மாணவர்கள் ஏன்? தமது கல்வி நடவடிக்கைகளை இடைநிறுத்தி இவ் அர்த்தமற்ற முயற்சியில் ஈடுபட்டுள்ளனர் என்பதைக் கேள்விக்குள்ளாக்கியுள்ள...... 13



அ-அமிர்

# “அமைச்சர் அதாவுல்லாவுக்கு அருகதை எவையும் இல்லை”

(தவி)

வடக்கு கிழக்கைப்பற்றிச் பேசுவதற்கு அமைச்சர் அதாவுல்லாவிற்கு என்ன அருகதையுண்டு என கல்முனை நகரசபை எதிர்கட்சித் தலைவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின அ. அமிர்தலிங்கம் கேள்வி எழுப்பியுள்ளார்.

அண்மையில் அதாவுல்லா கிழக்கு மாகாணத்தை வடக்கு மாகாணத்தில் இருந்து பிரித்தெடுப்பதற்கு தான் மிகவும் கஸ்டப்பட்டதாகவும் அதன் மூலம் தற்போது முஸ்லிம்களினதும், தமிழர்களினதும் உறவு கட்டி எழுப்பப்பட்டிருப்பதாகவும் ஊடகங்களில் செய்தி வெளியிட்டிருந்தார்.

இவ்விடயம் தொடர்பாக கல்முனை மாநகரசபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எதிர்க்கட்சித் தலைவர் அ.அமிர்தலிங்கம் அறிக்கையொன்றினை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் அமைச்சர் அதாவுல்லா மிகவும் ஆழமாக சிந்தித்தா இவ்வாறான 13

# ஆண் நோயாளி பெண் நோயாளர் விடுதிக்குள் புகுந்து கொள்ளை

மூதூர் வைத்தியசாலையில் சுகவீனம் காரணமாக ஆண்கள் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த ஒருவர் பெண்கள் விடுதிக்குள் நுழைந்து திருட முற்பட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில் மூதூர் காவல்துறையால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் மூதூர் ஆலிம் சேனையைச் சேர்ந்த முஹம்மது சரீட் நப்ரீஸ் என பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் நேற்று இரவு 12.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கையில் ஏற்பட்ட காயம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தவரே இவ்வாறு திருட்டு குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

பெண்கள் பிரிவு விடுதிக்குள் நுழைந்து பெண் ஒருவரின் கழுத்தில் இருந்த சங்கிலியை அபகரிக்க முற்பட்ட வேளையில் அப் பெண் கூக்குரலிட்டுள்ளார். இதனையடுத்து அங்கிருந்த காவலாளி அங்கு சென்ற வேளையில் நடந்த 13

## குறும்படத் தயாரிப்பாளர்களுக்கான அழைப்பு

திருகோணமலை மாவட்டத்தில் குறும்படத் தயாரிப்பாளர்கள் சங்கமொன்றை உருவாக்கும் நோக்குடன் குறும்படத் தயாரிப்பாளர்கள் மற்றும் அத்துறையுடன் தொடர்புற்ற ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துரையாடல் ஒன்றுக்கு வருமாறு மலைமுரசு அழைத்துள்ளது.

இக்கலந்துரையாடல் எதிர்வரும் சனிக்கிழமை 9ம் திகதி மாலை 4 மணிக்கு 159 யு, கடல்முக வீதி திருகோணமலையிலுள்ள மலைமுரசின் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுக்கின்றனர். தொடர்பு - 077 153 6668

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org